படைப்பு

ஊற்று-4 | நதி-12 | ஏப்ரல்-2022 | திங்களிதழ்
ISSN : 2582-4015

தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com

'என் எழுத்தில் எங்கு சுயசாதிப் பெருமை இருக்கிறது..?'

படைப்பாளர் வேல ராமமூர்த்தியுடனான நேர்காணல்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி முடிவுகள்

நடுவர் - கவிப்பேரரசு வைரமுத்து

படைப்பு
தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-4 | நதி-12 | ஏப்ரல் 2022

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

ஆசிரியர் :
ஆசியாதாரா

நிர்வாகக் குழு :
சகா(சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

தலைமை நிருபர் :
வலங்கைமான் நூர்தீன்

நிருபர்கள் குழு :
முனைவர் கோ.நித்தியா
க.சோ.திருமாவளவன்
ஸ்டெல்லா தமிழரசி
கலிங்கப்பட்டி க.கருப்பசாமி

முதன்மை வடிவமைப்பாளர் :
கமல் காளிதாஸ்

வடிவமைப்பு :
ப.முகம்மது புலவர் மீரான்

ஓவியக் கலைஞர்கள் :
அழ.ரஜினிகாந்தன்
அன்பழகன்

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

உள்ளே...

- **தலையங்கம்** -பக். 04
- **'என் எழுத்தில் எங்கு சுயசாதிப் பெருமை இருக்கிறது..?'** - படைப்பாளர் வேலராமமூர்த்தியுடனான நேர்காணல் -பக். 05
- **கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி முடிவுகள்** -பக். 15
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை** - மு.முருகேஷ் -பக். 26
- **நம்மை நாமே காணும் தருணங்கள்** - கவிஜி -பக். 35
- **பச்சைய பாத்திரமும் நீல சேலையும்** - கோ.லீலா -பக். 39
- **கட்டைப்பையில் பத்திரமாகியுள்ள அம்மா** - கனகா பாலன் -பக். 42
- **தேநீர் சாலை** - கரிகாலன் -பக். 45
- **சாதியச் சமூகத்தின் கோர முகம்** - த.செல்வராஜ் -பக். 57
- **மனமாற்றங்களை நோக்கி..** - கலிங்கப்பட்டி க.கருப்பசாமி -பக். 59

சிறுகதைகள்

- லாட சன்னாசியின் டைரி
  - கண்மணிராசா -பக். 31
- வாரிசு
  - ஜவ்வாது முஸ்தபா -பக். 50

கவிதைகள்

- சாமி கிரிஷ் -பக். 16
- சுஜய் ரகு -பக். 17
- நிலாகண்ணன் -பக். 18
- கிறிஸ்டி நான்ஸி -பக். 19
- கோபி சேகுவேரா -பக். 20
- கவித்தாசபாபதி -பக். 21
- ஐ.தர்மசிங் -பக். 22
- குறிஞ்சிநாடன் -பக். 23
- அந்திகை -பக். 24
- ரத்னா வெங்கட் -பக். 25
- பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 19
  - ஜின்னா அஸ்மி -பக். 63

வணக்கம்.

படைப்பு 'தகவு' நாற்பத்தெட்டாம் இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

வாசித்து நேசித்து இணைந்த தகவின் நட்புள்ளங்களுக்குப் புத்தக தின வாழ்த்துக்கள்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் மனனம்வழி ஓலைச்சுவடிகள்வழி பரவிவந்த தமிழ் அச்சு இயந்திரம் வந்ததும் தன் சிறகுகளை விரித்துப் பறந்தது. இயற்றமிழில் உச்சநிலை கண்டது. கரையான்கள் தின்று எஞ்சிய தமிழை அச்சுப் புத்தகங்கள் காப்பாற்றின. நூற்றாண்டு கடந்ததும் அச்சுப் புத்தகங்கள் இணைய நூல்களாகியுள்ளன. இணையத்தின்வழி படைப்பு தகவு இதழ் ஆயிரக்கணக்கான வாசகர்களுடன் இணைந்து நடைபோடுகிறது.

கால மாற்றம் வாசிப்பு வழிகளிலும் மாற்றத்தைக் கொண்டுவந்திருக்கிறது. அச்சு நூல்களைப் படித்துக்கொண்டிருந்தால் கண் பழுதாகும் என்று சொன்னவர்கள் சென்ற தலைமுறையிலும் இருந்திருக்கின்றனர். இணைய வாசிப்புக்கும் ஏகப்பட்ட தடைகள் கூறப்படுகின்றன. எனினும் எளிதாய் இணையம்வழி அறிவு பெற வாய்ப்பிருக்கையில் அதனை இந்தத் தலைமுறை எப்படி புறந்தள்ளும்?

காலத்தின் மாறுதல்களை உடனடியாகத் தம்முள் ஏற்கின்றவரே ஆளுமைகளாக உருப்பெற முடியும். 1965இல் கிண்டி பொறியியல் கல்லூரி வளாகத்தில் அமைந்திருந்த அடிப்படைப் பொறியியல் ஆய்வு மையத்துக்கு ஐபிஎம் 1620 வகை கணினி வந்திறங்கியது. இவ்வகை கணினியில் தகவலைத் துளையிடப்பட்ட அட்டைகள் மூலம்தான் உள்ளீடு செய்யமுடியும். அறிவுஜீவிகள் பலருக்குமே கணினி அறிமுகமாகாத காலம் அது. வயதான நிலையில் பெரியார் அக்கணினியைக் காண விரும்பினார். படியேற முடியாத அவர், நாற்காலியில் அமரவைத்து மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். கணினி குறித்துப் பல விளக்கங்கள் அவருக்குச் சொல்லப்பட்டன. ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டார். தனது ஐயங்களையும் கேட்டுத் தெளிவுபடுத்திக்கொண்டார்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்றார் நன்னூலார். புதியன கண்டு போற்றியதால்தான் பெரியாரால் ஒரு இனத்தின் தலைவராக முடிந்தது. அந்தப் பேரைக் கொண்டே காலத்துக்கும் தமிழினம் சுயமரியாதை போற்றிவருகிறது.

வாசிப்பின்வழி என்றும் இணைந்திருப்போம் நண்பர்களே.

கவிக்கோ அப்துல்ரகுமான் நினைவாக நடத்தப்படுகின்ற 'கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி' என்னும் கவிதைப்போட்டியின் முடிவுகள் இவ்இதழில் வெளியாகியுள்ளன. ஆறாம் விரலாய் நீண்ட கவிஞர்களின் சிறகுகள் கவிதைகளாய் உருப்பெற்றுள்ளன. கவிப்பேரரசு வைரமுத்து பரிசுக்குரிய கவிதைகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

படைப்பாளர் வேலராமமூர்த்தியின் நேர்காணல் இவ்இதழில் வெளியாகியுள்ளது. இம்மாதத் தகவின் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், தொடர்கள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

ஆசிரியர். ■

வீரசோழன் க.சோ.திருமாவளவன்

‘என் எழுத்தில் எங்கு சுயசாதிப் பெருமை இருக்கிறது..?’

படைப்பாளர் வேல ராமமூர்த்தியுடனான நேர்காணல்

சமகாலத்தின் குறிப்பிடத்தக்க படைப்பாளராக விளங்குபவர் வேல ராமமூர்த்தி. தன் சமூகம் குறித்த உக்கிரமான படைப்புகளைப் படைத்தவர். ஒரு இனக்குழுவின் வரலாற்றை எழுதுவதற்குச் சமானமாகத் தன் இலக்கியங்களை உருவாக்கியுள்ளவர். இயற்றமிழுக்கான பெரும் பங்களிப்புடன் திரைப்படக் கலைஞராகவும் சிறந்து விளங்குகிறார். மண் மணக்கும் படைப்பாளர் வேல ராமமூர்த்தியுடனான ஒரு நேர்காணல்..

உங்கள் கிராமத்து நூலகம் பற்றியும் ஆரம்ப கால வாசிப்புப் பழக்கம் பற்றியும் பகிருங்கள்..

1960ஆம் ஆண்டு பள்ளியில் படித்துக்கொண்டிருந்தேன். அப்போது இந்தியாவைக் காங்கிரஸ் ஆண்டுகொண்டிருந்தது. அந்த நேரத்தில் பஞ்சாயத்து உள்ள கிராமங்களில் அரசு கிளை நூலகம் இயங்கிக்கொண்டிருந்தது.

நான் பிறந்த பெருநாழியிலும் ஒரு நூலகம் இருந்தது. எல்லோரையும் விட எனக்கு அது பெரிதும் உதவியாக இருந்தது. பெருநாழி பஜார் மாடியில் இருந்த நூலகம் என்னை உருவாக்கியதோடு மட்டுமல்லாது, எனக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தது. அந்த நூலகத்தை நான் புண்ணிய ஸ்தலமாகத்தான் நினைக்கிறேன்.

ஆறாம் வகுப்பு, ஏழாம் வகுப்பு படிக்கின்ற அந்தக் காலத்தில் இலக்கியம் படிக்கப் போகிறோம் என்ற எண்ணம் இல்லை. நூலகத்திற்கு உள்ளே போய்விட்டால் குளுமையாக இருக்கும். நூலகத்திற்கு உள்ளே வந்துவிட்டால் பேசக்கூடாது. அமைதியாக இருக்க வேண்டும். ஒரு ரிஜிஸ்டர் நோட்டில் பேனாவை நூலில் கட்டி வைத்து இருப்பார்கள். அந்த ரிஜிஸ்டர் நோட்டில் கையெழுத்து போட்டுவிட்டு உள்ளே போக வேண்டும். பெரிய மேஜை மீது அன்றைய தினசரி நாளிதழ்கள் எல்லாம் இருக்கும். செய்தித்தாள் படிக்கிறவர்கள் செய்தித்தாளைப் படித்துக்கொண்டு இருப்பார்கள். படம் பார்க்க வர்ற கூட்டம் படம் பார்த்துக்கொண்டு இருக்கும். என் பால்யகாலத்துச் சிறுவர்கள் துப்பறியும் நாவல்களையும், தினசரியில் வருகிற கன்னித்தீவு தொடர்கதைகளையும் படித்துக்கொண்டிருந்த காலக்கட்டம் அது.

என்னை எது உந்தித் தள்ளியது என்றே தெரியவில்லை. நான் அப்போதே ஜெயகாந்தன் கதைகளைப் படிக்க ஆரம்பித்து இருந்தேன். எழுத்தாளர் ஜெயகாந்தன் கொடி கட்டிப் பறந்த காலம் அது. நல்ல நீரும், பலமான உரமும் நிறைந்த நாற்றங்காலில் ஒரு விதை விழுந்தால் வேர் பிடித்துப் போவதைப்போல ஜெயகாந்தன் கதைகளைப் படித்தவனின் வாசிப்பு எல்லை மெல்ல மெல்ல ஆண்டன் செக்காவ், புஷ்கின், கார்க்கி, தகழியின் செம்மீன், கேசவுவின் அண்டைவீட்டார் என இப்படி விரிந்தது. எல்லா மொழிபெயர்ப்பு நூல்களும், ரஷ்ய இலக்கியங்களும், மலையாள இலக்கியங்களும் அந்தக் குட்டி கிராமத்து நூலகத்தில் இருந்ததுதான் பெரும் ஆச்சர்யமாக இருந்தது.

எட்டாம் வகுப்பு மற்றும் ஒன்பதாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த காலத்தில் ஜார்ஜ் புலிட்சர் எழுதிய மார்க்சிய மெய்ஞானம் படித்தேன். மார்க்சிய மெய்ஞானம் தத்துவத்திற்கே அடிப்படையான ஒரு நூல். அப்படி எனது வாசிப்பு தொடர்ந்து போய்க்கொண்டே இருந்தது.

நான் ஒன்பது, பத்து படித்துக்கொண்டிருந்த

காலத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தீவிரமாக இருந்தது. திராவிடக் கட்சிகள் பெரும் அலையோடு வந்த காலம் அது. எங்களுக்கு சுந்தரராஜன், சின்னு என்று தமிழ் வாத்தியார்கள் இருந்தார்கள். எனக்குள் இன்றைக்கும் கலை சார்ந்த ஆர்வம் இருக்கக் காரணம் சின்னு வாத்தியார்தான். அவர் திருமணமே முடிக்காமல் இருந்தவர். வாசிப்பிற்கும், இலக்கியத் தளத்திற்கும் என்னைக் கொண்டு வந்து நிறுத்தியது எங்கள் பெருநாழி கிராமத்து ஊரில் இருந்த நூலகம்தான்.

1963ஆம் ஆண்டிலே ரஷ்ய இலக்கியங்களையும், மலையாள இலக்கியங்களையும் வாசித்த அந்த இளமைப்பருவம் உங்களது எழுத்திற்குப் பெரும் விதையாக இருந்ததா?

ஆமாம். அப்போது நான் எழுத ஆரம்பிக்கவில்லை. வாசித்துக்கொண்டே இருந்தேன். பன்னிரெண்டு வயதில் ஒருபுறம் வாசிப்பு மறுபுறம் பள்ளிக்குச் செல்வது எனக் காலம் ஓடிக்கொண்டே இருந்தது. மாலை நேரம் வந்தாலே ஊரின் முனையில் உள்ள திண்ணையில் பெரியவர்கள் எல்லோரும் ஒன்றாய்க் கூடுவார்கள்.

சண்முகவேல் பிள்ளை என்று ஒரு புலவர் இருந்தார். அவர் மகாபாரதத்தையும், இராமாயணத்தையும் பாட்டாய்ப் பாடிக் கதைகளைச் சொல்லி அசத்துவார். அவர் சொல்லச் சொல்ல ஊரில் உள்ள அத்தனை மனிதர்களும் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். அவர்களோடு நானும் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருப்பேன்.

பன்னிரெண்டு பதிமூன்று வயதில் மார்க்சிய மெய்ஞானமும், ரஷ்ய இலக்கியங்களும், உலக இலக்கியங்களும், மலையாள இலக்கியங்களும் எனக்குள் நுழைந்த காரணத்தால் அவர்களிடம் கேள்வி கேட்பேன்.

என் கேள்விகளுக்கு அவர்களிடம் பதில் இருக்காது. ஒரு வகையில் அகராதி பிடித்த பையனாக இருக்கானே என்ற நினைப்பு உள்ளே இருந்து இருக்கலாம். ஆனால் இவனிடம் ஏதோ ஒன்று இருக்கிறது.. விவரமான பையனாக இருக்கிறான் என்று அவர்கள் என்னைத் தட்டிக்கொடுத்தார்கள்.

பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு (எஸ்எஸ்எல்சி) தமிழ்ப் பாடத்தில் நான்தான் முதல் மதிப்பெண் எடுத்தேன். பின் கல்லூரி சேர்ந்தேன். காரண காரியமே இல்லாமல் விளையாட்டாய்ச் சென்னை வந்தவன் ராணுவத்தில் சேர்ந்துவிட்டேன். ஆனால் அந்த நேரத்தில் குமுதம் வாரப் பத்திரிக்கையில் கண்ணதாசன் வாரம் வாரம் கவிதை எழுதுவார். அதே பத்திரிக்கையில் கலைஞரின் கேள்வி பதில் வெளியாகும். வாசகர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்வார். அதே குமுதத்தில் வாரம் வாரம் ஜெயகாந்தன் சுதந்திரச் சிந்தனைகள் எனும் தலைப்பில் கட்டுரை எழுதிக்கொண்டு இருந்தார். இப்படி மேதைகள் எழுதிக்கொண்டு இருந்ததையெல்லாம் வாசித்தேன்.

திராவிட இயக்கம் 1965 - 66ஆம் ஆண்டு அனலாய் வந்துகொண்டிருந்த காலகட்டம். அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் அவர்களின் பேச்சுக்கள் மாணவர்களைப் பெரிதும் ஈர்த்தன. அப்பேச்சுக்கள் தமிழ் மீது பெரும் காதலை உருவாக்கின. இது எனக்குள் இருந்து உள்ளே அனலாய் வேலை செய்யத் துவங்கியது.

வட நாட்டில் எல்லோரும் வட இந்தியர்களாகவும் பல்வேறு மாநிலத்தவராகவும் இருக்கையில் நான் ஒருவன் மட்டும் தமிழ்க்காரனாக இருக்கிறேன். அவ்வாறு இருக்கிறபோது

தமிழ் மீது இயல்பிலே பாசம் வந்துவிடுகிறது. ஆக்ரா, ஜபல்பூர் போன்ற இடங்களில் தமிழ் பேசும் யாரையாவது கண்டறிந்துவிட்டால் நீங்கள் தமிழா என்று விசாரிப்போம். மொழி மேல் மயக்கம் இருந்த காலம் அது. எனக்கும் அந்த மாதிரி சூழல் வாய்த்தது.

சிறு வயதிலே ராணுவத்திற்குச் சென்றதால் மொழி மேல் பெரும் பற்று வந்தது. ராணுவத்தில் இருந்த ஐந்து வருடம் எல்லா எழுத்துக்களையும் நான் வாசிக்கிறேன். இராணுவத்தில் இருந்து வந்த பின் 1974இல் முதன்முதலாகச் செம்மலர் பத்திரிக்கைக்குச் சிறுகதை எழுதுகிறேன். அதற்கு முன் பருவக் கோளாறின் காரணமாக முதலில் காதல் கவிதைதான் எழுதினேன். 1974இல் செம்மலரில் மார்க்சியப் பத்திரிக்கையில் எனது முதல் சிறுகதை வந்தது.

உங்களுடைய கதைகளில் வரக்கூடிய கதாபாத்திரங்கள் அனைவரும் உங்கள் நிலத்தின் கதைமாந்தர்களாக இருக்கிறார்கள். அவர்கள் நேரிடையாக உங்களுக்குப் பரிச்சயமானவர்களா? புனைவாக நீங்கள் உருவாக்கியதா?

என்னுடைய கதைகள் மற்றும் நாவல்கள்.. முக்கியமாக குற்றப்பரம்பரை, பட்டத்து யானை மற்றும் எனது பெரும்பாலான சிறுகதைகள்.. அவற்றில் வருபவர்கள் பெரும்பாலும் நான் பிறக்கும் முன் எனது நிலத்தில் வாழ்ந்த கதாபாத்திரங்கள்.

நான் சிறு வயதில் கார்மேக ஆசாரி என்பவருடன் கூடவே இருந்தேன். அப்போது அவருக்கு 70 வயது இருக்கும். எனக்கு வெறும் 14 வயது. நவகாளி பிரச்சினை, சுதந்திரமடைந்தபோது நடந்த இந்து - முஸ்லீம் கலாட்டா இந்த மாதிரியான விசயங்களை ஊர் மொழியில் அவர் சொல்வார். ஊரில் நடந்த சம்பவம் மற்றும் வாழ்ந்த பழைய மனிதர்களை, அவர் நேரில் கண்ட விசயங்களைக் கூறுவார்.

பதினான்கு வயதில் என் அடி மன ஆழத்தில் பதிந்த கேரக்டர்கள்தான் பின்னாளில் எழுத வந்தபோது என் எழுத்தின் விளைச்சலாக வருகிறார்கள். சமகாலத்துச் சிறுகதைகள் குறைவாகத்தான் எழுதி இருப்பேன். நான் பிறப்பதற்கு முன், சிறு வயதில் நான் பார்த்தது, முந்தைய வாழ்ந்த வாழ்க்கை போன்றவற்றை நான் செய்தியாக உள்வாங்கிக்கொண்டு சமூகத்திற்குத் தேவையான படைப்பாக நான் ஆக்கினேன்.

என் கதை மாந்தர்கள் உண்மையில் அப்படி இருந்தார்களா? என்பது தெரியாது. எனக்கென்று ஒரு நியாயம் இருக்கிறது, எனக்கென்று ஒரு கடமை இருக்கிறது. அவர்களை அதற்கான கதைமாந்தர்களாக உருவாக்கினேன். பெரும்பாலான கதாபாத்திரங்கள் அவ்வாறு உருவானதுதான்.

இருளப்பசாமியும் 21 கிடாயும் கதை எழுதும்போது ஏற்பட்ட அனுபவத்தைப் பகிருங்கள். அந்தக் கதை நடந்த நிகழ்வா? கேள்விப்பட்டதா? உங்கள் குடும்பத்தோடு தொடர்புடையதா?



ஏதோ ஒன்று நடந்திருப்பதிலிருந்துதான் எந்தச் சிறுகதையும் எந்த நாவலும் எந்தக் கலைப்படைப்பும் உருவாகும். அதைப் பரந்துபட்ட எழுத்தாக்குவதுதான் ஒரு எழுத்தாளனின் மாபெரும் சவாலே.

இந்தக் கதை எனக்குள் வரக் காரணமாக இருந்த நிகழ்வைக் கூறுகிறேன். எனக்கு நேராக உள்ள இளைய தம்பி சேது என்று பெயர். அவன் படித்த எல்லாப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிப்பில் எப்போதும் முதன்மையானவனாகவே இருந்தான். படிப்போடு அவன் எல்லா இலக்கியங்களையும் வாசித்துக்கொண்டிருந்தான். நான் உயிருக்குயிராக வளர்த்த தம்பி அவன்.

அவனுக்கு ஒரே நேரத்தில் பல இடங்களில் இருந்து வேலைக்காக ஆர்டர் வருகிறது. சப்-இன்ஸ்பெக்டர், ஸ்டேசன் மாஸ்டர் மற்றும் இண்டஸ்ட்ரியல் பைனான்சியல் கார்ப்பரேஷனில் மத்திய அரசு வேலை என. அப்போது நான் பரமக்குடியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். தற்செயலாக நான் பெருநாழி சென்றிருந்தேன். எனது தம்பிக்கு வேலை கிடைத்த விசயத்தைச் சொந்தக்காரர்களிடம் சொன்னேன். அவர்கள் பெட்டி நிறைய தேங்காய் வாங்கினார்கள். ஊரில் உள்ள கோவில்கள் மற்றும் காட்டில் உள்ள கோவில்களில் சிதறு தேங்காய் அடிக்கிறார்கள். இதில் என்ன விசயமென்றால், அந்தப் பகுதியில் முதல் போலீஸ் அதிகாரி என் தம்பிதான்.

என் தம்பி ஸ்டேசன் மாஸ்டராகவோ வேறு வேலைக்கோ போயிருந்தால் என் மக்கள் இவ்வளவு கொண்டாடியிருப்பார்களா என்று தெரியாது. அவன் ஒரு காவல் அதிகாரியாக வந்ததுதான் அவர்கள் கொண்டாட்டமே. இந்த நிகழ்வு 1979இல் நடக்கிறது.

இந்த மக்கள் காக்கிச் சட்டையையும் கருப்புக் கோட்டையும் பார்த்தாலே பயப்படுவார்கள். இதை எனது பல கதைகளில் சொல்லியிருக்கிறேன்.

ஒருநாள் சென்னையில் சிட்டி பஸ்சில் ஜன்னலோரத்தில் அமர்ந்துகொண்டு பயணம் செய்துகொண்டிருக்கிறேன். அண்ணா சாலையில் டிஎம்எஸ் பகுதியைப் பஸ் கடந்து செல்கிறது. அன்றைக்குத் தேங்காய் உடைத்தோமே என்று தோன்றுகிறது. கதைக்கான பொறி தோன்றிவிட்டது. இந்தக் கதை 1994இல் வருகிறது.

அவ்வளவு மக்களும் அவர்கள் வீட்டுப்பிள்ளை அதிகாரியாக ஆனதாக நினைத்துத் தேங்காய் உடைத்தார்கள். இச்சமூகம் எப்படிப்பட்ட சமூகம்..

அக்கதையில் உடுப்பு போட்டுப் பார்க்கணும் மருமகனே என்றதும் திண்ணையை விட்டுக் குதிப்பார்கள் என்றதும்தான் எழுத்து. எங்களது வீட்டில் நடந்த விசயத்தைத்தான் இப்படி கதையாக்கினேன்.

முற்போக்கு இலக்கிய முகாம்களில் இருந்துவரும் படைப்புகளில் பிரச்சார நெடி இருக்கும் என்று கூறப்படுகிறது. ஆனால்

உங்கள் கதைகளில் பிரச்சார நெடித்தன்மை இருப்பது போல் தெரிவது இல்லையே..

ஆமாம்.

நானும் மேலாண்மை பொன்னுசாமியும் சமகால எழுத்தாளர்கள். எங்கள் இருவரின் படைப்புகளும் 1974இல் செம்மலரில் முதன்முதலாக வெளிவந்தது. என்னோடு எழுதத்துவங்கி, எனக்குப் பின்னால் எழுதவந்து கந்தர்வன், தமிழ்ச்செல்வன், கோணங்கி, ராமகிருஷ்ணன் எனப் பலரும் புகழடைந்துள்ளார்கள்.

எனக்குள் விழுந்த விதை எழுத்தாக முளைத்தது. அதனால் பிரச்சார நெடி இருக்காது. திட்டமிட்டு ஒதுக்கவில்லை. எனக்கு வாய்த்த மொழி, வசப்பட்ட மொழி தன்னியல்பாய் எனக்கு வந்தது. தனியாகப் பயிற்சி எடுக்கவில்லை. கிராமத்திலிருந்து வந்தவன் நான். பெரிய திட்டமோ வழிகாட்டலோ எதுவுமே இல்லாமல் வந்தவன். சுயம்புவாக வந்த ஆள்.

மாப்பசான், ஆண்டன் செகாவ், புஷ்கின், தகழி என்ற மேதைகளின் எந்தப் படைப்புகளிலும் பிரச்சாரம் இருக்காது. கதையை வைத்துவிட்டு விலகிவருவது, கொடிபிடிக்கிற வேலை நமக்குக் கிடையாது. அதனாலேயே பிற எழுத்துக்களில் இருந்து என் எழுத்து தனித்து நின்றது. நான் மிகக் குறைவாக எழுதிய ஆள். என்னிடம் சாமானியமாக எழுத்தை வாங்கிவிட முடியாது.

நிறைகுறை விமர்சனம் எதுவாக இருந்தாலும் எழுத்தாளன் சுயசாதிப் பெருமிதம் கொள்வதும் தனது படைப்புக்குள் கொண்டுவருவதும் அவசியம்தானா... என்ற கேள்வி தொடர்ந்து கேட்கப்பட்டுவருகிறதே..

என் எழுத்துக்கு நேராக எனக்கு நேராக விமர்சனம் வைப்பவர்கள் தன்னைப் பற்றியும் தான் சார்ந்த சமூகம் பற்றியும் தன்னைச் சுற்றியிருக்கும் சமூகம் பற்றியும் எழுத இயலாத ஆட்கள்.

என் சுயசாதிப் பெருமையாக, `ஆட்டைக் களவாண்டான்` என்றே எழுதினேன். என் எழுத்தில் எங்கு சுயசாதிப் பெருமை இருக்கிறது?

எங்கேயோ போயிருக்க வேண்டிய இலக்கியம்.. இது பாரதி வளர்த்த இலக்கியம், புதுமைப்பித்தன் வளர்த்த இலக்கியம். ஆனால் அதே இடத்தில்தான் நின்றுகொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் எழுத்தாளனைப் பார்த்துக் கேட்கக்கூடிய முதல் கேள்வியே அவர் எந்தச் சாதிக்காரன் என்பதுதான்.

தமிழகத்தில் 60-70 ஆண்டுகளாக விதைக்கப்பட்ட விதை இந்தச் சாதி. இதை நான் பொருட்படுத்தவில்லை. நான் எல்லா நேர்காணலிலும் சொல்லியிருக்கிறேன். மைலாப்பூர் வாழ்க்கையை, திருவல்லிக்கேணி வாழ்க்கையை என்னால் எழுத முடியாது. நாஞ்சில் நாடன் நாஞ்சில் நாட்டு வெள்ளாளர் வாழ்வை அற்புதமாகச் சொல்லி இருக்கிறார்.



அகமும் புறமும் சொல்ல வேண்டும். நல்லது கெட்டது என அனைத்தையும் சொல்ல வேண்டும். அந்த நியாயம் இல்லாமல் பேனாவைப் பிடிக்கக்கூடாது. அப்படி எழுதினால் அந்த எழுத்து ஜொலிக்காது. எழுத்தாளனுக்கு இந்த அடிப்படை நியாயம் இருக்க வேண்டும். நூற்றுக்கு நூறு ஒப்புக்கொடுக்க வேண்டும். ஞானியின் தவநிலைதான் எழுத்து. நான்கு வரி எழுத இயலாதவர்கள் இந்த விமர்சனத்துக்கு வந்துவிடுவார்கள்.

இன்று சமூகத்துக்குள் இருக்கும் எல்லாச் சிக்கல்களுக்கும் சாதியும் மதமும் வேராக இருக்கின்றன. சாதியத்தின் முகங்களை இலக்கியத்தில் பதித்து, அதன் மூலம் சுயசாதி மக்களால் வெறுக்கப்பட்டவர் நீங்கள். அந்த அனுபவத்தைப் பகிருங்கள்..

அது மிகப்பெரிய அனுபவம். என்னுடைய எழுத்து போல் சுயசாதி விமர்சனமாக யாரும் எழுதி இருக்கமாட்டார்கள். அதை நான் கம்பீரமாகச் சொல்வேன். நான் எழுதியது போல் வேறு யாராவது எழுதி இருந்தால், இரண்டாவது படைப்பு வருகையில் அவரை உயிருடன் வைத்திருக்க மாட்டார்கள்.

எழுதி எழுதி என்னுடைய இடத்தை நிலைநிறுத்தினேன். உண்மையைத்தானே அவர் எழுதுகிறார் என்ற எண்ணம் மக்களிடம் இருந்தது. அதனால் அவர்கள் கண்டுகொள்ளவில்லை. ஆனால் எதிர்ப்பும் நிறைய இருந்தது. எனக்கான எழுத்து இன்று எனக்கான இடத்தில் நிற்பதற்குக் காரணமாக இருந்தது எனது தைரியந்தான். இன்றைக்கும் அந்தத் தைரியந்தான் எனக்கும் என் எழுத்திற்கும் அழகைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறது.

உங்கள் சிறுகதைகளுக்கு நீங்கள் யாரை முன்னோடியாக நினைக்கின்றீர்கள்.. ஏன்?

எனது சிறுகதைகளுக்கு நான் யாரையும் முன்னோடியாக நினைக்கவில்லை. எல்லா

எழுத்தாளர்களையும் வாசித்திருக்கிறேன். ஆயிரம் பக்கங்கள், பத்தாயிரம் பக்கங்கள் எனப் புத்தகம் எழுதி இருந்தால் அதை வாசிப்பது பிடிக்கவில்லை.

எனக்குப் புள்ளி வைத்தவர் எழுத்தாளர் ஜெயகாந்தன்தான். அடித்தட்டு மக்களின் வாழ்க்கையைத் தனது எழுத்தில் வைத்தார். அவர் எழுத்தில் மயங்கிப்போய், கிறங்கிப்போய் இருந்த காலகட்டங்களில் சினிமாவுக்குப் போன சித்தாளு, அக்னிப் பிரவேசம் என அள்ளி அள்ளி எழுத்துக்களைக் கொடுத்தார். கீழ்த்தட்டு மக்களைப் பற்றி அவர் எழுதிய எழுத்து, பின் மொழிபெயர்ப்பு இலக்கியங்களை வாசித்தது எனது எழுத்துக்குத் தளம் போட்டுக் கொடுத்தது.

உங்களுக்கு சிறுகதை எழுத வேண்டுமென்று எப்போது தோன்றியது.. ஏன்?

1969ஆம் ஆண்டு ராணுவத்தில் சேர்ந்தேன். பின் 1974ஆம் ஆண்டு ராணுவத்தை விட்டு வந்துவிட்டேன். அப்போது ஊரில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. மக்களுக்கு மக்காச்சோளத்தைத்தான் ரேசன் கடையில் போட்டார்கள். அதைத்தான் மாவாக்கி மூன்று வேளையும் தோசை சுட்டுச் சாப்பிட்டார்கள்.

அந்த நேரத்தில் எங்களது ஊர் பெருநாழி கிராமத்துக் கண்மாய்க்குள் பெரிய பெரிய கருவேல மரங்கள் நின்றுகொண்டு இருந்தன. விவசாய விளைநிலங்களுக்கு, சாலையோர மரங்களுக்கு, கண்மாய்க்குள் இருக்கும் மரங்களுக்கு, ஏழை எளியோருக்கு எல்லோருக்கும் காவல்காரர் எங்கள் ஐயாதான். எங்கள் குடும்பத்திற்குப் பெயரே காவல்காரக் குடும்பம் என்று பெயர். மரத்தைப் பட்டப்பகலில் ரம்பம் போட்டு அறுத்து லாரியில் லோடு லோடாக மதுரைக்கு வண்டியில் ஏற்றுகிறார்கள். அந்த இடத்தில் வருவாய்த்துறையின் அத்தனை அதிகாரிகளும் இருக்கிறார்கள். ஆனால் கேள்வி கேட்காமலே போய்க்கொண்டு இருந்தது.

ஒருபக்கம் பஞ்சத்தால் மக்கள் அவதிப்பட்டு மக்காச்சோள மாவைச் சாப்பிட்டுக்கொண்டிருக்க மறுபக்கம் பார்த்தால் அரசாங்கச் சொத்தைச் சூறையாடிக்கொண்டு இருக்கிறார்கள். இது என் மனதிற்குள் உறுத்திக்கொண்டே இருந்தது. என்னைச் சுயசாதிப் பெருமை பேசுபவன் என்று சொல்கிறார்கள். ஆனால் நான் சுயசாதியையும் எனது குடும்பத்தையும் உறவுகளையும் எதிர்த்து எழுதியவன். பெரும்பாலான சிறுகதைகள் சலவைத் தொழிலாளி பற்றி எழுதி இருப்பேன். அவர்கள்தான் எனக்கு நண்பர்கள்.

நாட்டுக் கருவேல மரங்கள் கொள்ளையடிக்கப்பட்டது மனமெங்கும் உறுத்திக்கொண்டே இருந்தது. எப்படி கதை எழுதுவது, எப்படி பத்திரிக்கைக்கு எழுதுவது என்று எதுவும் தெரியாது. கோடு போட்ட பேப்பரில் செம்மலருக்கு எழுதி அனுப்பினேன்.

ஊர் பொது மரத்தை வளர்த்தவன் லாரி லாரியாக மரத்தை ஏற்றிக்கொண்டு போகிறான். ஊர் அழுக்கை வெள்ளாவி செய்யும்



சலவைத் தொழிலாளி மாடசாமி என்பவர் வெள்ளாவி வைக்க அடுப்பில் கரிக்கட்டை ஏதும் கிடைக்காமல் பசி கிறக்கத்தோடு கண்மாய்க்குள் வந்து கருவேல முள்ளெடுத்து வெள்ளாவி வைக்கிறார். மதுரைக்கு லோடு ஏற்றிவிட்ட பெரிய ஆள் லாரிக்கு விவரம் சொல்லிவிட்டு வீட்டுக்குள் வருகையில் ஓரத்துல கொஞ்சம் முள்ளைக் காணோம். தனது மனைவியிடம் இங்கிருந்த முள்ளைக் காணோமே எனக் கேட்க, அவரின் மனைவி இங்கு மாடசாமி இருந்தார் எனச் சொல்கிறாள். உடனே பஞ்சாயத்து கூடுகிறது. மாடசாமி ஏன் முள்ளெடுத்தாய் எனக் கேட்டுக்கொண்டே தனது செருப்பைக் கொண்டு சலவைத் தொழிலாளி மாடசாமியை அடிக்கிறார். மாடசாமியோ அதை விட ரெண்டு மடங்கு முள் வைத்துவிடுகிறேன் ஐயா எனக் கெஞ்சுகிறார். அபராதத்தைக் கட்டு என இருநூறு ரூபாய் அபராதம் விதிக்கிறார்கள்.

கஞ்சிக்கே வழியில்லை.. இருநூறு ரூபாய் எப்படி கட்ட? ஆனால் மாடசாமியிடம் கழுதை ஒன்று இருந்தது. கழுதை மேல் பொதியை ஏற்றிக் ஊர்க் கண்மாயில் துவைத்து எடுத்து வர வேண்டும். சந்தையில் போய்க் கழுதையை விற்று அதில் கிடைத்த தொகையை அபராதத்திற்குக் கட்டுகிறார்கள். இதுதான் கதை. இதுதான் என் முதல் கதையே.

நீங்கள் எழுதி அச்சில் வந்த முதல் சிறுகதையைக் கண்டவுடன் உங்கள் மனநிலை என்னவாக இருந்தது..

செம்மலரில் 1974இல் நவம்பர் மாதம் கழுதை விற்ற பணம் எனது முதல் சிறுகதை வெளிவந்தது. பத்திரிக்கையில் வந்ததும் நான் யாரிடமும் கொண்டுபோய்க் காட்டவில்லை. நான் கதை எழுதுவதே ரொம்ப காலத்திற்கு யாருக்கும் தெரியாது. எழுத்து வட்டத்தில் வளர்ந்து வந்துகொண்டே இருந்தேன். என்னைச் சுற்றி இருப்பவர்களிடம் அதைப் பற்றிச் சொல்லிக்கொள்வதில்லை. எனது மனநிலை ரொம்ப உற்சாகமாகவும், சந்தோசமாகவும் இருந்தது. அடிமனதில் இதைவிட நல்ல கதை எழுதணுமே.. வேறு எப்படி எழுதலாம் என்ற சிந்தனையே ஓடிக்கொண்டிருந்தது.

ஒரு வாசகனாக உங்களை மிகப் பாதித்த எழுத்தாளர் யார்? அவரிடமிருந்து உங்கள் எழுத்துக்கு நீங்கள் ஏதேனும் பெற்றிருக்கிறீர்களா? ஆம் எனில், அது என்ன?

ஒரு வாசகனாக ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி, கோணங்கி (மதினிமார்கள் கதை) தமிழ்ச்செல்வன், இப்படி பாதித்த எழுத்தாளர்கள் அன்று.

இன்று என்னை மிகவும் பாதித்த எழுத்தாளர் ஈழ எழுத்தாளர் அ.முத்துலிங்கம். இவரின் சிறுகதைகள் என்னை வெகுவாகப் பாதிக்கின்றன. அடுத்ததாக எழுத்தாளர் அகரமுதல்வனின் எழுத்து என்னை மிகவும் பாதித்தது. ஒரு காலத்தில் பிரபஞ்சன் எழுத்து என்னை ஈர்த்தது. அவர் எனது நண்பரும் கூட.

கவிதைகள் என்று எடுத்துக்கொண்டால் நரன், இளம்பிறை இவர்களின் கவிதைகள் எனக்கு மிகவும் பிடிக்கும்.

(அடுத்த இதழில் முடியும்.)

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி முடிவுகள்

தமிழின் தலைசிறந்த கவிஞரான கவிக்கோ அப்துல்ரகுமான் நினைவாக 'கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி' எனக் கவிதைப் போட்டியினைப் படைப்பு குழுமம் நடத்திவருகிறது. 2021இல் 'ஆறாம் விரல்' என்ற தலைப்பில் கவிதைப் போட்டி அறிவிக்கப்பட்டது. கவிஞர்கள் பலரும் படைப்பு இணையதளத்தில் கவிதைகளைப் பதிவேற்றம் செய்தனர். கவிப்பேரரசு வைரமுத்து நடுவராகப் பொறுப்பேற்றுச் சிறந்த கவிதைகளைத் தேர்ந்தெடுத்தார். பரிசு பெற்ற கவிதைகள் சான்றிதழுடன் இவ்விதழில் வெளியாகியுள்ளன.

பரிசு விவரம்:

மொத்தப் பரிசு	:	25000 ரூபாய்
முதல் பரிசு	:	10,000 ரூபாய்
இரண்டாம் பரிசு	:	5000 ரூபாய்
மூன்றாம் பரிசு	:	3000 ரூபாய்
சிறப்புப் பரிசு	:	7 நபர்கள் - 7000 ரூபாய் (இந்திய ரூபாய் மதிப்பில் தலா ஆயிரம் ரூபாய்)

ஆக மொத்தம், பரிசுத்தொகை 25000 ரூபாயிலிருந்து வெற்றி பெறும் 10 நபர்களுக்கு மேற்கண்டவாறு பரிசு பகிர்ந்து அளிக்கப்படுகிறது. இந்தாண்டு படைப்பு விழாவன்று பரிசுத்தொகையும் சான்றிதழும் நேரடியாக வழங்கப்படும்.

பரிசு பெற்ற கவிஞர்கள் :

முதல் பரிசு : கவிஞர் சாமி கிரிஷ்

இரண்டாம் பரிசு : கவிஞர் சுஜய் ரகு

மூன்றாம் பரிசு : கவிஞர் நிலாகண்ணன்

சிறப்புப் பரிசுகள் :

கவிஞர் கிறிஸ்டி நான்ஸி
கவிஞர் கோபி சேகுவேரா
கவிஞர் கவித்தாசபாபதி
கவிஞர் ஐ.தர்மசிங்
கவிஞர் குறிஞ்சிநாடன்
கவிஞர் அந்திகை
கவிஞர் ரத்னா வெங்கட்

படைப்பு

ஆறாம் விரல்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி
கவிதைத் தொடரில்
முதல் பரிசு பெற்ற
படைப்பாளி சாமி கிரிஷ்
அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2021
நாள்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

முதல் பரிசு

கவிஞர் சாமி கிரிஷ்

அடிக்கடி அருந்தும் தேநீர்
சமயங்களில் உருகி உருகி
பிரார்த்திக்கும் மெழுகுவர்த்தி
எழுதும் போதெல்லாம்
உடன்பிறப்பாகும் எழுதுகோல்
அவ்வப்போது
அநாதைத்தனம் தீர்க்கும் அலைபேசி
கை பிடித்து நடக்கும் குழந்தைக்கு
உலகம் காட்டும் அம்மா.. அப்பா
நடுங்கும் கைகளுக்கு நங்கூரமாகும்
நாசக்கார மதுப்பாட்டில்
மழை மறைக்கும் குடை
குழந்தைத்தனம் வழியும் குச்சி ஐஸ்
போராட்டங்களில்
உயர்த்திப் பிடிக்கும் கொடி
ஆட்டின் பசிதீர்க்க
நீட்டும் ஒற்றைப்புல்
பால்யத்தில் பதுங்கிப்பிடித்த
தட்டானும் பட்டாம்பூச்சியும்..
ஆகிவிடுகின்றன
அந்தந்த நேரத்து ஆறாம் விரலாய்

படைப்பு

ஆறாம் விரல்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி
கவிதைத் தொடரில்
இரண்டாம் பரிசு பெற்ற
படைப்பாளி சுஜய் ரகு
அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2021

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

இரண்டாம் பரிசு

கவிஞர் சுஜய் ரகு

விரல்களுக்கெனச் சேதியுண்டு
அதனதன் வாக்கில் ஐந்து சிகரங்கள்போல
கட்டை விரலுக்குள் ஒரு மலைக்காற்று
துறுதுறுக்கும் ஆட்காட்டி விரல்
எண்ணங்களில் சுடர்ந்தெழும்
சூரியனைச் சுட்டும்
நடுவிரல் நடுநிலைமை
சிகரங்களை இணைக்கும்
உறவைப் பிணைக்கும்
மோதிரவிரல் கனவின் சுட்டி
சொற்கள் அன்பை அணிந்துள்ளதுபோல
அதன் ஆபரணம் மினுங்கும்
விரல்களில் செல்லப்பிள்ளை
சுண்டுவிரல்
அப்பாக்களுக்கான பெண் பிள்ளை
பெண்மை வாய்ந்தது
மென்மை வாய்த்தது
உன்னிலிருந்து நீ விலகினால்
அது ஆறாம் விரல்
ஆறைக் கணித்தவர்கள் உண்டு
ஆறில் வாழ்ந்தவர்களுண்டு
ஊரே புலம்பெயர்ந்துவிட
எல்லை மரமெனத்
தனித்தவருண்டா..?
கடைசித் துளியும் காற்றில்
கலந்துவிட
நீரோடையெனக் கடந்து பயணித்தவருண்டா..?
ஞானம் மனத்திலும்
மனம் ஞானத்திலும்
சூல்கொண்டு மலர
வாழ்வை வாழ்ந்தவருண்டா...?
ஐவிரல்கள் வெறும்
கைவிரல்களா..?
அல்ல அல்ல...
ஐம்புலன்கள்
புலன்களை வென்ற இருப்பு ஆறாம் விரல்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

படைப்பு

ஆறாம் விரல்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி
கவிதைத் தொடரில்
மூன்றாம் பரிசு பெற்ற
படைப்பாளி நிலாகண்ணன்
அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2021
நாள்

மூன்றாம் பரிசு

கவிஞர் நிலாகண்ணன்

நீந்திக்கொண்டே முட்டையிடும் மீன் போல அந்தப் போர்விமானங்கள் என் நிலத்தில்
குண்டுகளை இடுகின்றன
நாங்கள் சிதறி ஓடுகிறோம்..
உடல் இவ்வளவு பெரிதாய் இருப்பது குறித்த துயரோடும்
மொழி நாவிலிருந்து விழுந்துவிடாத அச்சத்தோடும்
ஒவ்வொரு வெடிப்புக்கும் பூமி உயர அதிர்கிறது
குழந்தைகள் தூக்கி வீசப்படுகிறார்கள்
மீண்டும் மீண்டும் என் நிலத்திலிருந்து
■
எருமைமாடு ஈக்களை கூட்டிக்கொண்டு நடப்பதைப்போல
பீரங்கி வண்டியைச்சுற்றி ஆயுதமேந்திய ராணுவவீரர்கள்
ஊமையின் ரத்தத்திலிருந்து குரலை எழுப்புகிறார்கள்
எங்கள் பிள்ளைகள் இப்படி நடுங்குவதை இதற்கு முன்பாக தேவாலயத்தில் ஏற்றப்பட்டிருக்கும்
மெழுகுவர்த்திகளில்தான் கண்டிருக்கிறோம்
■
கற்பனை செய்யமுடியாத இருளின் அடர்த்திக்குச் சென்று வெடித்துச் சிதறும்படி என் கண்களைப்
புதைத்துவிட்டு வந்தேன்
சுதந்திரத்தின் பேரொளியை அவை கனவு காணட்டும்
தானாய் அமைதி திரும்பாது.
அமைதி,
பாய்ந்துகொண்டிருக்கும் தோட்டாவிற்குப் பின்னே இருக்கிறது
■
துண்டுகளாக்கப்பட்ட சிறுமி இரண்டு இடத்தில் புதைக்கப்படுகிறாள்.
அதனாலென்ன இவ்வுலகத்தின் மௌனம் இரண்டு மெழுகை ஏற்றும்.
இதைவிடப்
பெருந்துயரென்பது என்ன தெரியுமா.?
ஆறாம் விரல்களாக ஆயுதமேந்தி நிற்கும் ராணுவத்திற்கு முன்னால் குழந்தையின் அழுகைக்கு
மார்பைத் திருப்புவதுதான். ■

ஆறாம் விரல்
கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி
கவிதைத் தொடரில்
சிறப்பு பரிசு பெற்ற
படைப்பாளி கிறிஸ்டி நான்ஸி
அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்
09 - 11 - 2021

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

கவிஞர் கிறிஸ்டி நான்ஸி

தீர்ந்துபோகும் மளிகையை நியாபகமாய் எழுதிவைக்க..
அடுப்படியில் ஒன்று,
அவசரத்திற்கு ஆகுமென
அலமாரியில் தொலைபேசிக்கு அருகில் ஒன்று,
அத்தனை பேரின் பிறந்தநாளையும் கிறுக்கிவைக்க
காலண்டரில் ஒன்று,
பால், தயிர், காய் கணக்கு என எதோ ஒன்றைக் குறிக்க
மாடிப்படியில் ஒன்று,
இப்படி..
அம்மைக்கு எப்போதும் வேண்டும்
இன்னொரு விரலாய் பென்சில்..
பால்யமும், பதின்வயதும் முட்டும் தினத்தொன்றில்
விளையாட்டாய் எழுதிய காதல் கவிதை ஒன்றினால்
ஆறாம் வகுப்போடு கல்வியைக் களவு கொடுத்த அம்மை..
அதன்பின் சேர்த்துக்கொண்டதெல்லாம்
வீட்டைத் தாண்டி எதுவும் யோசிக்காத
பெண் சாயல் கொண்ட இந்தப் பென்சில்களைத்தான்..

படைப்பு

ஆறாம் விரல்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி
கவிதைத் தொடரில்
சிறப்பு பரிசு பெற்ற
படைப்பாளி கோபி சேகுவேரா
அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2021
நாள்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

கவிஞர் கோபி சேகுவேரா

இப்போதெல்லாம்
நேசத்தின் கேளிக்கைகள்
தனியாகக் காத்திருப்பது வழக்கமாகிவிட்டது
இப்போதெல்லாம்
நீந்திச் சேரவேண்டிய
மறுகரைகள் உடைந்துவிடுகிறது
இப்போதெல்லாம்
சொற்களின் குவியல்
அன்பு குறித்த பிரசங்கம்போல
கவனிக்கப்படாமல் அழிந்துவிடுகிறது
இப்போதெல்லாம்
நிரூபிக்க வேண்டிய காரணங்கள்
நிகழாமலே முடிந்துவிடுகிறது

உன் இருப்பின் இயல்பை
உன் பிரிவின் பெரும்பான்மையை
கறாராக எழுதப் பழகிவிட்டிருக்கிறேன்

மனச்சிக்கலைக் கையாளத் தெரியாத எனக்கு
மகிழ்ச்சியின் முகக்கவசம் பூசிக்கொள்கிறேன்
குறைந்தபட்சம் மனம் உடையும் இரவுகளில்
சாரமுள்ள இரண்டுவரி படித்துக்கொள்கிறேன்

நிறைவேறாத காதலை
முதல் காமத்தின் தீண்டலை
மறதியின் மறதி கொண்டு எழுதுகிறேன்
பொய்யின் சவுக்கடியை
துண்டிக்கப்பட்ட நறுமணங்களை
நினைவின் சௌகர்யம் கொண்டு
எழுதுகிறேன்

பற்றி எரியும் உன் குரலையும்
மூச்சுத்திணற முத்தமிடும்
உன் 'ம்' களையும்
என்னைப்பொறுத்தவரை
என் எல்லா முடிவும்
ஒரு நற்செய்தியாக
ஒரு நம்பிக்கையாக
முடிவற்று நீளும்படி உன் காதலால்
முளைத்துவிடுகிறது
என் கைகளில் ஆறாம் விரல்.

படைப்பு

ஆறாம் விரல்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி
கவிதைத் தொடரில்
சிறப்பு பரிசு பெற்ற
படைப்பாளி கவித்தாசபாபதி
அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2021

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

கவிஞர் கவித்தாசபாபதி

கட்டைவிரலும் சுட்டுவிரலும்
ஒட்ட வரும் சந்திப்பில்
முட்டுக் கொடுக்கும்
மூன்று விரல்களின் மேல்
நீளும் ஆறாம் விரல்

அது, இஸங்களை
மையென்றும் வண்ணமென்றும்
நெருப்பென்றும் தொடும்
எழுதுகோலாக இருக்கலாம்
தூரிகையாகவும் இருக்கலாம்
தீக்குச்சியாகவும் இருக்கலாம்

என்னுள் கவிச்சிலிர்ப்பு
உண்டாகும் கணங்களில்
ஆயிரம் வீணைகளை
மீட்டும் மனவிரல்கள்

நிறமில்லா நீர்மையின்
வண்ணம் காட்டும்
ஒளியின் மாய விரல்களே
வானவில்

ஆறாம் விரல் எழுதாத ஏழாம் அறிவை
இதயம் படிக்கிறது
அதை
இறைவன் என்றும் சொல்லலாம்
இல்லை என்றும் சொல்லலாம்!

படைப்பு

ஆறாம் விரல்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி
கவிதைத் தொடரில்
சிறப்பு பரிசு பெற்ற
படைப்பாளி ஐ. தர்மசிங்
அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2021

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

கவிஞர் ஐ.தர்மசிங்

ஒரு கடிதம்
ஒருவன் காதலில் நுழைகிறான்
ஒருவன் மனம் பிறழ்கிறான்

ஒரு தீர்ப்பு
ஒருவன் சிறகை விரிக்கிறான்
ஒருவன் சிக்கிக்கொள்கிறான்

ஒரு விண்ணப்பம்
ஒருவன் பணியில் அமர்கிறான்
ஒருவன் இறங்கிப் போகிறான்

ஒரு பத்திரம்
ஒருவன் வீட்டில் குடியேறுகிறான்
ஒருவன் மௌனமாக வெளியேறுகிறான்

ஒரு உண்மை
ஒருவன் புரட்சி செய்கிறான்
ஒருவன் மறைந்து வாழ்கிறான்

ஒரு பொய்
ஒருவன் தலைவன் ஆகிறான்
ஒருவன் நாற்காலியைத் துறக்கிறான்

ஒரு ஆவணம்
ஒருவன் மணஉறவு காண்கிறான்
ஒருவன் மனமுடைந்து மாள்கிறான்

ஒரு தேர்வு
ஒருவன் வெற்றியில் துள்ளுகிறான்
ஒருவன் தோல்வியில் துவளுகிறான்

ஒரு கவிதை
ஒருவன் கவிஞன் ஆகிறான்
ஒருவன் ரசிகனாக மாறுகிறான்

ஒரு சிறுகதை
ஒருவன் பாதையை மாற்றுகிறான்
ஒருவன் அயலானைத் தூற்றுகிறான்

ஒரு நாவல்
ஒருவன் மனங்களைக் கற்கிறான்
ஒருவன் சரித்திரமாகி நிற்கிறான்

ஒரு செய்தி
ஒருவன் களங்கம் கற்பிக்கிறான்
ஒருவன் நற்பெயர் பெறுகிறான்

ஒரு காகிதம்
ஒருவன் ஆசிரியர் ஆகிறான்
ஒருவன் மாணவன் ஆகிறான்

ஒரு ஒப்பந்தம்
ஒருவன் கலகம் மூட்டுகிறான்
ஒருவன் அன்பு காட்டுகிறான்

சமூகத்தைப் புரட்டுகிற
வலிமையான பேனாமுனை
வரமான ஆறாம் விரல்...

படைப்பு

ஆறாம் விரல்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி
கவிதைத் தொடரில்
சிறப்பு பரிசு பெற்ற
படைப்பாளி குறிஞ்சிநாடன்
அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2021
நாள்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

கவிஞர் குறிஞ்சிநாடன்

தூண்டிலெனக்கு வாய்த்தபோது
நானொரு மீனைக் கொன்றிருந்தேன்!

துப்பாக்கியொன்று என் சுட்டுவிரலை
ஆட்கொண்டபோது ஆறாவது விரலாய்
அது ஆட்கொன்றது!!

கூரிய கற்களும், வாளும், குத்தீட்டியும்
கைகளில் விரலாய் நடித்துப் பார்த்தன.
எனக்கோ... கலை செய்வதுதான் வாழ்க்கை!

பேனாவை அறிவின் கருவியாக்கினேன்
ஆறாம் விரலாய் அணிந்துகொண்டேன்!

ஆணியொரு விரலாகி நீதிநெறி கருவாக்கி
ஓலைச்சித்திரங்கள் தீட்டிய காலம்...

உளியொன்று விரலென்று உருக்கொண்டு
கரும்பாறைக் கதைகளைக் கதைத்த காலம்...

தூரிகை நீண்டு சாந்துக்கள் குழைத்து
ஓவியச்சுவரில் ஞாலத்தை வரைந்த காலம்....

கடந்து கடந்து காகிதம் வந்தது
எண்ணத்தின் மொழிகளை இறகுகள் எழுதின!!

மானுடத்தின் வலக்கரத்தில் பேனாக்கள்
முளைத்ததும்
பேறுகாலமில்லாமல் பிரசவங்கள் நடந்தன.
ஆண்களும் கருத்தரித்த அற்புதம் நிகழ்ந்தது!!

இன்று.... அறிவுச்செங்கோல் அநாதையாய்க்
கிடக்கிறது
நான் பொத்தானைகளை அழுத்திவிட்டு
கடிதப்பையில் பூக்களை நிரப்புகிறேன்!

படைப்பு

ஆறாம் விரல்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி
கவிதைத் தொடரில்
சிறப்பு பரிசு பெற்ற
படைப்பாளி அந்திகை
அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2021
நாள்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

கவிஞர் அந்திகை

முதியோனைப்போல் முணுமுணுக்கும்,
கேட்கும் செவியோடு
அருகே செல்வேன்.
குழந்தையைப்போல் சிணுங்கும்,
பெருகிய அன்போடு
கையில் ஏந்துவேன்.
பள்ளிக்கூடத்து மணியைப்போல் ஒலிக்கும்,
மதிய சாப்பாட்டுக்காக
கற்க வந்த சிறுமியைப்போல்
எழுந்து ஓடுவேன்.
ஆதரவற்ற ஒருவனைப்போல்
சோர்ந்துபோய்க் கிடக்கும்
யாரும் இங்கே தனியே இல்லை
உடனிருப்பேன் என்பேன்.
நிராதரவான ஆட்டுக்குட்டியைப்போல் பாவித்து
எங்கே சென்றாலும்
அழைத்துச் செல்வேன்.
என் காலைப்பொழுதுகளின்
சூரியன் அது.
என் நீண்ட இரவுகளின்
நிலவும் அது.
என் தனிமைக்குத் துணையும்
என் அமைதிக்கு இசையும்
என் வறட்சிக்கு மழையும்
அதுவே...
ஆம்,
என் ஆத்ம உறவென்றாலும் தகும்.
ஆனால், அஃது என் ஆறாம் விரல்.
காது கொடுங்கள், மெதுவாகச் சொல்கிறேன்.
அது என் கைபேசியென்று.

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

கவிஞர் ரத்னா வெங்கட்

புரண்ட இரவின் கரம் படிய
ஆலிங்கனத்தின் ஆளுமைக்குள்
தன்னிச்சையாக அடைபட்டது
வியப்புக்குறிக்குள்
விருப்பெனக் காட்டும்
பிரயத்தனத்தின் அயர்வு

மூடிய இமைகளுக்குள்
முயங்குகிற அரூபமும்
மூச்சு முட்ட முயற்சித்துக் கிடந்த பிம்பமும்
ஒற்றைப் புள்ளியில் ஒருமித்து
ஒட்டாத ஒளிப் பிழம்பாய்ச் சுழன்று
முகமற்றுச் சிதற

உணர்விழந்து ஒப்புக் கொடுத்து
உடன்படு மெய் தோற்க
ஒருக்களித்துச் சுருள்கையில்
வலிந்து ஆரத் தழுவிக்கொண்ட
உறக்கத்தின் இரக்கத்தினூடே
உதடு பிதுங்க வெளிப்படுகிற அந்த விசும்பல்
நிசப்தம் கிழித்துத் தோரணமாக்கும்
ஒற்றைப் பட்சியின்
அபஸ்வரக் கூவலை ஒத்திருக்க

விதிர்த்துப் புரண்டெழுந்து
சிம்புளி நழுவத் தலைகோதுகையில்
அசந்தர்ப்பமாய்
இடறுகிறது பெருவிரலோடு
ஒட்டிக் கிளைத்த பிண்டம்
தொண்டைக்குழிக்குள் சிக்கிய
கற்றைக் குழலுதிர்வை
ஓங்கரித்துத் துப்புகிற அவஸ்தை

இதயத்தின் அதிர்வு
செவிக்குள் தடதடத்து
நீளமாய் ஓட
புரட்டிப் புரட்டிப் படித்தும்
புரிபடாத புதினத்தின்
வியாக்கியானமாய்
விரிந்து நீண்டிருந்தது இருள்
தடவி அணிகையில்
புலன் விழித்துப் புதிர்க்கணக்கிட
சன்னலோர இருக்கைப்பிடியின்
அழுத்தம் ஆதூரம்

தொலைவில் மினுங்கும்
தொடர்பற்ற நட்சத்திரங்களை
எண்ணிக் கண்மூடுகையில்
புதிரவிழ்த்த மொட்டாக
நிச்சயமற்ற நொடிகளுடனான
பிறிதொரு நாளை வரவேற்கும்
ஆயத்தப் புன்னகையாக
மலர்கிறது
தேவையற்ற அவ்விரல்
புறமிட்டுத் தகிக்கிறது பகல். ■

● மு.முருகேஷ்

கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

ஒரு நல்ல கவிதையைப் படித்துவிட்டால், உடனே அந்தக் கவிதையை எழுதிய கவிஞருக்குப் பாராட்டு மடலொன்றினை எழுதிவிடுவது என் வழக்கம். அதேபோல், நல்ல கவிதை நூலொன்றினைப் படித்துவிட்டால், அந்தக் கவிஞரை நேரில் பார்த்துப் பாராட்ட வேண்டுமென்கிற ஆவல் எனக்குள் எழும். இப்படியாக, பல நூறு கவிஞர்களுக்குப் பாராட்டு மடல்களை எழுதியுள்ளேன்; நேரில் சந்தித்தும் பாராட்டியுள்ளேன்.

1991ஆம் ஆண்டில் 'நிறங்கள்' கலை இலக்கிய அமைப்பின் வெளியீடாக வந்த 'குரோடன்ஸ்களோடு கொஞ்ச நேரம்' எனும் கவிதை நூலினை வாசித்தேன். முன்னரே கவிஞர் பழமலய் எனும் பெயரினைக் கேள்விப்பட்டிருந்தாலும், முதன்முதலாக நான் கவிஞரது கவிதை நூலாகப் படித்தது அந்த நூலைத்தான்.

கவிஞரது பெயர், நூலின் தலைப்பு என்னை ஈர்த்ததைப் போலவே, குரோட்டன்ஸ் செடிகளும் தொண்ணூறுகளில் என்னை ஈர்த்தன. எங்கள் வீட்டிலிருந்து சற்று தொலைவிலிருந்த புறநகர் பகுதிகளில் அப்போதுதான் நிறைய குடியிருப்புகளைக் கட்டிக்கொண்டு இருந்தார்கள். அரசு ஊழியர்கள் சிலர் கட்டியிருந்த சற்றே பெரிய வீடுகள் எங்களைப் புருவம் உயர்த்திப் பார்க்க வைத்தன. அவர்களது வீடுகளின் முன்புறத்தில் வைக்கப்பட்டிருக்கும் பல நிறத்திலான குரோட்டன்ஸ்களும் எங்களை ஆச்சரியப்படுத்தின.

விளையாட்டுத் திடலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பும்போது, வாசல் புறத்திலிருக்கும் குரோட்டன்ஸ் செடிகளின் இலைகளைக் கிள்ளிக்கொண்டு வருவோம். சுருண்டும் அகன்றும் பல வண்ணங்களின்

சிதறலைப் போலிருக்கும் குரோட்டன்ஸ் இலைகளைக் கையில் வைத்து கசக்குவேன். பச்சைய வாசத்தோடு கை ஈரமாகும். நுகர்ந்து பார்க்கையில் என்னவென்றே உணர்ந்துகொள்ள முடியாத வாசம் வீசும்.

"இது என்னடா வாசம்..?" என்றால், "இதென்ன நம்ம ஊரு செடியா, மாவிலை மாதிரி மணக்க? இது வெளிநாட்டுச் செடிடா..!" என்று பதில் சொல்வான் ராமச்சந்திரன். குரோட்டன்ஸ் பற்றி ஒவ்வொருவரும் சொல்லும்போது கேட்கவே வியப்பாக இருக்கும்.

"இந்தச் செடிகளுக்குத் தண்ணியே வேண்டாம்மான்டா. நல்ல வெயில்ல கூட பச்சைப்பசேல்னு வளருமாம்" – இது மாரிமுத்து.

"இந்தச் செடிக்கு வேரே கிடையாதாம். ஒரு இலையைக் கிள்ளி வச்சாலே வளருமாம்" – இது சண்முகம்.

"இதுகளை வீட்டிலே வளர்த்தா பாம்பு வரும்னு எங்கப்பா சொன்னாரு..!" என்று பயங்காட்டினான் ஸ்ரீதர்.

"நிலத்தடி நீரை மொத்தமா உறிஞ்சிடுமாம்..!" என்றான் முனீஸ்வரன்.

இப்படியாக, குரோட்டன்ஸ் பற்றிய செய்திகளைக் கேட்டுக்கொண்டிருந்த எனக்கு, 'குரோட்டன்ஸ்களோடு கொஞ்ச நேரம்' நூலின் கவிதைகளை வாசித்தபோது, அதன் மீதான நேசம் கொஞ்சம் கூடிப்போனது உண்மைதான். திரும்பத் திரும்ப பலமுறை கவிதைகளைப் படித்து ரசித்தேன். இந்நூலில் மொத்தம் 71 கவிதைகள். எந்தக் கவிதைக்கும் தலைப்பு இல்லை. இலையிருக்கையில் பூ வேண்டாமெனத் தவிர்த்திருந்தார். கவிதைகளுக்கு வரிசை எண்களிட்டு எழுதியிருந்தார். ஒவ்வொரு கவிதையும் ஒரு அழகான குறுங்கதை போலிருக்கும். நம் அருகமர்ந்து கதை சொல்லும் தொனியே பழமலயின் கவிதை பாணி.

'வாடகை வீட்டில் இழந்த காலத்தை
வாழ முடியாது சொந்த வீட்டில்.'

'வெறும் இலைகள்
கேட்டதில்லை நீங்கள்
நிறங்கள் வழங்கும் இன்னிசை நிகழ்ச்சி..'

'எத்தனை தொட்டிகள் வாங்குவது
குடியிருப்பில் முற்றியுள்ள தண்ணீர் அரசியலில்
மனைவியின் எதிர்ப்பைப் புறக்கணிக்க முடியாது
குரோட்டன்ஸ்களைத் தேர்ந்தெடுக்க முடிகிறது
இல்லையென்றால்
குரோட்டன்கள் நடுவில் குடியிருப்பேன்..'

'முன்பும் ஒருமுறை மனது சொன்னது
நீ குரோட்டன் வளக்கல
ஏதோ கோபம் வளக்குற.'

'குரோட்டன்கள் என்னை வளர்க்கின்றனவா
நான் குரோட்டன்கள் வளர்க்கிறேனா
செடிகளால் முடியுமா மனிதர்களை வளர்க்க
செடிகொடிகள் இல்லாமல் முடியுமா
மனிதர்களால் வளர
பிறகு பேசலாம்
முதலில் செடியைக் கவனிக்கணும்
குடிக்க நீர் குந்த மண்.'

நூலில் வாசித்த பல வரிகள் மனதில் வேர்ப்பிடித்து உள்ளிறங்கிக்கொண்டன.

வழக்கமாக மலர்களை மட்டுமே கவிதைகளில் படித்திருந்த என் வாசிப்புக்கு, முதன்முதலாக இலைகளைப் பற்றிய கவிதைகளை வாசித்ததில் புதுவகை வாசிப்பு ருசியும் உண்டாகிப்போனது. வழக்கம்போலவே கவிஞரைப் பார்க்க வேண்டுமென்கிற ஆவல் வந்தது. கவிஞர் பழமலய் அப்போது விழுப்புரத்தில் இருந்தார். எப்படியாவது கவிஞரைப் பார்த்தாக வேண்டுமென்கிற எண்ணம் மனதில் கூடிக்கொண்டே போனது.



கவிஞர் பழமலயைப் பார்ப்பதற்கு முன்னர், அவர் எழுதிய நூல்களைப் படித்துவிட வேண்டுமென்கிற ஆவலில் தேடத் தொடங்கினேன். 1989இல் ‘தோழமை வெளியீடாக’ வந்த ‘சனங்களின் கதை’ நூல் கிடைத்தது. அந்த நூலிலும் பல வரிகள் பிடித்துப்போயின. அதிலொன்று;

‘ஊர் மறந்தது புத்தரை;

நான் நினைத்துப் போனேன்

அம்பேத்கர் காலனி.’

1985இல் கவிஞரது ‘துப்பாக்கிக்காரனின் புல்லாங்குழல்’ எனும் குறும்பாடல்கள் நூல் வெளிவந்திருப்பதாக அறிந்து, அந்நூலைத் தேடினேன். அது கிடைக்கவில்லை. இவர்கள் வாழ்ந்தது (1994), இன்றும் என்றும் (1998), முன் நிலவுக்காலம் (1999), புறநகர் வீடு (2000), இரவுகள் அழகு (2001), வேறு ஒரு சூரியன் (2002) ஆகிய நூல்களை வாங்கி வாசித்தேன். சரி, கவிஞரை எப்போதுதான் சந்தித்தேன். அதற்குமுன், கவிஞர் பழமலய் பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொள்வோமா..!

1943ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3ஆம் தேதி பிறந்தவர் பழமலை (பிறகே பழமலய் ஆனார்). விழுப்புரம் மாவட்டத்திலுள்ள குழுமூர் எனும் கிராமத்தில் உழவுத்தொழில் செய்துவந்த நடுத்தரக் குடும்பமான தங்கவேல் – குஞ்சம்மாள் தம்பதியினரின் நான்காவது பிள்ளையாகப் பிறந்தார். ஐந்தாம் வகுப்பு வரை குழுமூர் ஊராட்சி மன்றத் துவக்கப்பள்ளியில் படித்தவர், பின்னர் திருமுதுகுன்றத்தில் உயர்நிலைப்பள்ளியில் படித்தார். பிறகு அண்ணாமலை நகரில் ஆறு ஆண்டுகள் படித்தார்.

1966இல் கிருஷ்ணகிரியிலுள்ள அரசு கலைக்கல்லூரியில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார். பின்னர் 1967-69 வரை திருவண்ணாமலை அரசு கலைக்கல்லூரியில் பணியாற்றினார்.

22.05.1969இல் சு.உமாவைத் தன் இல்வாழ்க்கைத் துணையாக ஏற்றார். இந்த இணையருக்கு மூன்று மக்கள்;

மருத்துவர் ப.உ.லெனின், வழக்கறிஞர் ப.உ.செம்மல், பொறிஞர் ப.உ.தென்றல்.

கடலூர், தருமபுரி அரசு கலைக்கல்லூரிகளில் சில ஆண்டுகள் பணியாற்றியவர், 1991இல் விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பொறுப்பேற்றார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 1979-80இல் ‘நீரிடங்களும் பெண் தெய்வ வழிபாடும்’ எனும் தலைப்பில் ஆய்வு செய்து, ஆய்வு நிறைஞர் (எம்.ஃபில்.,) பட்டம் பெற்றார்.

பழமலயின் கவிதைகளை வாசிப்பதைப் போலவே மிகுந்த சுவாரசியமானது

நூலின் பின்பக்கத்தில் தந்திருக்கும் விவரக் குறிப்புகளும். ஒவ்வொரு கவிதையையும் எந்த நாளில், எந்தச் சூழலில், எந்த ஊரில், எதன் தாக்கத்தினால் எழுதினார் என்கிற குறிப்புகள் வாசிப்பாளனை வேறொரு சிந்தனைத்தளத்திலும் யோசிக்கவைக்கும் வித்தியாசமான முயற்சியாக இருந்தது. அப்படியான குறிப்புகளுள் ஒன்று:

கவிதை எண்: 54 (குரோட்டன்ஸ்களோடு கொஞ்ச நேரம் – இரண்டாம் பதிப்பு: பக்கம்-91)

24.04.1991 - பாரதிதாசனார் விழுப்புரத்தை அடுத்துள்ள பனையபுரம் உ.நி.பள்ளி தமிழ் மன்ற விழாவில் பேச வந்திருந்தாராம். பள்ளியில் வாடிக்கிடந்த செடிகளைப் பார்த்தவர், ஆசிரியர்கள் அவற்றின் அடியில் கைகழுவினால் கூட போதுமே என்றாராம்.

இந்தக் குறிப்பின் பின்னணியில் கவிஞர் பழமலய் எழுதியிருக்கும் கவிதையிலிருந்து சில வரிகள்;

‘ஏதோ படத்திற்கு நடிப்பதுபோல்

புல்தரையில் நின்றுகொண்டு

ரப்பர் குழாய் பிடிக்க முடியாது

தண்ணீர்ப் பஞ்சம் எங்களுக்கு

செடிகளின் அடியில் கை கழுவுகிறேன்

குரோட்டன் லிங்கத்திற்கு

வாய்நீர் அபிசேகம்

கொடிகள் ஏறக் கொம்பு நடுகிறேன்

தேர் இல்லாத குறைதான்..’

– இப்படியாக அந்தக் கவிதை நீளும்.

‘வீட்டுக்கல்வெட்டுகளும் பிறவும்’ எனும் குறிப்பில் (புறநகர் வீடு, பக்கம்:103) தந்துள்ள 6 பக்க அளவிலான தகவல்கள் கவிஞரைப் பற்றிய நம் மதிப்பீட்டை மேலும் உயர்த்தும்.

விழுப்புரம், கண்டர்மானடி, வழுதிபிராட்டியிலுள்ள சீனிவாசா நகர் இளங்கோ வீதியிலுள்ள 4/326A எண்ணுள்ள கவிஞரது வீட்டின் பெயர் ‘பெருமிதம்’. வீட்டிலுள்ள சில கல்வெட்டுகளில் வீட்டைக் கட்ட உதவிய பணியாளர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. வீட்டிலுள்ள பூங்காவின் பெயர் ‘பொது உடைமைப் பூங்கா’. கிழக்கு வாயிலிலுள்ள வெளிப்புறச் சுற்றுச்சுவரில் கவிஞர் பதித்திருக்கும் கல்வெட்டிலுள்ள ‘புதிய ஆத்திச்சூடி’யிது.

‘அம்பேத்கர் அறி

ஆண்பெண் சரிநிகர்

இடஒதுக்கீடு கொள்

ஈவெரா படி

உழுவோர் உயர்த்து

ஊரைத் தமிழ் செய்

எட்டாதது இல்லை

ஏற்றம் மாஒசேதுங்

ஒதுங்குதல் ஒழி

ஓங்குவது புரட்சி.’

பாசாங்குத்தனமில்லாத இயல்பான கவிஞர் பழமலயின் கவிதை மொழி, தமிழுக்குப் புதுவரவு மட்டுமல்ல; புது இரத்தமும் பாய்ச்சியது என்று சொல்வதே பொருத்தமானது. இளைய கவிஞர்கள் சிலர் பழமலயின் பாணியில் கவிதை எழுத முற்பட்டனர். உரைநடையிலிருந்து சற்றே விலகியும், பேச்சு



வழக்கிலும், கவித்துவத்துடனும் தமிழில் கவிதைகள் எழுதப்பட முதலடி எடுத்துத் தந்த பெருமைக்குரியவர் கவிஞர் பழமலய்.

கவிஞரைப் பார்க்க வேண்டுமென்கிற என் பெருங்கனவு ஆறாண்டுகள் கழித்தே கைகூடியது. *1997* டிசம்பரில் நானும் வெண்ணிலாவும் விழுப்புரம் சென்று, கவிஞர் பழமலயை, அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடிய நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும். அப்போது 'புதிய பார்வை' இதழில் வந்திருந்த எனது 'ஒரு கவிதையை தவறுதலாக உடைத்துவிட்டேன்' எனும் கவிதையைப் படித்துவிட்டு, பெரிதும் சிலாகித்துப் பேசினார். பிறகு அடிக்கடி கடிதம்வழி பகிர்ந்துகொண்டோம். *2001*இல் வெளியான எனது '36 கவிதைகளும் 18 ஓவியங்களும்' கவிதை நூலுக்கு 'மீன்குத்தியின் தவம்' எனும் தலைப்பில் அழகானதொரு முன்னுரை வழங்கிச் சிறப்பித்தார்.

அகில இந்திய வானொலியின் குடியரசு நாள் விழாவில் நடைபெற்ற 'சர்வபாஷா கவி சம்மேளனத்தில்' தமிழ்நாடு – புதுச்சேரி மாநிலங்களின் சார்பாகக் கவிஞர் பழமலய் எழுதிய 'குருவி பாடியது' எனும் கவிதை தேர்வு செய்யப்பட்டது. 'இவர்கள் வாழ்ந்தது' கவிதை நூலுக்காக *1997*இல் கவிஞர் சிற்பி இலக்கிய விருதினைப் பெற்றார். தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் நடத்திய போராட்டங்களில் பங்கேற்று, இருமுறை சிறைவாசம் செய்யப்பட்டவர். விழுப்புரத்தில் பொய் வழக்கு ஒன்றிற்காகவும் ஒருமுறை கைதானார். இந்தத் தகவல்கள் எல்லாம் எவ்வித ஒளிவுமறைவுமற்றுத் திறந்த புத்தகமாய், அவரது நூல்களில் பகிரப்பட்டுள்ளன.

வடிவ முறையாலும், கவித்துவத்தாலும் கவிஞர் பழமலய் எழுதுவதைக் கவிதை வகைப்பாட்டில் சேர்த்தாலும், அவர் எழுதுவது ஒவ்வொன்றும் ஒரு கதைதான். ஒவ்வொரு கவிதைக்குள்ளும் ஒரு கதையிருக்கும்.

'ஒவ்வொரு கவிதையும் ஒரு செய்தியைச் சொல்கிறது; ஒரு நிகழ்வை உள்ளடக்கி இருக்கிறது; ஒரு கதையைக் கொண்டிருக்கிறது; இறுதியில் இவரது நறுக்கென்ற தீர்மானமான கருத்து, சிந்தனையைத் தூண்டுகிறது' என்று பேராசிரியர் வே.சபாநாயகம் குறிப்பிடுவது நூறு சதவீத உண்மையே.

'புறநகர் வீடு' தொகுப்பிலுள்ள ஒரு சிறுகதை போலான சிறுகவிதையினைப் படியுங்களேன்.

தலைப்பு : 'ரசிகமணியின் எஞ்சினியர்'

'நாயினா கி.ரா சொன்னார்;

"யார் எஞ்சினியர்" – என்று
கேட்டிருப்பார்கள் போல.

ரசிகமணி டிகேசி-

"வாங்க" என்று அழைத்துப் போனாராம்.

குளியல் அறைச் சாய்க்கடைத் துளையைக்
காட்டி-

"அதோ, உள்ளே இருக்கிறார்" என்றாராம்.

குளிக்கும்போது-

முழங்கால் உயரத்திற்குத் தண்ணீர்
நிற்குமாம்.

துளையின் அகலத்தையும்

திட்டமிடுவதுதான் கட்டிடக்கலை.

நானும் ஒன்றைச் சொல்லலாம்;

கோப்பையில் குந்திய விருந்தாளிக்குப்

பின்னால் இருந்த சுவர் உராய்ந்து

குண்டி தேய்ந்து காயமானது-

ஒருத்தர் வீட்டில்!'

எந்தப் புகழ் கோபுரங்களின் மீதும் ஏறி நிற்காமல், மஞ்சள் வெளிச்சத்தில் மயங்காமல், தான் கவிதை எழுதுபவன் என்கிற கர்வம்கூட இல்லாமல் தன்போக்கில் காற்றில் ஆடிக்கொண்டேயிருக்கும் காட்டுச்செடிகளையொத்த கவிஞர் பழமலயின் கவிதையும், இயக்கமும் என்றும் உயிர்த்திருக்கும்.

- இன்னும் சொல்வேன் ■

சிறுகதை

கண்மணிராசா

ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

லாட சன்னாசியின் டைரி

"நான் பத்தாப்பு முடிச்சவுடனே பதினொன்னுல அறிவியல் குரூப்ல சேர ஆசப்பட்டேன். பள்ளிக்கூடத்துல சயின்ஸ் குரூப்புக்கு நூத்தம்பது ரூவா கட்டணும். ஆனா.. அதுக்கு அடுத்த ஆர்ட்ஸ் குரூப்புக்கு அம்பது ரூவாதான். ஒரு நூத்தம்பது ரூவா இல்லாமல்தான் எங்கய்யா என்னைய ஆர்ட்ஸ் குரூப்ல சேத்துவிட்டாரு. இருபது வருசமாச்சு.. இப்பவும் எம்மவன் சயின்ஸ் குரூப்ல சேர ஆசப்பட்டான். இப்ப எங்கிட்ட நூத்தம்பது ரூவா இருக்கு. ஆனா சயின்ஸ் குரூப்பு பதினஞ்சாயிரமாம். நொந்துபோய் என் மகன ஆர்ட்ஸ் குரூப்ல சேத்துவிட்டு வீட்டுக்கு வந்து என்னய நானே விளக்குமாத்தால அடிச்சுக்கிட்டேன்..."

படக்கென டைரியை மூடினேன். மேற்கொண்டு படித்தால் அழுதுவிடுவேன் எனத் தோன்றியது. எதுவுமே தோன்றாமல் சில நிமிடமும்... ஏதேதோ தோன்றிச் சில நிமிடமும் உறைந்திருந்தேன். யார் யார் மீதோ கோபம் வந்தது. மெல்ல டைரியின் முதல் பக்கத்தைப் பார்த்தேன்.

லாடசன்னாசி.

சுரைக்காய்ப்பட்டி.

என எழுதியிருந்தது.

தினமும் மாலை நேரத்தில் வழக்கமாகப் புளியங்குளம் கண்மாய்க்கு வந்துவிடுவது வழக்கம். ஆண்டின் முக்கால்வாசி வறண்டு கிடக்கும் கண்மாய். ஆனாலும் அங்கங்கு குட்டைகளில் தண்ணீர் கிடக்கும். சாயங்காலம் ஆனதும் கிரிக்கெட் விளையாட... கூடிப்பேச... கிணத்துல குளிக்க... காலாற நடக்க.. தண்ணியடிக்க எனக் கூட்டம் கூடும். இதில் கைகளில் பாட்டில்களோடு தண்ணியடிக்க வரும் கூட்டமே அதிகம். மாலை நேரக் காற்றும்... பரந்து கிடக்கும் எருக்கம் செடி மறைவும் தண்ணியடிக்க தோதான இடம். எவ்வளவு நேரமானாலும் எதுவும் தொந்தரவில்லை. முன்னிரவு வரை

கிடந்து உருள்வார்கள். நான் எதையுமே கண்டுகொள்வதில்லை. ஆனால் பள்ளிக்கூட மாணவர்களைப் பாட்டிலோடு காணும்போது மட்டும் மனது வேதனையுறும். எந்தக் கணத்தில் தம் குழந்தைமை திரிந்து இவர்கள் இப்படி ஆகியிருப்பர் எனத் தோன்றும்.

எல்லாவற்றையும் கடந்து கண்மாயின் நடுக்கரையிலுள்ள கலிங்கல் வந்து உட்கார்ந்துவிடுவேன். அன்றன்றைய பாடுகளை அங்கே இறக்கிவிட்டு இருட்டியதும் வீடு திரும்புவது வழக்கம். அப்படி இன்று கலிங்கலில் அமரும்போதுதான் பக்கத்தில் கிடந்தது இந்த டைரி.

மீண்டும் டைரியின் முதல் பக்கத்தைப் பார்த்தேன்.

லாட சன்னாசி.

சுரைக்காய்ப்பட்டி.

சுரைக்காய்ப்பட்டி பக்கத்துத் தெருதான். சின்ன சுரைக்காய்ப்பட்டி, பெரிய சுரைக்காய்ப்பட்டி.. என ரெண்டு பகுதி உண்டு. லாட சன்னாசி யாராக இருப்பார். அந்தத் தெரு பெரும்பாலும் மில் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதி. அப்படி ஏதேனும் ஒரு மில் தொழிலாளியாக இருக்க வேண்டும். யோசனையை நிறுத்திவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தேன். எங்காவது பக்கத்தில் இருக்கலாம்.. வரக்கூடும் எனக் காத்திருந்தேன். இருட்டிக்கொண்டே வந்தது. கலிங்கலின் லைட் வெளிச்சத்தில் டைரியைப் பார்த்தேன். என்னைத் தனியே விட்டுவிட்டுப் போய்விடாதே... என்பது போலக் கிடந்தது. ஒரு முடிவோடு வீட்டுக்குக் கொண்டுவந்தேன்.

தன்னைத்தானே விளக்குமாற்றால் அடித்துக்கொள்ளும் ஒரு மனிதனின் சித்திரம் தோன்றிப் பரிதவிக்க வைத்தது. முகமறியாத லாடசன்னாசியின் மகன் மேல் பரிவு வந்தது.

இரவில் வெகுநேரம் கழித்து மீண்டும் டைரியில் கைக்கு வந்த பக்கத்தைப் புரட்டினேன்.

“..நேத்தே `அரிசி காலி மாமா...` என ஜோதி சொல்லிவிட்டாள். ரேசன் அரிசி என்றதற்கு `அதுவும்தான்` எனப் பெருமூச்சு விட்டபடி தண்ணியெடுக்கப் போய்விட்டாள். சம்பளம் வர இன்னும் ஒரு வாரமாகும். பக்கத்துல பெரும்பாலும் இதே கதைதான். அதுவுமில்லாமல் பக்கத்துல கடன் கேட்க ஜோதி விடமாட்டாள். மில்லுகிட்ட வட்டிக்கு விடுற சிலரைத் தெரியும். ஆனால் எல்லார்கிட்டயும் வாங்கியாச்சு. ஏற்கனவே என் ஏடிஎம் கார்ட வாங்கி வச்சுக்கிட்டுத்தான் கடன் தந்திருக்கான் ஒருத்தன். எல்லார்கிட்டயும் அப்படித்தான். சம்பளத் தேதியில பணம் அக்கவுண்ட்ல ஏறினதும் வட்டியை எடுத்துக்கிட்டு மிச்சத்தைக் கொடுப்பானுக. அதுலதான் வீட்டு வாடகை... பால் பாக்கி... மளிகைச் செலவு.. எனக் கரையும். மூனு நாள்தான். திரும்பவும் புள்ளைகளுக்கு ஆஸ்பத்திரி செலவு.... தின்பண்டச் செலவுன்னு கடன் வாங்க அலையணும். யோசனையின் கனம் அழுத்தியதில் சடாரெனத் தோன்றியது.”

“தலையை அழுத்திக்கொண்டே திரும்பியதில் கண்ணில் பட்டது அந்தப் பார்சல். மாதந்தோறும் நாகர்கோவிலில் இருந்து தோழர்கள் அனுப்பிவைக்கும் இலக்கிய மாத இதழ் பார்சல். மாதந்தோறும் பத்து வரும். வழக்கமாக வாங்கும் பத்து நண்பர்களுக்கு விற்று.. ஒன்பதுக்குப் பணம் அனுப்பினால் போதும். லேசாய்ச் சந்தோசம் வந்தது. பார்சலை எடுத்து சைக்கிள் கேரியரில் வைத்துக்கொண்டு சந்தை மார்க்கட், எல்.ஐ.சி.ஆபிஸ், பழக்கடை, தறிக்கூடம்... என ஒருமணி நேரம் அலைந்ததில் இதழ்கள் தீர்ந்தன. ஆறுக்குப் பணம் அப்போதே கையில் வந்தது. முன்னூறு ரூபாய். நாலு கிலோ அரிசியும் பிள்ளைகளுக்கு சேவும் மிக்சரும் வாங்கிட்டு வீடு திரும்பினேன். சம்பளத்தை வாங்கிப் பணத்தை அனுப்பிடலாம்..”

திகைத்துப்போய் டைரியை மூடினேன். லாடசன்னாசியை உடனே பார்க்க வேண்டும் போலத் தோன்றியது. அந்தத் தெருவில் நண்பர்கள் சிலர் உண்டு. விசாரித்து சன்னாசியைக் கண்டுபிடிக்க வேண்டும். கண்டுபிடித்து...? திடீரெனத் தோன்றிய கேள்வியில் திகைத்து நின்றது யோசனை. இலக்கியம் சோறு போடுமா.. என்பார்கள். இங்கே யாரோ ஒருவரின் கதையும்... யாரோ ஒருவரின் கவிதையும் ஒரு குடும்பத்தின்

பசியைத் தற்காலிகமாகத் தீர்த்திருக்கிறது. லாட சன்னாசி கவிஞராக இருக்கக்கூடும் எனத் தோன்றியது. மீண்டும் டைரியைப் புரட்ட ஆசை வந்தாலும்.. அதிகாலையில் சிப்ட் போகவேண்டிய நினைவு வந்ததால் உறங்கிப்போனேன். மறுநாள் ஆலையில் மனசு முழுக்க வெயிலோடு வேர்த்து வழிய சைக்கிள் கேரியரில் புத்தகத்தை வைத்துக்கொண்டு தவிக்கும் முகத்துடன் திரியும் ஒருவன் வந்துகொண்டே இருந்தான். சாயங்காலம் வீடு வந்ததும் டைரியை எடுத்துக்கொண்டு கண்மாய்க்கு விரைந்தேன். காணாமல் போன டைரியைத் தேடி அவர் நிச்சயம் வருவார் எனத் தோன்றியது.

கண்மாயில் அவ்வளவாகக் கூட்டமில்லை. இன்னும் சற்று நேரமாகக்கூடும். மேற்கே அய்யனார் கோயில் அருவியில் தண்ணீர் விழுவது நூல் போலத் தெரிந்தது. அங்கு நிறைய விழுந்தால்தான் இந்தக் கண்மாய் வரை தண்ணீர் வரும். இதையும் தாண்டி கொண்டநேரி கண்மாய்... கருங்குளம்... செங்குளம்... சத்திரப்பட்டி... கீழராசகுலராமன் கண்மாய்... வழியாக வெம்பக்கோட்டை அணைக்குப் போய்க் கடலில் கலக்கும். இப்படி நூல் போல தண்ணீர் விழுந்தால் ஆறாவது மைல் நீர்த்தேக்கத்திற்கே சரியாகப் போகும். கொஞ்ச நேரம் காத்திருந்தும் யாரும் வராததால் டைரியைத் திறந்தேன்.

"..அதெப்படினு ஆச்சரியமா இருந்துச்சு... இவ்வளவு கம்மி சம்பளத்துல வாடகை வீட்டுல இருந்துக்கிட்டுத் தலைக்கு மேல கடனோட மல்லக்கட்டுறேன். என்னய விட குறைஞ்ச சம்பளத்தான் கருப்பசாமி.. அவனும் வாடகை வீடுதான்.. புள்ளைகளும் ரெண்டு. ஆனா கடன் என்னய விட குறையாத்தான் சொல்றான். ரொம்ப நாளா நினச்சதை இன்னைக்குக் கேட்டுட்டேன். கொஞ்ச நேரம் பேசாம தலைகுனிஞ்சபடி இருந்துட்டு `அண்ணே... நம்ம தலயெழுத்து.. யார நோவ... வெளிய சொல்லீறாதணே.. வாரத்துல ஆறு நாளும் ரேசன் அரிசி. புளித்தண்ணி.. ஊறுகாய்தான். வாரக்கடைசில ஒருநா மட்டும் கட்டக்கால் எடுப்பேன்.. அதுவும் புள்ளைக ஏங்கிப்போயிறக் கூடாதுன்னு. மத்தபடி மத்த நாளுல புளித்தண்ணி... ஊறுகாய்தான். அதான் கட்டுதுணே..` பேசி முடித்தபோது கலங்கியிருந்தன அவன் கண்கள். எனக்கும்தான்.."

பெருமூச்சு விட்டபடி நிமிர்ந்தேன். லாட சன்னாசியின் எழுத்துக்களின் நடுவிலிருந்து..

சோறு..

புளித்தண்ணி.

ஊறுகாய்...

சோறு..

புளித்தண்ணி.

ஊறுகாய்...

எனக் கருப்பசாமியின் குரல் கேட்கத்தொடங்கியது. மெல்ல மெல்ல இருட்டத்தொடங்கியது. கலிங்கலின் விளக்கு எரியத் தொடங்கியிருந்தது. அலைபேசியை எடுத்து சுரைக்காய்ப்பட்டியிலிருக்கும் நண்பனுக்குப் போட்டேன்.

"லாட சன்னாசியா... ம்.. தெரில மாப்ள.. விசாரிக்கேன்.. என்ன விசயம்.. நேர்ல சொல்றேன்.. சரி மாப்ள.. வச்சிர்றன்..."

"ம்.."

மீண்டும் டைரியைத் திறந்தேன்.

"..சின்னவள் லட்சுமி இன்று கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல்

தவித்துப்போனேன். அப்பா... என்கூட படிக்கிற ப்ரண்ட் வீட்ல... அவங்கவங்க பேரை வெளியே பெருசா எழுதியிருக்காங்க.. இன்னைக்கு ஐஸ்வர்யா வீட்டுக்குப் போனேனா.. வெளிய ஐஸ்ஹவுஸ் னு அவ பேர் இருந்துச்சு. நம்ம வீட்ல ஏன் என் பேரு இல்லாம வேற பேரு போட்டுருக்கு...?"

"அது வந்து அதெல்லாம் அவங்க சொந்த வீடு குட்டிமா..."

"அப்ப நம்ம வீடு.."

"இது நம்ம வீடில்லம்மா.. நாம வாடகைக்கு இருக்கோம்.."

"நமக்கேன் சொந்த வீடில்லை...?"

என்ன பதில் சொல்ல.. கேட்டுக் கேட்டுச் சலித்துப்போய்த் தூங்கிப்போனாள் குழந்தை. இனி வாடகை வீடு மாறும்போது அவள் பேருள்ள வீடாகப் பார்த்து மாறணும்.."

ஒரு தேர்ந்த எழுத்து நடையோடு.. கவிதையெனத் தன் வாழ்வின் முக்கிய தருணங்களை எழுதியிருக்கும் லாட சன்னாசி யாராக இருக்கும்..? காணாமல்போன டைரியைத் தேடி ஏன் இன்னும் வரவில்லை..? இல்லை வேண்டுமென்றே விட்டுப்போனாரா...? என மனதில் கேள்விகள் கிளம்பின.

மறுநாள் அதற்கும் மறுநாள்... லாட சன்னாசி வரவேயில்லை. ஒருவேளை.. ஒருவேளை.. இல்லையில்லை... அப்படி நினைக்கவே மனம் நடுங்கியது. இனி இந்த டைரியை என்ன செய்வது...? யோசனையோடு மீண்டும் திறந்தேன். தான் இருபது வருடங்களாக வேலை பார்த்துவரும் ஆலை பற்றியும்... வெகுநாட்களாகக் கூடாத தன் சம்பளம் பற்றியும் லாட சன்னாசி எழுதியிருந்ததை வாசிக்கும்போது எனக்கு அந்த முதலாளி நினைவில் வந்தார். தொழிலாளர்களுக்கு உரிய சம்பளம் வழங்காமல் மடங்களுக்கும்.. சாமியார்களுக்கும் வாரி வழங்கும் வள்ளல் அவர். முகந்தெரியாத லாட சன்னாசியின் துயர் கனத்தது.

மூன்று நாட்களாக வாடியிருக்கும் முகம் கண்டு அம்மா விசாரிக்க ஆரம்பித்துவிட்டாள்.

இன்று எப்படியாவது இதற்கொரு முடிவு கண்டாக வேண்டும். வெகுநேரம் யோசித்து டைரியை எடுத்துக்கொண்டு கண்மாய்க்கு விரைந்தேன். எதற்கும் கொஞ்சநேரம் காத்திருக்கச் சொல்லி மனசு உறுத்தியது. இனி இந்த டைரியைப் படிக்கப் போவதில்லை.

இந்தளவு துயரைச் சுமந்தபடி திரிய முடியாது. இதைக் கண்டதிலிருந்து லாட சன்னாசி கூடவே திரிவது போல இருந்தது.

தன்னைத்தானே விளக்குமாற்றால் அடித்தபடி....

வெயிலோடு புத்தகங்களைச் சுமந்தபடி....

கருப்பசாமியோடு சேர்ந்துகொண்டு.. சோறு.. புளித்தண்ணி.. ஊறுகாய்.. என அரற்றியபடி...

லட்சுமிக்குட்டி எனத் தன் மகளின் பெயர் சூடிய வாடகை வீட்டைத் தேடியலைந்தபடி...

ஏதோவொரு சாமியாருக்குத் தன் முதலாளி அள்ளிக்கொடுப்பதை வேதனை பொங்க பார்த்தபடி...

மாறி மாறி.. மனதில் வந்து போகும் லாட சன்னாசியை இனி சுமக்க முடியாது. தீர்மானமாய் முடிவெடுத்துக் கொண்டு வந்திருந்த தீப்பெட்டியை எடுத்தேன்.

கொஞ்ச நேரத்தில் சாம்பலாய்க் கிடந்த டைரியை வெறித்தபடி திரும்பினேன். மனது சில நேரம் ஆசுவாசப்பட்டது போலவும்... சில நேரம் அழுது புலம்பியது போலவும் தோன்றியது. ஒரு வாரமாகக் கண்மாய்க்கும் போகவில்லை. சுத்தமாக மனதிலிருந்து லாட சன்னாசியும்... அவரது டைரியும்... மறைந்திருந்தனர். ஒரு வாரம் கழித்து.. வழக்கம்போலப் புளியங்குளம் கண்மாய் கலிங்கல் அடைந்தேன். அதே போல.. அப்படியே கிடந்தது.. டைரி. பதற்றமுற நடுங்கும் கைகளால் முன்பக்கத்தைத் திறந்தேன்.

கருப்பசாமி.

சுரைக்காய் பட்டி.

என்ற எழுத்துக்கள் எனைத் தவிப்போடு நோக்கின.

■

● கவிஜி

நம்மை நாமே காணும் தருணங்கள்

"குளிர் காலத்துல குளிருக்குள்ள... வெயில் காலத்துல வெயிலுக்குள்ள. கொசுக் கடி, சாக்கடை வாசம்.. கசகசன்னு இருக்கற இடத்துல நரகத்தைச் சுமந்துக்கிட்டு வாழ்ற எனக்குத் தினமும் காலைல கண்ணு முழிச்சா தெரியறது.. மலை மேல ஜம்முனு இருக்கற உன் கண்ணாடி மாளிகைதான். அத பாத்தாவே கோபம் வந்துரும். வெறுப்பு கூடிடும். வஞ்சம் பொங்கும். அதான்... உன்னை ஏதாவது பண்ணணும்னு தோணுச்சு.."

இப்படித்தான் அந்த வில்லன் ஹீரோவிடம் ஓர் இடத்தில் பேசுவான். நமக்குப் பேச்சு எழாத இடம் இது.

எல்லாக் காலங்களிலும் கால்களில் நெருப்பைக் கட்டிக்கொண்டு அலையும் சமுதாய ஏற்றத்தாழ்வின் ஆன் ஸ்பாட் விபரீதம்.. ஆற்றாமை, பொறாமை.

"கற்றது தமிழ்" படத்தில்கூட அடிநாதம் இதுதான். ஆற்றாமை.

"ரெண்டாயிரம் வருசமா இருக்கற தமிழ் படிச்ச எனக்கு 2500 சம்பளம்... நேத்து வந்த டிவி பொட்டிய படிச்சவனுக்கு லட்சம் ரூபாய் சம்பளம்.. இல்ல" என்று கேட்டுவிட்டு வஞ்சப் பார்வையை வீசும் ஜீவா பாத்திரம்தான் நமக்கு நினைவுக்கு வந்தது. ஒரு பக்கம் சேர்ந்துகொண்டே போகும் பணம்... இன்னொரு பக்கம் வாழ்வைச் சரித்துக்கொண்டே போகும் சாபம்... என்று இரண்டையும் படைத்த சில புத்திசாலி மனிதர்களின்பால் சுழலும் உலகத்துக்குச் சமதர்மம் கிடையாது. உலகம் தட்டையானது என்று ஆரம்பத்தில் சொன்ன கூற்று சரிதான் என்று தோன்றச் செய்யும் தத்துவம்தான் இந்த சினிமா.

"அகிரா குரோசோவா" எனும் ஆளுமையின் ஒவ்வொரு படமும் நமக்குக் குறிப்பெடுக்க உதவும் காட்சி அமைப்புகளின் வழியே நிகழ்ந்திருக்கும் ஆகச் சிறந்த படைப்புகள்தான். படத்துக்குப் படம் அகிரா நிகழ்த்தும் கலை வரம்பு... உலகத் தரத்தில் சிரம் உயர்த்துபவை. அவர் அவரின் உள்ளூர் ஜப்பான்காக மட்டும் படம் எடுத்த மாதிரி தெரியவில்லை. அதன் நீட்சியாக ஊருக்கு ஊரு வித்தியாசப்படும் விதிகளையும் தாண்டியது என்று புரிந்துகொள்கிறோம்.



"Rashomon" எடுத்துக்கொண்டால்... ஒரே கதையை மூவர் அவரவர் கண்களில் கண்டதைச் சொல்லும் விதமாகத் திரைக்கதை அமைக்கப்பட்டிருக்கும். அதன் தாக்கத்தில்தான் விருமாண்டி இங்கே நிகழ்ந்தது. ஒரே கதையை வேறு வேறு பரிணாமங்களில் சொல்லும் வித்தைக்கு விதை இதுதான் என்று நினைக்கிறேன்.

"Dreams" பார்த்துவிட்டுத்தான் ஒரு கதையை எங்கிருந்து வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம்.. எந்தப் பாத்திரத்தையும் எப்படியும் வடிவமைக்கலாம்.. நிஜத்துக்கும் நிழலுக்கும் இடையே நிறுத்தி நிதானமாக ஒரு கூத்து கட்டலாம் என்றெல்லாம் தெரிந்துகொண்டேன். நரிக்கதையும் மரம் பேசும் விதையும் செத்தவன் தன் வீட்டைக் கண்டு படும் பாடும்... என்று சிந்தனையின் விஸ்தீரத்தை விரித்து வண்ணம் செய்த மாயன் அகிரா என்றால் அது வான்கோவின் வரைய இருந்த ஓவியச் சித்து வேலை என்றே உணர்கிறேன்.

ஷேக்ஸ்பியரின் *King Lear*ஐத் தழுவி மிக அதிகச் செலவில் எடுக்கப்பட்ட "RAN" படத்தை இப்போது பார்த்தாலும்... வாள் எடுத்துக்கொண்டு குதிரை கனைக்க வாசலில் ஒரு போருக்குக் காத்திருக்கும் மனம் வாய்த்துவிடும்.

"Ikiru" காலத்துக்கும் சாவின் பிரதி. துன்பவியலின் தூர் வரை சென்று தோண்டி எடுக்கும் மானுடத்தை அறியச் செய்தது.

"Seven Samurai" எப்போதும் தேவையான போராட்டத்தை நடத்திப் பார்த்த பயிற்சி. இப்போதும் அதன் தாக்கம் குறையவில்லை என்பதால்தான் கால ரசிகனின் வாரிசு அகிரா என்றுணர்கிறோம். இந்த வரிசையில் அவரின் ஆகச் சிறந்த படைப்பாக முப்பொழுதும் நம்மிடையே உலவிக்கொண்டிருக்கும் "High and Low"தான் இப்படி போட்டு நம்மை இம்சிக்கிறது. நம்மிடம் வந்து நம்மை நாமே காணச் செய்யும் தருணத்தை இறைஞ்சுகிறது. அதிர்வும் அறமும் ஒருசேர ஒரு குடைக்குள் அண்டி மனம் விடும் வரை நடைபயில அழைத்தால்... அது என்ன வகை போதியை உணர்த்தும். அந்த வகை அதிகாரம்தான் இந்த சினிமா.

பேசிக்கொண்டே இருக்கும் இந்த சினிமாவில் காண்போரைப் பேச்சடக்கும் யுக்தி இருக்கிறது.

ஷூ கம்பனி வைத்திருக்கும் பார்ட்னர்களில் ஒருவர் கோண்டோ. நேர்மையும் நிதானமும் அறமும் கொண்ட முதலாளி. சக பார்ட்னர்ஸ் தரமில்லாத ஷூவைத் தயாரிப்போம் என்று யோசனை சொல்லும்போதுகூட அதிலிருந்து மாற்றுக் கருத்து கொண்டு அவர்களோடு சண்டையிட்டு நீதி பேசும் பெருமான். அப்படி ஒரு மீட்டிங் போய்க்கொண்டிருக்கும்போதுதான் தன் பையன் கடத்தப்பட்டிருக்கிறான் என்று தொலைபேசியில் ஒரு திகைப்பு வருகிறது. பதட்டம் தவிப்பு இயலாமை கோபம் கொந்தளிப்பு என்று அந்தத் தகப்பன் படும் பாடு.. அடுத்த சில மணித்துளிகளுக்குத் திரையைத் தாண்டி நமக்கும் தொற்றிக்கொள்ள ஆரம்பிக்கிறது. அதுதான் அகிராவின் காட்சி வடிவம். ஒரே காட்சியில் நாலைஞ்சு

பாத்திரங்கள் தனித்தனியாகச் சிந்தித்து நிற்கும் காட்சி அவரின் சிக்னேச்சர் காட்சி என்றே சொல்லலாம். மிகக் குறைவான சத்தத்தில் நிறைய பேசும் நுட்பத்தினூடாகத்தான் கதை நகர்கிறது.

குறிப்பிட்ட பணம் கொடுத்தால்தான் பையன் கிடைப்பான்... இல்லையெனில் கொல்லப்படுவான் என்று திட்டவட்டமாகச் செய்தி வந்து சேர்கிறது. `எத்தனை பணம் வேண்டுமானாலும் தருகிறேன். நான் பிறகு சம்பாதித்துக்கொள்கிறேன். என் பையனைக் கொடுத்துவிடு` என்று தந்தை கோண்டோ கெஞ்சுவது... அதன் தொடர்ச்சியில் பணத்தை எப்படி தர வேண்டும் என்று பேசுவது... எல்லாம் எல்லாம் அடுத்த நொடியில் திகைக்கச் செய்யும் திருப்பத்தோடு நம்மை நோக்கி அமைதியாக்குகிறது. அடுத்து நடந்த காட்சி மாற்றம்.

எல்லாரும் பணத்தைக் கொடுத்துப் பையனை மீட்டுவிடும் வேகத்தில் இருக்க... எதிர்பாராத வளைவு போல ஒலிப்பானின்றிப் பையன் வெளியே இருந்து வீட்டுக்குள் ஓடி வருவான். நிதானித்துச் சமாளித்துக்கொள்ளும் உடல்மொழியோடு ஓடிச் சென்று கட்டிக்கொண்டு முத்தமழை பொழிந்து ஆசுவாசப்படும் நேரத்தில்தான் கோண்டோவுக்கு மீண்டும் உள்ளே மணி அடிக்கும்.

அப்படி என்றால் கடத்தப்பட்டது... டிரைவரின் பையன்.

அதற்குள் போலீஸ் வந்துவிட்டிருக்கும். சக நண்பர்கள் வந்துவிட்டிருப்பார்கள். இப்போது என்ன செய்வது. கடத்தப்பட்டது தன் பையன் என்று தெரிந்ததும் அதுவரை மேலாப்பில் சோகம் அப்ப நின்றுகொண்டிருந்த டிரைவர் ஆழம் வரை மனம் நடுங்க தலை தாழ்த்தி ஏதாவது செய்ங்க என்று செய்வதறியாமல் நிற்கிறான். இல்லாதவன் தலை தாழ்ந்துதான் இருக்கும் என்று சொல்லாமல் சொல்கிறது காட்சி.

சட்டெனக் கோண்டோ பணம் தருவதில் தயக்கம் காட்ட ஆரம்பிக்கிறான்.

“அவன் என்ன பெரிய இவனா... அவன் கேட்டா பணம் குடுத்தரணுமா... அவனைக் கண்டுபிடிச்சு என்ன பண்றேன் பாரு... போலீஸ் இருக்கு... அவங்க பாத்துக்குவாங்க...” என்பான். மனைவி உட்பட போலீஸ் உட்பட நண்பர்கள் உட்பட எல்லாருமே திகைப்போடு பார்ப்பார்கள். இதே வாய் தன் பையனுக்கு என்று ஒன்று பேசியது இப்போது வேறொன்று பேசுகிறது. மானுடச்சலலித்தனம் வெளிப்படுகின்ற மிக நுட்பமான இடம். கடத்தப்பட்டது ஓனர் பையன் எனும்போது திகைத்தபடி நின்றுவிட்டுத் தன் பையன் எனும்போது தவிக்கும் டிரைவர் மனதிலும் மனுஷ புத்தியே அல்லாடுகிறது.

ஒரே அறைக்குள் நின்றுகொண்டு அங்கும் இங்கும் அலையும் கோண்டோ என்ன முடிவு எடுப்பான் என்று நாமும் பின்னாலேயே அலைவது அந்த டிரைவரைப் போலவே அத்தனை பரிதாபமானது. பிதற்றித் தத்தளிக்கும் பணமும் பொருளும் நிறைந்த அந்த வீட்டில் தன் டிரைவராக இருக்கும் சக மனிதனுக்கு இரங்குதல் பற்றிய ஊசலாட்டம் கொடுமையிலும் கொடுமை. ஒவ்வொரு முறை போன் அடிக்கையிலேயும் கோண்டோவின் தனி மனித மனப் போராட்டம் அல்லாட்டம் நிறைந்தவை. தனக்குப் போகத்தான் தானம். மற்றவருக்கு எனில் மதிய உணவுக்குப் பின் இரங்கல் தெரிவிக்கலாம்தானே. தான் சாவதும் மற்றவர் சாவதும் ஒன்றா என்ன. முன்னகரும் எது ஒன்றிலும் தன் பணம் இருப்பதை உணர்ந்த கோண்டோ... அதுவரை கொண்டிருந்த நல்லதனங்களைச் செய்வதறியாது சுமக்க ஆரம்பிக்கிறான். அது நல்லவன் எனும் சிலுவையின் கனத்தை ஏற்றிக்கொண்டே இருக்கிறது. சொற்களில் வேகம் கண்களில் தடுமாற்றம் சுயம் தன்னுள் கேள்வி வளையத்தைக் கொண்டு தன்னை நெருக்குவதைக் காட்டவும் வழியின்றி.. காட்டாமலும் வழியின்றி.. தன்னை யார் என்று தானே உணரும் இடைவெளியில் நாயகன் நெக்குருக தன்னையே வார்த்தெடுப்பதில் திரை தேர்ந்த காட்சி அமைப்பு மிளிர்கிறது.

கோண்டோவின் மனைவியும் சரி அவர்களின் மகனும் சரி டிரைவரின் மகனை

மீட்டெடுக்க எப்படியாவது உதவுங்க என்று மன்றாடுவார்கள். பணத்தை எப்போது வேண்டுமானாலும் சம்பாதித்துக்கொள்வேன் என்று சொன்னீர்களே என்று மனைவி கேட்கையில் பதிலுக்குக் கேள்வியைத் தேடுவான் கோண்டோ. அந்தச் சிறுவர்கள் இருவருமே நல்ல நண்பர்கள். அவர்கள் விளையாடிக்கொண்டிருக்கும்போதுதான் ஆள் மாற்றிக் கடத்தப்பட்டிருக்கிறான் டிரைவரின் மகன். இந்த விஷயம் தெரிந்தால் கடத்தினவன் அவனாக விட்டுவிடுவான் என்று சொல்லும் கோண்டோவுக்குத் தான் சொல்வது அபத்தம் என்று தெரியாமல் இல்லை. தடுமாற்றத்தின் உச்சியில் முதுகெலும்பற்ற புழுவாக நெளிகிறான். அபத்தங்கள் அப்படித்தானே.

அகிரா இங்கே மனோதத்துவத்தில் மனித தத்துவம் நிகழ்த்தி இருப்பார். நின்றுகொண்டே ஓடச் செய்யும் தனித்துவம் அது. உசிரு ஊசலாடுகையில்தான் பிசிறு தட்டும் மானுட மனம் புரிபடுகிறது. தன் முதலாளியிடம் சென்று `எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல` என்று அந்த டிரைவர் தலை தாழ்த்தி நிற்கையில்... "அப்ப ஒன்னும் சொல்லாத... அந்தப் பக்கம் போ" என்று பதிலுக்குக் கத்திவிட்டு ஜன்னல் தாண்டி வெறித்து பார்க்கும் கோண்டோ நம்மில் இருக்கும் பணக்காரன்தான். சொல்லில் சிக்காத அங்கலாய்ப்புதான் அந்தப் பாத்திரத் தன்மை. அந்த அறையில் முதலாளி நடக்கும் எல்லாப் பக்கமும் பின்னாலேயே அப்போதுதான் போடப்பட்ட தலை இல்லாத நாய்க்குட்டியைப் போல நடக்கும் அந்த டிரைவர் நம்மில் இருக்கும் பரம ஏழைதான். சிக்கிக்கொண்ட சொல்லையெல்லாம் அங்கலாய்ப்பின் வசமிருந்து மீட்டெடுக்க அருள்கூர்ந்து தயவு செய்து ப்ளீஸ் கெஞ்சிக் கேட்டுக்கறேன்... இன்னும் இன்னும் சரணாகதி ஆகும் வாழ்க்கையின் போக்குக்கு வார்த்தைகள் போதாது.

கடத்தல்காரனிடம் இருந்து அழைப்பு வரும்போதெல்லாம் ரிசீவரைக் கோண்டோ கவனமாகக் காதில் வைத்துக் கேட்க... அவன் மனைவியும் தன் காதைக் கணவன் முதுகில் சரித்து ஒட்டு கேட்க முயற்சிக்கும் காட்சி... இன்னமும் சொல்லப்போனால்... கூட இருப்போரெல்லாம் அப்படித்தான் கேட்க முயற்சிப்பார்கள். பறிகொடுத்தவன் வீட்டில் எல்லாமே காதுகள்தான் என்று நமக்குப் பெரிதினும் பெரிய பெருமூச்சு.

"எப்படியாவது காப்பாத்துங்க.. நான் வாழ்நாளெல்லாம் உங்களுக்கு வேலை செய்வேன்.... என் பையன் உங்க பையனுக்கு வேலை செய்வான்..." என்று அந்தப் பாவப்பட்ட அப்பா.. அந்த டிரைவர் - பேசும் வசனம் இந்த ஏழை பணக்கார விகிதாசாரத்தின் நடுவே உயிர் நடுங்க நிற்கும் இயலாமையின் சிணுங்கல். பசித்த பூனைக்குப் பதறத்தானே தெரியும். முதலாளியைத் தர்ம சங்கடத்தில் ஆழ்த்துகிறோமே என்று புரிந்துகொண்டு சற்று நேரத்தில் டிரைவர் தன்னையே தேற்றியபடி, "பணம் குடுக்க வேண்டாம் சார். அவன் என்னோட பையன்னு தெரிஞ்சா விட்ருவாங்க.." என்று சொல்லிக் கீழே விழுந்து அழுகையில்... திரை மீறும் தளும்பல்.

கோண்டோ என்ன முடிவெடுத்தார்... அவர்கள் அந்தக் கடத்தல்காரனைக் கண்டுபிடித்தார்களா.. எப்படி கண்டுபிடித்தார்கள்.. போலீஸ் டிபார்ட்மெண்ட் என்ன மாதிரி வேலையெல்லாம் செய்தார்கள்.. கோண்டோவின் மனிதாபிமானம் எந்தளவு இறங்கி வந்தது.. அந்த டிரைவர் எப்படி இதை எதிர்கொண்டார்.. அந்த மலை உச்சியில் பிரம்மாண்டமாய் வீற்றிருக்கும் அந்த வீடு இந்தச் சமூக அந்தஸ்தின் குறியீடா... இயலாமையும் ஆற்றாமையும்.. எங்கோ எதிலோ ஒளிந்துகொண்டு இந்த மாதிரி கோட்டுக்கு அந்தப் பக்கம் இருக்கும் மேல்தட்டுச் சமூகத்தை என்ன மாதிரி புரிந்துகொள்கிறது.. நல்லவனுக்கும் கெட்டவனுக்கும் இடையே இருக்கும் மெல்லிய கோட்டில் பணம் எனும் பேராயுதம் செய்யும் புரட்சி என்ன... என்று படம் நெடுகிலும் கசக்கும் உண்மைகள் போட்டுத் தாக்குகின்றன.

இந்தப் படம் பார்க்கும் ஒவ்வொரு முறையும் நாம் ஒவ்வொரு வேறு மனிதராக மாறுவோம். அந்த இன்னொரு மனதின் வடிவம் நம்மைச் சமநிலைப்படுத்தினால் நல்லது. ■

தொடர் - 2

● கோ.லீலா

பச்சைய பாத்திரமும் நீல சேலையும்

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவற்றைப் பேணிக்காத்தால் மட்டுமே பச்சைய பாத்திரம் என்றென்றும் அட்சயப் பாத்திரமாக மிளிரும்.

ஆனால், மனிதனோ காலங்காலமாக இயற்கையின் மீது செலுத்தி வரும் வன்முறை சொல்லில் அடங்காதது.

கடலும் காடும் முத்தமிட்டு உறவாடக் கசியும் அமுதம் மழையென்பதை மறந்தான் மனிதன்.

கடலில் கொட்டிய குப்பைகள், கடலின் சூழலியலை முற்றிலும் சிதைத்துவிட்டது. சமவெளியில் வாழ்கின்றவர்களோ கடலை ஒரு தட்டையான அறிவோடு அணுகுகிறோம். விளைவு காலநிலை மாற்றத்தோடு பல்வேறு இலவச இணைப்புகளாக நிலச்சரிவு, உப்பு நீர் உட்புகல் போன்றவையும் நிகழ்கின்றன...

கடலைப் பற்றிப் பேசும்போது, மின்னணுக் குப்பை பற்றிப் பேசாது இருக்க இயலாது...

அப்படி இன்றைய சூழலில், சூழலியல் பற்றிய நறுக்கு தெறித்தாற் போன்ற கவிதையொன்றைச் சமீபத்தில் படைப்பின் வெளியீடான பச்சையம் என்பது பச்சை ரத்தம் என்ற நூலில் படித்தேன். கீழ்க்காணும் கவிதைக்குச் சொந்தக்காரர் கவிஞர் பிருந்தா சாரதி அவர்கள்.

மின்னணுக் குப்பை

சொல்லவில்லையா

நம் அறிவே குப்பையென

மின்னணு இன்றைய உலகத்தை உள்ளங்கையில் தந்திருக்கிறது என்று இறுமாந்திருக்கும் நாம் மறந்துவிட்டது... மின்னணு உபகரணங்களைத் தயாரிக்கும்போது உருவாகும் கழிவுகளை. பயன்படுத்த முடியாத நிலையை அடைந்த மின்னணு உபகரணங்கள் குப்பையா, இவற்றையெல்லாம் எங்கே கொட்டுகிறோம்? அதன் விளைவுகள் என்ன என்பதை யோசித்திருக்கிறோமா?

மின்னணுக் குப்பைகளைக் கடலில் கொட்டுகிறோம், மற்றும் நிலத்தில் குவித்தும், எரித்தும் கடலை, நிலத்தை, காற்றை மாசுபடுத்திவிடுகிறோம்.

மின்னணுக் குப்பை என்ற ஒற்றை வரியில் விரிகின்ற செய்திகள்...

ஐ.நா.சபை அறிக்கையின்படி மின்னணுக் கழிவுகள் பிரச்சினையில் ஆசியாவில் இந்தியா

இரண்டாம் இடத்தில் உள்ளது. இந்தியச் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் புள்ளி விவரப்படி இந்தியாவில் மின்னணுக் கழிவுகளை உருவாக்குவதில் மும்பை முதலிடத்திலும், இரண்டாம் இடத்தில் தமிழகமும் உள்ளதாக அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

ஒரு நிமிடத்திற்கு உலகில் எட்டு டன் எடையுள்ள மின்னணுக் குப்பைகள் உருவாகுவதாக ஆய்வு அறிக்கை ஒன்று அதிர்ச்சித் தகவலை அளிக்கிறது... எதிர்காலத்தில் உலகமே ஒரு குப்பைத்தொட்டியாக மாறிவிடும் அபாயம் இருக்கிறது.

2021இல் மட்டும் தூக்கி வீசப்பட்ட மின்னணுக் குப்பைகள் 5.70 கோடி டன் எடை உடையதாக இருக்கிறது, இது சீனப் பெருஞ்சுவரின் எடையை விட அதிகம்.

நம் அறிவே குப்பையானது பெருந்துயரன்றோ!

ஆம் மிகவும் உண்மை, இதைக் குறித்து 2013ஆம் ஆண்டு தினமலரில் பொள்ளாச்சி பகுதி செய்தியில் *Impact of E -waste on water conservation* என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன்.

இன்று சுமார் 9 ஆண்டுகள் கழித்து, அதன் கருப்பொருளோடு ஒரு கவிதையைக் காண நேர்கையில் மகிழ்வும், நிலை மாறாது இன்னும் மோசமாகி இருப்பதை நினைத்து வருத்தமும் மேலிடுகிறது.

கடலில் கொட்டப்படும் மின்னணுக் குப்பையை உண்ணும் கடல்வாழ் உயிரினங்கள் மூலம் மனிதர்களின் உடலுக்கு இடம் மாறும்



இந்த மின்னணுக் குப்பைகள் உருவாக்கும் நோய்கள் ஏராளம்.

துசுயந்தன் வரலாற்றில் சகுந்தலை ஆற்றில் தவறவிடும் மோதிரம் மீன் வழியே துசுயந்தனை அடைவதுதான், நீர்வாழ் உயிரினம் மூலம் கன உலோகங்கள் மனிதனை அடைந்ததற்கான சான்று.

கடலில் எதை வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும் கொட்டலாம் என்கிற மனிதனின் தட்டையான அறிவு

குப்பையின்றி வேறென்ன.

கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கும் மடமை, குப்பை அறிவுதானே.

கடலின் சூழல் *(Ocean Ecology)* கெடுவதால் ஏற்படும் அபாயம் வனத்தை நிலைகுலையச் செய்யும்.

கடலும் வனமும் வான்வழியே பேசிக்கொள்ளும். கடல் வனத்திற்கு நிகராக 40% ஆக்ஸிஜனைக் கொடுத்து, கரியமில வாயுவை உறிஞ்சிக்கொள்ளக் கூடியவை. கடலின் மிகப்பெரிய நீர்பரப்பிலிருந்து ஆவியாகும் நீரைத்தான், வனங்கள் மழையாக்குகின்றன என்ற மிக நுட்பமான அவதானிப்பை இழந்த சமூகத்திற்கு, கடலைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது இன்றைய தலையாய கடமையாகும்.

கடல்வாழ் உயிரினங்களின் அழிவால், கடலின் வெப்பநிலை மாறும்போது பெரிய காலநிலைமாற்றம் உருவாகிறது.

பசிஃபிக் பெருங்கடல் சூடாகி உள்ளது, காரணம் கடலின் அடியில் 14 லட்சம் சதுரகிலோமீட்டருக்கு *Great pacific garbage patch* (பெரிய பசிபிக் குப்பை இணைப்பு) உள்ளது, என்பதை சார்லஸ் மோர் 1992இல் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்.

ஏற்கனவே காடுகளை அழித்துவிட்டோம் என்பதால் கடல் தன்னியல்பில் உறிஞ்சும் கார்பன் டை ஆக்ஸைடை விட அதிகமாக உறிஞ்சுகின்றது... இதனால் கடலின் வெப்பம் மாற்றமடைகிறது.

இதன் மூலம் லாநினா, எல்நினோ போன்ற காலநிலை மாற்றங்கள் உருவாகின்றன. ஏனென்றால், கடலுக்கடியில் கிடக்கும் குப்பையில் 46% மீன்பிடி உபகரணங்கள், மீதமுள்ளவை மின்னணுக் குப்பைகள். அதில் நெகிழி அதிகம், இவை துகள்களாக மாற 600 ஆண்டுகள் ஆகும்.

காலநிலை மாற்றத்திற்கும் அடிபோடும் இந்த மின்னணுக் குப்பைகள் பூமியின் யாவற்றையும் குலைத்துவிடக் கூடியவை என்பதை அறியாத அறிவு குப்பைதானே.

இந்த மின்னணுக் குப்பையில் அதிகம் இருப்பது சிலிகான், காரியம், யிட்ரியம், வெள்ளி, கேலியம், தங்கம், ஆர்சனிக், இன்டியம், டான்டுலம் எனப் பல்வேறு தனிமங்கள். இவைகளை எரிக்கும்போது வரும் நச்சால் ஏற்படும் நோய்கள் கணக்கிலடங்கா.

சென்னையில் 1/2 கிலோ மீட்டர் அளவேயுள்ள ரிச் ஸ்ட்ரீடில் உலகில் தேடப்படும் பல மின்னணுப் பாகங்கள் மலிவான விலையில் கிடைக்கின்றன. மறுசுழற்சி, சரிசெய்து பயன்படுத்துதல் என்பதற்கு இடமே கிடையாது, தூக்கி வீசிவிட்டுப் புதிதாக வாங்கிகொள்ளும் நுகர்வோர் கலாச்சாரம் பெருக, மின்னணுக் குப்பையும் பெருகிவிட்டது. இது சென்னையின் நிலை. மற்ற நகரங்களை எண்ணிப்பாருங்கள்!

வருங்காலச் சந்ததியினருக்குக் குப்பை உலகத்தையா தந்து செல்லப்போகிறோம்.

நீலம் ஜொலிக்கும் கரங்களில்தான் துளிர்க்கும் பச்சைய பாத்திரம்.

நீலம் காப்போம்! பச்சையம் வளர்ப்போம்!

அட்சய பாத்திரமான பச்சைய பாத்திரத்தைப் பத்திரப்படுத்துவோம்.

நூல் விமர்சனம்

கனகா பாலன்

கட்டைப்பையில் பத்திரமாகியுள்ள அம்மா

"கவிதை ஒரு அதிசய தூண்டில், அதில் எதிர்பாராமல் ஞானமீன் அகப்பட்டு விடுவதுண்டு."

கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் இந்த வரிகளின் உண்மைத்துவம் ஒவ்வொரு கவிஞனுக்குமான அனுபவ வேண்டலாகவே இருக்கக் கூடும்.

சதா சிந்தித்தலையும் கவிஞரின் மனதிற்குக் கரு உண்டாதல், கண்டது யாவிலும் கிடைக்கப்பெறுதல் அல்ல. மின்னும் மின்னலுக்கும் குறைவான நொடியில் உள்ளத்தில் வித்தாகி, விஸ்வரூபம் எடுப்பதுதான் கவிதை.

அடர்ந்து தரையொட்டி வளரும் குட்டித் தாவரங்களின் மீதான ஈர்ப்பைப் போலவும் அது தரும் பயன்களைப் போலவும் இரண்டு வரி மூன்று வரிக் கவிதைகள் சிலருக்குத் தாரக மந்திரமாகும் அளவிற்கு, வாழ்க்கையையே புரட்டிப்போடும் வீரியம் மிக்கவையாக இருப்பதுண்டு.

நெடிய நெடிய வளர்ந்து செல்லும் கொடிகளைப்போல, நீண்டுகொண்டே செல்லும் வரிகளில் சில வாசிப்பு மயக்கத்திற்கு உண்டாகி, வாசகனை ஈர்த்து வைத்துக்கொள்ளும் அற்புதமானவை..

ஆனால் இவை இரண்டுக்குமான நிதான வரிகளில் அன்பு, காதல், பாசம், அரசியல், சமூகம் என அத்தனை தளங்களையும் கவிஞர் தம் நேர்மையான பார்வையால் இத்தொகுப்பில் கவிதையாக்கியிருக்கிறார்.

ஈர்ப்புகள் பூசப்பட்ட சொற்களால், ஈர நெஞ்சம் கசியவிடும் அன்பின் மகோன்னதம் உணர்த்தும் கவிதைகள்.

கவிஞர் வத்திராயிருப்பு தெ.சு. கவுதமன் அவர்களின் "அம்மாவின் கட்டைப் பை" என்ற கவிதை நூலினை உணர்வுகளின் கதம்பம் என்றுகூட சொல்லலாம்.

தினம் மலரும் பூக்களின் சாதுவான புகைப்படத்தோடு தொடங்கும் கவிஞரின் முகநூல் பக்கம். தொடர்ந்து காட்டமான அரசியல் அதிகாரப் பிழைகளையும் அநாயசமாக அலசி ஆயும் கட்டுரைகளால் தனித்துத் தெரியும் வல்லமையானவை.

உழைப்பிற்கும் பிழைப்பிற்கும், பிறந்த மண்ணையும் பெற்றோர்களையும் விட்டுப் பிரிந்து வேறு ஊர் வேறு நாடெனப் பிள்ளைகளின் வாழ்வு அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ வாய்த்துவிடுகிறது.

அடிக்கடி சென்று பார்த்தாலும் அருகில் இருந்து கவனித்தது போலிருப்பதில்லை.



ஆனால் சந்திக்கக் கிடைக்கும் ஒவ்வொரு நொடியிலும், எத்தனை வளர்ந்திருந்தாலும் அம்மாவுக்கு எப்போதும் அவர்கள் குழந்தைகளாகத்தானே இருக்கிறார்கள்.

அம்மாக்கள் என்றுமே பிள்ளைகளுக்குக் கொடுத்து மகிழும் நிலையில் இருப்பவர்கள். அன்பாக இருந்தாலும் சரி, பண்டமாக (பொருளாக) இருந்தாலும் சரி.

குலசாமிக்குப் படையலிட்டுத் தொடங்கும் ஒரு நல்ல காரியத்தைப் போலவே, அம்மாவுக்காக முதல் கவிதையை எழுதிச் சமர்ப்பித்த பாங்கு நெகிழச்செய்கிறது அளவுக்கு அதிகமாகவே.

“அம்மாவின் செல்பேசி

மணிக்கொருமுறை ஒலிக்கிறது

“எங்கே வந்து கொண்டிருக்கிறீர்கள்?”

மறுமுனையில் வெவ்வேறு குரல்கள்”

அவளால் அறிமுகமாகும் இவ்வுலகு, அவளற்றுப் போகையில் எதிர்கொள்ளத் திராணியற்றுத் திணறும் தன்மை இப்படி முதல் கவிதையில் வரிகளாக்கி அழவைத்து விடுகிறார்.

தேம்பும் குழந்தை, சமாதானத்துக்குத் தேடியலையும் ஆறுதலாய், தன் நினைவுகளைப் பின்னோக்கி இழுத்துச் சென்று ஆசுவாசம் கொள்ளும் தெளிந்த மனம் இந்நூலின் ஆசிரியருக்கானது.

முதல் ஐந்து கவிதைகளில் அம்மாவின் அன்பு, கசாயம் ஊட்டும் கை வைத்தியம், தோப்பில் விளைந்த தேங்காய்களை நிரப்பித் தந்த “அம்மாவின் கட்டைப் பை”, அழகான கோலமென நிறைந்திருந்த அம்மாவை வாசிக்குந்தோறும் அன்னை மடியினை உடனே வேண்டுமென்கும் நமது மனமும்.

அம்மா வாழ்ந்த காலத்தை, அவளுக்குப் பிடித்த கட்டைப் பையில் ஒன்றுவிடாமல் பத்திரமாக்கி, நினைக்குந்தோறும் ஒவ்வொன்றாக உருவி எடுத்துக் கண்கள் நிறைய பார்த்துக்கொள்வதற்கெனவே படைக்கப்பட்ட கவிதைகள். இறந்தாலும் இருத்தி வைத்திருக்கிறார் எழுத்துக்களில்.

“மழைநீரை இழுத்துப் பிடித்த மேகங்கள் ஏதோ ஒரு கணத்தில் ஆற்றாமையால் மனமுடைந்துதான் பொழியக்கூடும் பெரும் மழையை..”

மறைமுகமாகவோ? நேரடியாகவோ? மனிதனுக்கு இயற்கைக் கற்றுத்தரும் பாடங்கள் அதிகம். அத்தகு இயற்கையின் செயல்பாடுகள் மனித உணர்வுகளைப் பிரதிபலிப்பதாகவும் மேற்கண்ட வரிகளில் அமைத்திருக்கிறார் நூலாசிரியர்.

எனக்கு ஏனோ அடக்கி வைத்திருக்கும் கண்ணீர் பிடித்தவர் முன் தோற்றுப்போவது போலவே தோன்றியது.

“தொட்டிச்செடியெனத்

தான் இருக்குமிடத்தில்

அடக்கமாய் இருக்க பழகிவிட்டனர்

வீட்டுப் பூஜையறையில் சிறிதும்
பெரிதுமாய்

காலண்டர் அட்டையிலுமாய்

பத்துப் பதினைந்து கடவுளர்கள்”

எங்கும் நிறைந்திருக்கும் இறைத்தன்மையின் ஆர்ப்பாட்டமின்மையில்லா நம்பிக்கையினைப் பூடகமாக எடுத்துரைத்த பாங்கு மிக அற்புதமானது.

வருட முடிவிலும் கிழித்தெறியவோ, தூர வீசவோ இயலாத காலண்டர் அட்டைக் கடவுளர்களைப் பூஜை அறையில் அமர்த்தி வைத்து வணங்கத் தொடங்கும் ஏழ்மை மற்றும் நடுத்தர வர்க்கத்து மக்களின் செயல்பாடுகளை அசத்தலான கவிதையாக்கியுள்ளார் கவிஞர்.

அங்கு மட்டுமல்ல, கவிஞரின் இந்த நூலிலும் அங்கங்கு கடவுளர்களை நிறுத்திவைக்கத் தவறவில்லை.

“சகுனிகளின் சாம்ராஜ்யத்தில்

சூதாட்ட தருமன்களை

சூது கவ்விக்கொண்டேயிருக்கிறது

இன்னமும்

பாஞ்சாலியின் சேலையை

உருவிக் கொண்டேயிருக்கிறார்கள்

கிருஷ்ண பரமாத்மாக்கள்

எங்கோ பார்த்தபடி

கமிஷனை எண்ணியபடி”

காலங்காலமாகப் பணயமாகப் பறிபோகும் பெண்ணின் வாழ்வு. காப்பாற்றுகிறேன் என்று களத்தில் குதிப்பவர்களால் கூட, முழுமையாக அதனை மீட்டெடுக்க முடிவதில்லை.

எத்தனைச் சட்டங்கள் வந்தாலும் திருந்தாப் பிழையிது. நீதியைக் கொன்றுவிடும் மனிதனின் குறுக்குப்புத்தி என்றுதான் சொல்லத் தோணுகிறது.

வாழ்ந்த காலம் மரணத்தால் வகுபடும்போது, வழியனுப்ப வந்தவர்களின் மொத்த எண்ணிக்கைதான் அம்மனிதன் ஈவுச் சேமிப்பான வாழ்ந்த காலம். இதைத்தான் கவிஞர் அவர்கள் தனதொரு கவிதையில் கூறுகிறார்..

“ரோஜாக்களின் வாசத்தால் ஆறுதல் படுத்தப்படும் மரணவீட்டின் அழுகை மறுநாள் விடியலில் சாம்பலின் வாசத்தால் முடியும்..”

மிக நீண்ட கவிதையின் இறுதி நான்கு வரிகள், மனித வாழ்வின் மொத்தத்தையும் சொல்லிக் கனக்கிறது.

“சுவர்களில் எழுதிப் பாடம் நடத்தி

உறவாடிய கரங்களின் தொடுதலின்றி

தனித்திருக்க தடுமாறும் சுவர்கள்..”

ஆன்ட்ராய்டு வந்தபின்பு சுவர் கிறுக்கலை மறந்துபோன குழந்தைகள். ஷாக்பீஸ், பென்சில் கோடுகளாகச் சுவரோடு பேசிக்கொண்டிருந்த குழந்தைகள், இப்போது கண்டுகொள்வதேயில்லை என்பது வருத்தம்தான் இல்லையா..?

“மளிகைக் கடைக்குத்தான் முதலாளி

கடைசியாக சரக்கு வாங்கவரும்

பரோட்டா கடைக்காரருக்கு

நான் முதலாளியில்லையே..”

யாரோ எழுதிய வரிகளில் சிலரின் வாழ்வு சம்மணங்கால் போட்டு அமர்ந்திருக்கும். அதுபோலத்தான் இருந்தது எனக்கிந்த கவிதை. கண்கள் மூட நினைவில் வாழும் எனது அப்பா, கல்லாப்பெட்டியொட்டிய நாற்காலியில் அமர்ந்திருந்தவர் நிமிர்ந்து பார்த்து அம்மாவிடம் சொல்வது போல் எனக்குக் கேட்டது. நெகிழ்ந்தேன்.

கொரோனா கட்டுப்பாடாகத் திருமண வீட்டில்

முப்பது பேர்களுக்கு மட்டுமே

வாழ்த்த அனுமதி

அய்யோ பாவம்

வேலையில்லாத் திண்டாட்டத்தில்

முப்பத்திமுக்கோடி தேவர்கள்...

கொடுமைக் கொரானா காலத் தாக்கத்தை, கவிதையாக மாற்றி ஆறுதல் கொண்டிருக்கிறது “அம்மாவின் கட்டைப் பை” யிலிருக்கும் ஒன்றிரண்டு பக்கங்கள்.

அடிக்கோடிட்டும் அடைப்புக் குறிக்குள்ளுக்கும் இருக்கத்தான் செய்கின்றன இன்னும் பல கவிதைகள் தன் சிறப்புகளை ஏந்தியபடி.

உலகம் உருண்டை என்றது

வட்ட கண்ணாடிக் குடுவையில்

நீந்தும் மீன்

உலகம் சதுரமென்றது

நீள்சதுரக் கண்ணாடிப் பெட்டியில்

நீந்தும் மீன்

உலகம் என்ன வடிவமென்றே

கண்டுபிடிக்க முடியவில்லையென

வருந்தியது கடல்மீன்

இந்தக் கவிதையில், நச்சென்று எனக்கு உணர்த்தியது *அவரவர் வாழ்வு அவரவர் புரிதல்* என்ற உண்மையைத்தான்..

கவிதையாக நிரம்பியிருக்கும் “அம்மாவின் கட்டைப் பை”யில் எளிய சொற்கள், வாசிக்கக் கனமின்றி இலகுவாக ஒட்டிக்கொள்கின்றன மனதில்..

கவிஞர் கவிஞர் வத்திராயிருப்பு தெ.சு. கவுதமன் அவர்களுக்குப் பாராட்டுக்களோடு வாழ்த்துக்கள். ■

● கரிகாலன்

தேநீர் சாலை

நாளென்பது!

~

ஒரு நாள் என்பது என்ன? பில்லியனில் அமர்ந்திருந்த வள்ளுவனிடம் கேட்டேன்.

'நாளென ஒன்றுபோற் காட்டி உயிர்ஈரும்

வாளது உணர்வார்ப் பெறின்.'

இவர் தொல்காப்பிய மொழியில் கூறுகிறாரே! நம்ம பசங்களுக்குப் புரியாதே!

ட்ரிபிள்ஸ்தானே போகிறோம். எனவே அவருக்குப் பின்னால் உட்கார்ந்திருக்கிற கலைஞரிடம் கமலஹாசன் காலத்து மொழியில் உரை கேட்டேன்.

'வாழ்க்கையைப் பற்றி உணர்ந்தவர்கள், நாள் என்பது ஒருவரின் ஆயுளை அறுத்துக் குறைத்துக்கொண்டேயிருக்கும் வாள் என்று அறிவார்கள், உடன்பிறப்பே!' என்று கரகரத்தார்.

இந்த நாள் நிச்சயம் ஆயுளின் ஒரு பகுதியை அறுக்கப்போகிறது. இந்த நாளுக்குரிய ஒரு நல்ல காட்சியைக் காணவேண்டுமே! எனத் தோன்றியது. இருவருக்கும் கரும்பு ஜூஸ் வாங்கிக் கொடுத்து *bye* சொல்லி விடைபெற்றேன்.

கடவுள் நல்லவர். மாலை சந்தை தோப்புக்குத் தமிழுடன் சென்றிருந்தேன். அங்கு ஒரு பாய்! பாப்கார்ன் பொறித்துச் சுடச்சுட விற்பனை செய்வார். வழக்கமாக சிந்து சுடருக்கு வாங்குவேன். என்னதான் டாக்டர்ஸ் என்றாலும் இன்னமும் அப்பா வாங்கிக் கொடுக்கிற பாப்கார்ன் சாப்பிடுகிற குழந்தைகளே!

அவரிடம் பாப்கார்ன் வாங்க பைக்கை நிறுத்தினோம். அப்போதுதான் அந்த அழகிய

காட்சி. ஒரு பெரியவர். கொளுத்துவேலை முடிந்து வீடு திரும்புகிறவர். சைக்கிளை நிறுத்தி, ஸ்ட்டேண்ட் போட்டு, பாயிடம் பாப்கார்ன் வாங்கிக் கொரித்துக்கொண்டிருந்தார்.

வயது முதிர்ந்திருந்தாலும் உழைப்பில் இறுகிய திடகாத்திரமான உடம்பு. கால்களில் சிமெண்ட் படிவு. கைலியை மடித்துக் கட்டியிருந்தார். சைக்கிளில் ஒரு வொயர் பை. அதில் ஒரு அழுக்கான மங்கிய துண்டு. மதிய உணவு எடுத்துச் சென்ற காலி சில்வர் டப்பா.

அந்த வயோதிகரை நகரின் சந்தடி, இரைச்சல் ஒன்றுமே செய்யவில்லை. கிரிஸ்ப்பியான பாப்கார்னின் உப்பு, லேசான காரம் கலந்த சுவை, அதன் மணம், அவர் முன்னாலிருந்த இந்தச் சிறு நகரை அணைத்து அமைதியாக்கி வைத்திருந்தது.

ஒலி குறைக்கப்பட்ட டிவி போல இந்த வீதி அவர் முன்னால் ஊமையைப்போல இயங்கியது. வானத்தை அண்ணாந்து பார்த்தவாறு பாப்கார்ன் கொரிப்பதை ஒரு தியானமாக மாற்றியிருந்தார்.

இப்படி ஒரு தின்பண்டத்தை நிதானமாக ரசித்துச் சாப்பிடுகிற மனநிலையை நானெல்லாம், என்றோ இழந்துவிட்டேன்! ஒரு சாக்லெட்டை, ஐஸ்க்ரீமை சுவைத்துச் சாப்பிடுகிற பொறுமை இல்லை! உணவைப்போலவே மென்று விழுங்கிவிடுவேன்.

ஒருநாள் அளித்த எல்லா வலிகளையும் மறந்து, பெரியவரோ பாப்கார்னை ஏதோ அமுதத்தைச் சாப்பிடுவதுபோலக் கொரிக்கிறார். இவரோடு வேலை செய்தவர்கள் அநேகமாக டாஸ்மாக் போயிருப்பார்கள். அங்கே பிராந்தியில் கலக்கக் கொஞ்சம் தண்ணீருக்காக யாரிடமாவது கெஞ்சிக்கொண்டிருப்பார்கள். ஒரு ஊறுகாயும் இல்லாமல் அந்தக் கருமாந்திரத்தை மடக்மடக்கெனக் குடித்துத் தொலைத்திருப்பார்கள்.

ஆனால் இந்த முதியவரோ, நிதானமாகப் பாப்கார்ன் சாப்பிடுகிறார். நட்சத்திரங்கள் வானில் தோன்றி அவர் கண்களில் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன!

'நாளென ஒன்றுபோற் காட்டி' குறளை, அதன் பொருளை இந்தப் பெரியவர் அறிந்துவைத்திருக்க மாட்டார். இவர் படிக்காத வள்ளுவர். தனக்கான குறளை, ஒரு பாப்கார்ன் சாப்பிடும் செய்கையின்வழி எழுதுகிறார்.

வாழ்வென்பது சிறு போழ்து! அதை ஒரு கைப்பிடி பாப்கார்ன்வழி கடக்க முடியும். ஒரு நாளை, வள்ளுவன் வாள் என்கிறான். ஆயுளையல்ல! ஒரு அனுபவத்தை அறுவடை செய்த வாளிது!

*

உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்!

~

வேலையில் சேர்ந்த புதிது. நானும் தமிழும் விருத்தாசலம், ஆயியர்மடத் தெருவில் வாடகை வீட்டில் குடியிருந்தோம். நாய் வளர்க்கக் கூடாது! எனக் கூறித்தான் வீடு கொடுத்தார்கள். அப்போது சிந்து கைக்குழந்தை. சுடர் வயிற்றில்.

ஒரு மழைக்கால நள்ளிரவு. பாத்ரூம் போக எழுந்தேன். மெலிதாக ஏதோ கத்தும் சத்தம். சத்தம் வந்த திசையில் சென்றேன். கிச்சன் சிங்க்குக்குக் கீழே ஒரு வெள்ளை நாய்க்குட்டி.

தமிழை எழுப்பினேன். 'கிச்சனில் ஒரு நாய்க்குட்டி!' என்றதும் தூக்கம் கலைந்தார்.

வீட்டுக்கு அருகே ஆற்றங்கரை.

புதர் போன்ற இடம். முதல்நாள் மாலை. பள்ளிவிட்டுத் தமிழ் வந்திருக்கிறார். இந்த நாய்க்குட்டி மழையில் நனைந்து, நடுங்கியபடி நின்றிருக்கிறது. எடுத்து வந்திருக்கிறார்.

'வீட்டுக்காரர் நாய் வளர்க்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கார். ஞாபகம் இல்லையா?' முறைத்தேன். பிறகு படுத்துத் தூங்கிவிட்டேன். சிறிதுநேரம்தான். மீண்டும் மெலிதான சத்தம். அழுகையொலி போலிருந்தது. எழுந்தேன். பக்கத்தில் தமிழ்தான். அழுதபடி படுத்திருந்தார்.

நான் சண்டை போட்டதால், நாய்க்குட்டியைத் தூக்கிவந்த இடத்திலேயே விட்டுவந்திருக்கிறார். மழை வேறு பெய்கிறது. குடையை எடுத்துக்கொண்டு வெளியே வந்தேன். ஆற்றங்கரை புதருக்குச் சென்றேன்.

அங்கு, அந்தக் குட்டி மழையில் நடுங்கியபடி பாவமாக நின்றது. தூக்கினேன். ஆதரவாக ஒட்டிக்கொண்டது. கையை நக்கியது. முதலில் அசூசையாக இருந்தாலும், அந்த அன்பின் ஸ்பரிசம் மழைக்குளிரில் இதமாக இருந்தது.

மறுநாள் காலை. விடுப்பு சொல்லிவிட்டு, அந்த நாய்க்குட்டியை மருங்கூருக்கு எடுத்துச் சென்றேன். எங்கள் வயல்களைக் குத்தகைக்குப் பயிர் வைக்கும் தம்பி வீரகாந்தன். அவரிடம், அதை ஒப்படைத்து வளர்க்க வேண்டினேன்.

'உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் தெய்வம் உண்மை என்று தானறிதல் வேண்டும்!' என்று எனக்கு உணர்த்தியவர் தமிழ்.

அவரை மணம்புரிந்து எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்த நேரம். தமிழ் அவர் ஊரில் ஒரு நாய் வளர்த்தார். தினமும் அது அவரோடு பள்ளிக்குச் செல்லும். மாலை அவரோடு வீட்டுக்குத் திரும்பும். தமிழ் வேலையை விட்டு எங்களுருக்கு வந்த பின்னும் அந்த நாய் தமிழ் பள்ளிக்குப் போனது. திரும்பியது. எதுவும் சாப்பிடாமல், தூங்காமல் பிரிவுத் துயரில் சில நாட்களிலேயே செத்துப்போனது.

அன்பு என்பது என்ன? மனிதநேயம், இரக்கம், பாசம் ஆகியவற்றைக் குறிக்கும் நல்லொழுக்கமே அன்பு. இதைத்தான், 'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி உள்ளே ஒத்துரிமையுடையவராய்' என்பார் வள்ளலார்.

நேற்று அமேசான் பிரைமில் இத்தகைய உயிரிரக்கம் கோரும் படம் ஒன்றைப் பார்த்தேன். நல்ல காரியங்களைத் தொடர்ந்து செய்துவரும் நட்சத்திரத் தம்பதிகள் சூர்யா, ஜோதிகா தயாரித்திருக்கும் படம் 'ஓ மை டாக்'.

குழந்தைகளுக்கென்று கதைகள், பாடல்கள், நாடகங்கள், சினிமாக்கள் இல்லை! என எல்லோரும் புலம்புகிறோம். ஒரு சிலரே நம்மால் இயன்றதைச் செய்வோம் எனக் களத்தில் இறங்குகிறார்கள்.

வேலுசரவணன் போன்ற நாடகக் கலைஞர்கள், விஷ்ணுபுரம் சரவணன் போன்ற புனைகதையாளர்கள் இக்குறையைத் தீர்க்க தம்மளவில் முயல்கிறார்கள். சூர்யா, ஜோதிகா, இயக்குநர் சரோவ் சண்முகம் போன்றோர் ஓ மை டாக் போன்ற படங்களை உருவாக்குகிறார்கள்.

ஓ மை டாக் இராம. நாராயணன் டைப் படம் இல்லை. உயிரினங்களை வைத்து சர்க்கஸ் செய்யாமல், உயிர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும்! எனும் தாக்கத்தை உருவாக்குகிற படம்.

ஓ மை டாக் கதையைச் சுருக்கமாகப் பார்ப்போம். உயரின நாய்களை வளர்ப்பது, சர்வதேச நாய்க் கண்காட்சிகளில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்வதென ஆர்வம் காட்டுகிறவர் வினய். தொடர்ந்து தன்னுடைய நாயே சாம்பியனாக வர வேண்டும் என்பதற்காக எத்தகைய வில்லத்தனங்களையும் செய்யத் தயங்காதவர். இவரது சைபீரியன் ஹஸ்கி பிறவியிலேயே கண் தெரியாத குட்டி ஒன்றை ஈனுகிறது.

தன் வேலையாட்களிடம் அதைக் கொன்று புதைக்க உத்தரவிடுகிறார். அவர்களிடமிருந்து தப்பும் அந்தக் குட்டி அர்னவ் விஜய்யிடம் தஞ்சமடைகிறது. படத்திலும் அருண் விஜய்யின் மகனாக நடித்திருக்கிறான் சிறுவன் அர்னவ்.

கண் தெரியாத அந்த நாய்க்குட்டிக்கு சிம்பா (தி லைன் கிங் ஞாபகமாக) எனப் பெயர் வைக்கிறான். அதன் மீது அவன் காட்டும் பாசம் காண்பவரை நெகிழ்ச்சியடையச் செய்து கண்ணீரை வரவைப்பதாக இருக்கிறது.

தன் கண் தெரியாத நாய்க்குட்டிக்குப் பார்வை வரவழைக்க நண்பர்களோடு சேர்ந்து காசு சேர்ப்பது, வினய்யின் வேலையாட்கள் கடத்தும்போது அதை மீட்பது, நாய்களுக்கான போட்டியில் பங்கேற்க தந்தை உதவியோடு பயிற்சியளிப்பது! என அர்னவ், நாம் நம் வீதியில் பார்க்கும் நாயன்பு கொண்ட சிறுவர்களைக் கண்முன் நிறுத்துகிறான்.

உயிரினங்கள் மீது சிறுவர்கள் கொள்ளும் அன்பு, தனக்குத் தீங்கு செய்வோரையும் மன்னிக்கும் மனசை அவர்களிடம் எவ்வாறு உருவாக்குகிறது? கருணை, இரக்கம் போன்ற உயரிய குணங்களை அவர்களிடம் எவ்வாறு வளர்க்கிறது? என்பதை ஓ மை டாக் வெளிப்படுத்துகிறது.

'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருட்கருணை செய்வாய் பராபரமே!' என இறைஞ்சுகிறார் தாயுமானவர்.

பாரதியும், வள்ளலாரும், தாயுமானவரும் கூறியதை நம் வாழும் காலத்தின் காட்சி மொழியில் பேசுகிறது இப்படம்.

எங்கள் வீட்டில் சிந்து, சுடர், கார்க்கி மட்டும் வளரவில்லை. ஜெர்ஸி, ஃபெலீஷியா போன்ற நாய்களும் வளர்ந்தன. சாம்சங், நோக்கியா, போன்ற பூனைகளும் வளர்ந்தன. வளர்கின்றன. வெளியூர் சென்றால் இவர்கள் பொருட்டு எங்களால் ஓர் இரவுகூட தங்க முடிந்ததில்லை.

பெற்றோர்களைவிட குழந்தைகளை நாய்களும் பூனைகளுமே நன்றாக வளர்க்குமென அறிந்தவர்கள் நாங்கள். இச்சிற்றுயிரிகளின் கண்களில் அன்பின் சமுத்திரத்தைப் பார்த்தார்கள் சிந்து, சுடர், கார்க்கி மூவரும். அவை, இக்குழந்தைகளின் கிளைகள் மீது ஏறி விளையாடியபோது, அக்கிளைகளில் மொட்டுகள் உதிர்ந்து, பூக்கள் மலர்ந்தன.

நம் குழந்தைகள் வாழ்க்கையில், தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, மாமா, அத்தை.. இத்தகைய உறவுகளைப்போல, ஃபெலீஷியா, ஜெர்ஸி, ஸிம்பா போன்ற நாய்க்குட்டிகளும் இருக்கின்றன.

அவை நம் குழந்தைகளின் மனசை மிருதுவாக்கின. ஈரமாக்கின.

இந்தக் கோடையைக் குழந்தைகளோடு கொண்டாட 'ஓ மை டாக்' அவசியம் பாருங்கள். ஒரு நாய்க்குட்டியை நேசித்து வளர்க்கிற குழந்தைகள், வயதாகும்போது தம் பெற்றோரை மட்டும் நடுத்தெருவில் விட்டுவிடுமா என்ன?

*

சேது எக்ஸ்பிரஸ் அபத்தங்கள்!

~

அதிகாலை 3.10. முத்து நகர் எக்ஸ்பிரஸைப் பிடிக்க வேண்டும். பைக்கை ஸ்டேண்டில் நிறுத்தி, அரக்கபறக்க 2வது நடைமேடைக்கு ஓடிவந்தேன். S9 எங்கே நிற்கும்? போலீஸ் யுவதியிடம் (ராஷ்மிகா மந்தனா ஜாடை) டீ பாயிடம் யு டியூபில் பீஸ்ட் அப்டேட் தேடிக்கொண்டிருந்த இளைஞனிடமெல்லாம் கேட்டு, குத்துமதிப்பாக ஓர் இடத்தில் நின்றேன்.

அங்கு என்ஜின்தான் நின்றது. பிறகு ஓடினேன்.. ஓடினேன். S9 நோக்கி ஓடினேன். அப்பாடா! 3, upper. ஏற்கெனவே ஒருவர் அங்கு குறட்டை விட்டுக்கொண்டிருந்தார். தட்டுங்கள் திறக்கப்படும்! ஏசுநாதர் கூறியபடி தட்டினேன். குறட்டை நிற்கவே இல்லை.

மிடில் பெர்த்தில் குறட்டையின் அம்மா. கீழே மனைவி. 'சார் சரியா பாருங்க!' என்றார் குறட்டையின் மனைவி. என் ஃபோன் ஸ்கிரீனைப் பார்த்த சைட் அப்பர், 'ஆமாம், சாருக்கு 3 அப்பர்தான்!' உதவிக்கு வந்தார். மனைவி மீண்டும் குறட்டையை எழுப்பினார். ம்ம்கூம்! டென்ஷனானேன். எவ்வளவு அலட்சியம். தொடையில் வேகமாகத் தட்டினேன்.

'உறங்குகின்ற கும்ப கன்ன!

உங்கள் மாய வாழ்வு எலாம்

இறங்கு கின்றது இன்றுகாண்

எழுந்திராய் எழுந்திராய்!'

எழுப்பினேன். சைட் அப்பர் மேலேயிருந்து மீண்டும் என் செல்ஃபோன் ஸ்கிரீனை உற்றுப்பார்த்தது.

'சார், உங்க டிரெய்ன் பியர்ல் சிட்டி. இது சேது எக்ஸ்பிரஸ்!'.

உளுந்தூர்பேட்டை வந்திருந்தது. கு.கர்ணன் மனைவி, அம்மா இருவரும் புழுவைப்போல் பார்த்தார்கள். கு.க மனைவி, 'ஓடிப்போய் பாத்ரூம்ல நின்னுக்குங்க. டிடிஆர் ஃபைன் போட்டுவிடுவார்!' நக்கலடித்தார்.

பாத்ரூம் சுவரில் சாய்ந்தபடி யூடியை எட்டிப்பார்த்தேன். ஜூனியரும் ராம்சரணும் 'நாட்டு நாட்டு' ஆடினார்கள். நேற்று ஆர் ஆர் ஆர் படத்தை விமர்சிக்கிறோமென, ராமரை ரொம்பத்தான் கழுவி ஊற்றிவிட்டோமோ?

சேது எக்ஸ்பிரஸ் ரூபத்தில் சோதிக்கிறாரோ? சேது - வடசொல். அணை எனப் பொருள். எந்தக் கல்லூரியிலும் எஞ்சினியரிங் படிக்காத குரங்குகள் கட்டிய சேது! பாலம்கட்ட அணில்கள் ராமனுக்கு உதவியதாக எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால் கம்பனோ, வால்மீகியோ, துளசிதாசனோ அவ்வாறு சொல்லவில்லை.

அதேவேளை, தொண்டரடிப்பொடி ஆழ்வார் அணில்கள் உதவியதாகச் சொல்கிறார். என்முன்னால் திருமழிசையாழ்வார் தோன்றினார். 'இனியாவது தல கிட்ட (ராமனோட) வச்சிக்காத!'

'ஓத மாகடல் வண்ணா உன் மண

வாட்டி மாரோடு சூழறும்

சேதுபந்தம் திருத்தினா யெங்கள்

சிற்றில் வந்து சிதையேலே'

'என்னோட சேது எக்ஸ்பிரஸ் பாசுரத்தை மூன்று தடவை சொல்லு. விழுப்புரத்துல இறங்கி, 3வது பிளாட்ஃபாரத்துல நில்லு! பியர்ல் சிட்டி பின்னாலயே வரும்!'

'எல்லாம் சரிதான். பியூஷ் கோயல் ராம பக்தர்தானே? சேது எக்ஸ்பிரஸ் பாத்ரூமை நல்லாக் கழுவச் சொல்லுங்க. கப்பு தாங்கல!' என்றேன்.

'திருந்தவே மாட்ட!' முறைத்து மறைந்தார் திருமழிசையாழ்வார். ▪

ஜவ்வாது முஸ்தபா
ஓவியங்கள் - அழ.ரஜினிகாந்தன்

வாரிசு

“அழாதடா கண்ணு... அழாத... உனக்கு “ராதா” (குழந்தையின் அப்பாவின் அப்பா) என்னென்ன வாங்கி வந்து இருக்கிறேன் தெரியுமா? புதுத்துணி, பெரிய்யச் சாக்லேட்டு எல்லாமே ஒனக்குதான்டா... அழாதடா எங்க ராசா இல்ல நீ...” என்று அஸ்லாம் பாய் தன்னால் முடிந்தவரை பிடிவாதமாய் அழும் மகன் வழி பேரன் அபுதாகீரைச் சமாதானப்படுத்த முயன்றுகொண்டு இருந்தார். அவனோ அவரின் பிடியிலிருந்து நகர்ந்துவிட கை கால்களை அசைத்தபடி சத்தமாய் அழ ஆரம்பித்தான்.

“என்னங்க புள்ளைய இப்படி அழவெச்சுட்டு இருக்கீங்க. ரெண்டு புள்ளையிக்குத் தகப்பன்தானு பேரு? இன்னும் பேரனைக்கூட அழாம வெச்சுக்கத் தெரியல” என்று ஒரு பொய் கோபத்துடன் அஸ்லாம் பாயின் மனைவி ஆமீனா பேரனை

வாங்கிக்கொண்டு சிறியதாய்த் தாலாட்டு பாடிக் கொஞ்சத் தொடங்கினாள். அப்பவும் அபுதாகீர் அழுகையை நிறுத்தவில்லை.

“என்னது புள்ள இப்படி பிடிவாதமா அழுகுது? ஏ... பர்வீனு உம் புள்ளைய புடிச்சுக்க.”

மருமகளை அவசரமாக அழைத்தாள்.

“கொஞ்ச பொறுங்க மாமி... துணி மாத்திட்டு வந்தர்றேன். அப்புறம் வர்றவங்க வந்துட்டாங்கனா துணி மாத்தாம இருக்கறதப் பார்த்து உங்க மகன் சத்தம் போடுவாரு.”

“சரி... சரியீ... சீக்கிரம் வா... எங்க ராசா இல்ல நீ... எங்க தங்க புள்ள இல்ல நீ... என்னாச்சு தங்கப்பாவுக்கு, எதுக்கு இப்படி அழற? பசிக்குதாடா கண்ணு? எங்க சிரி... சிரியீ...” என்று மீண்டும் கொஞ்சத் தொடங்கியும் அவன் அழுகையை நிறுத்தவில்லை.

“இதோ... எதிர்ல ஆந்தை கண்ண உருட்டிட்டு உட்கார்ந்து இருக்காளே ஒரு சிறுக்கி, அவகிட்ட மட்டும் போய் ஏத்தமா உட்கார்ந்துக்கற, எங்கிட்ட வந்தா மட்டும் தொண்டையத் தொறந்து ஓ...னு எதுக்கு அழுற...? என்ன பையனது?” என்று தன் சம்மந்தி ரகமத்தைப் பார்த்தும் பார்க்காதது போல் அருகே இருப்பவர்களின் காதுக்குக் கேளாத சத்தத்துடன் குழந்தையிடம் ரகசியம் பேசுவது போல் பேரனைக் கடிந்துகொண்டாள். அவன் கையை விட்டுப் போகாமல் இருக்கவும் அஸ்லாம் பாய் போல இன்னும் இறுக்கமாய் அரவணைத்தபடி பிடித்துக்கொண்டாள்.

குழந்தையைக் கொஞ்சுவது போலவும், மிரட்டுவது போலவும் அப்படி இப்படியுமாய் ஆட்டம் காட்டும் ஆமீனா முகத்தில் தெரியும் ஒரு அஷ்டகோணத்தைக் கண்டு சற்று தள்ளி அமர்ந்து கவனித்துக்கொண்டு இருந்த ரகமத்துக்குச் சிரிப்பு வந்தது. அதை வெளிகாட்டிக் கொள்ளாமல் அமைதியாக இருந்தாள். வீட்டுக்கு வருபவர்களை வரவேற்கக் காத்திருப்பது போல் தலைவாசல் பக்கத்தில் போடப்பட்டு இருந்த நெகிழி நாற்காலியில் அமர்ந்திருந்த தன் கணவன் சுல்தானிடம் நடக்கும் கூத்தைக் காணுமாறு கண் ஜாடையில் சேதி அனுப்பினாள். அவரும் எல்லாத்தையும் பார்த்துக்கொண்டு இருப்பதாகப் பதிலாகத் தலையாட்டினார். மனசு பொறுக்காமல் அழும் பேரன் அபுதாகீரை “இங்க வாடா தங்கம்” என்று அழைக்க நினைத்தாள். தேவை இல்லாமல் எதும் பேசி மொய்...மொய்யென்று சம்மந்தி ஆமீனா பிடித்துவிடுவாளோ என்ற அச்சம் அவளை வேடிக்கை மட்டுமே பார்க்கவைத்தது. அவள் எண்ணத்திற்கேற்றவாறு குழந்தை அபுதாகீரும் அடிக்கடி அவள் பக்கமாகத் திரும்பிப் பார்த்துத் தொடர்ந்து அழுதபடி இருந்தான்.

அது அபுதாகீரின் முதல் பிறந்த நாள். நஸீருக்குத் தன் மகனின் பிறந்த நாளை நல்லபடியாக கொண்டாட வேண்டுமென்று விரும்பி உறவுக்காரர்கள் அனைவரையும் அழைத்திருந்தான். இப்படி தடபுடலாகப் பேரனின் பிறந்த நாளை மகன் நஸீர் கொண்டாடுவானென்று ஆமீனா எதிர்பார்க்கவில்லை.

மூத்த பையன் நாசர் தன் பேச்சைக் கேட்டு அவனின் மகன் பிறந்த நாளை உறவுக்காரர்களை அழைத்து ஆடம்பரமாய்ச் செய்யாமல், நாகூர் தர்ஹாவுக்குப் போய் அன்னதானம் செய்தான். “நஸீருக்கு ஏன் இப்படி புத்தி போகுது? விருந்து தடபுடலாகச் செஞ்சம்னா நாலு பேரு வீட்டுக்கு வந்து போக நல்லா இருந்தாலும், கண்ணுப் பட்ட மாதிரில இருக்கும்? இது கூட தெரியாதா அவனுக்கு” என்று அவள் மனசுக்குள் மகன் மேல் சின்னதாய்க் கோபம் வந்தது. இதெல்லாம் பொண்டாட்டியும், மாமியாக்காரியும் செஞ்ச வேலையாத்தான் இருக்கும். நா பெத்த புள்ள இப்படியெல்லாம் ஆடமாட்டான் என்று மகன் மேலுள்ள நம்பிக்கையோடு யாரையோ திட்டுவது போல் மீண்டும் ரகமத்தை ஓரங்கண்ணால் பார்த்து மனசுக்குள் திட்டிக்கொண்டே இருந்தாள்.

நஸீருக்குக் கல்யாணம் முடிந்து மூன்று மாதம் ஆனவுடன் தனிக்குடித்தனம் வைத்துவிட்டாள்.

“சின்ன சிறுசுக தனியாக இருந்தால்

பொறுப்பும் வரும், நம்மளோட ஒண்ணாக இருந்தாங்கன்னா ஒரு பயத்தோட தயங்கித் தயங்கித்தான் எல்லா வேலையும் பார்ப்பாங்க. கூச்சமும் இருக்கும். பாவம் அதுகள எதுக்குக் கஷ்டப்படுத்தணும்? கூட்டுக் குடும்பங்கறது இந்தக் காலத்திற்கு ஒத்து வராது. நா எப்பவுமே வெளிப்படையானவ..” என்று மகனைத் தனியாகக் குடித்தனம் வைத்ததைப் பற்றி யார் கேட்டாலும் இப்படி கர்வமாய்ப் பேசிச் சமாளிப்பாள்.

பெரிய மகனையும் அப்படித்தான் அதே மூன்று மாதம் முடிந்த பின் தனியாக வைத்தாள். அந்த மூன்று மாதக் காலத்தைத் தன்னை ஒருவகையில் தயார்படுத்திக் கொள்ளவும், பொண்டாட்டி வந்தவுடன் தன் பேச்சை மகன்கள் மதிக்கிறார்களா? என்று அவர்களைச் சோதனை செய்ய அதொரு வழியென்பதையும் யாருக்கும் சொல்லமாட்டாள்.

தான் நினைத்ததிற்கு மாறாக எதும் நடந்தால் பாலில் விழுந்த விஷமாக அவள் பேச்சு இருக்கும். எதுவாக இருந்தாலும் தன் நிலைப்பாட்டைப் பாதிக்கக்கூடாத வகையில் பார்த்துக்கொள்வாள். யாரை யாரை எங்கே வைக்கணுமோ அங்கே வைத்து ஒரு நாடகத்தின் அதிபதியாக இருப்பது அவளின் அகந்தையில் ஊறியதாக இருந்தது. உடம்பில் பலம் உள்ளவரை சுதந்திரமாக வாழ்ந்துவிட வேண்டுமென்ற எண்ணமும் அவளுக்கு எப்போதுமுண்டு. அப்படியொண்ணும் ஒருத்தரின் ஒத்தாசையோடு வாழ வேண்டுமென்று கைகால்கள் விளங்காத ஊனமுமில்லை, வயசும் ஆகி விடவில்லை என்று நினைப்பாள். அம்பத்தி நாலு வயசு ஒரு வயசா? வாழ்க்கையில் எதிர்வரும் இன்னல்களுக்குத் தைரியம்தான் முக்கியம், வயசா பெரிசு? ஒரு முரட்டு எண்ணத்தை மனசுக்குள் தேக்கவைத்து, வீட்டில் எப்போதும் ஒரு அதிகாரத்தோடு ஆட்சியாளவே அவளுக்கு எல்லா விசியங்களிலும் பிடித்திருந்தது.

இப்படியொரு குணம் அவளுக்குப் பிறந்த இரண்டும் ஆண் குழந்தையாகப் பிறந்த பின்தான் வந்ததென்று அஸ்லாம் பாயிக்கும் புரிந்து இருந்தாலும் அவரும் அவளுக்குச் சளைத்தவர் இல்லையென்பதைக் காட்ட ஒரு பகட்டாகவே அவரின் பேச்சும், நடத்தையுமிருந்தது. மகன்கள் இருவரும் யாரையும் அண்டிப் பொழைக்காமல் அவர்களின் முயற்சியில் தனியாகத் தொழில் செய்து “சிட்களில்” ஈடுபட்டுச் சின்ன வயதில் ஒரு நல்ல பேரோடு வாழ்வதும் அவளுக்கு மனசு நிறைந்து கொம்பு முளைத்த விசியமாக இருந்தது.

“அபுதாகீர் பிறந்த நாளை வீட்டுக்குச் சொந்தக்காரங்களை அழைத்துச் சிறப்பாச் செய்யப் போறே”னு நஸீர் இந்த நான்கு நாட்களுக்கு முன் அவளிடம் வந்து சொன்னபோது...

“அதெல்லாம் ஒன்னும் வேண்டாம்டா, உங்க அண்ணே மாதிரி நாகூர் போய் அன்னதானம் பண்ணிரு. அதுதான் நல்லது” என்று அவள் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் நஸீர் தன் பேச்சைக் கேட்காமல் இப்படி தடபுடலாய்ச் செய்வது அவளுக்குத் துளியும் பிடிக்காத செயலாக இருந்தது. “இதெல்லாம் இங்கிலீஸ்க்காரன் செய்றது, நமக்கென்ன வந்தது” என்று ஒரு வெறுப்பில் அமர்ந்திருந்தாள்.

அக்கம் பக்கத்துக்காரர்களுடன் உறவுக்காரர்களும் வீட்டை நிறைக்கத் தொடங்கி இருந்தனர். வீடு ஒருவிதக் கலகலப்பாய் மாறியது. பத்து இருபது பேர் வந்தாலும் நிம்மதியாய் உட்காரக் கூடியளவு நஸீரின் வீடு பெரியதாக இருந்தது. முன்னறைச் சுவர்களில் வண்ண பலூன்களும், நீள ரிப்பன்களும் ஒட்டப்பட்டு அபுதாகீராகச் சிரித்துக்கொண்டு இருந்தன. வீட்டின் மேற்குப் பக்கமாய் அலங்கரிக்கப்பட்ட சிறு வடிவ நாற்காலி அவனுக்காகக் காத்திருந்தது. எதிர் எதிராய்ப் பெரிய மின் விளக்கு வெளிச்சம். வீட்டை நிறைந்த விருந்தாளிகளினால் புழுக்கம் பெருகத் தொடங்கியதும் மின் விசிறியை வேகமாய்ச் சுழலவிட்டார்கள்.

அபுதாகீர் நிறுத்தாத அழுகையுடனே எல்லாவற்றையும் ஆச்சரியமாகப் பார்த்தான். அவன் அணிந்திருந்த புதிய உடை அவன் அழுது வடியும் முகமாக மடிப்பெல்லாம்

கசங்கிப்போனது. சிணுங்கலாய்த் தொடர்ந்து அழுதுகொண்டு இருக்கும் அவனை அமைதிப்படுத்த முடியாமல் ஆமீனா கடுகடுனு முகத்தை வைக்கத் தொடங்கினாள். வீட்டுக்கு வந்தவர்கள் தன்னிடம் நலம் மட்டும் விசாரித்துவிட்டு ரகமத்திடம் நெருக்கமாய்ச் சிரித்துப் பேசிக்கொண்டு இருப்பது மேலும் அவளுக்கு எரிச்சலைத் தந்தது.

"யார் வீடு இது? எம் மகன் வீடு, எங்க பேர் சொல்லும் வாரிசின் பொறந்த நாள் இன்னைக்கு, எங்கிட்ட உட்கார்ந்து பேசாம அந்த சிறுக்கிக்கிட்ட அப்படியென்ன பேச்சு வேண்டிக் கெடக்கு?" என்று வீட்டுக்கு வந்தவர்கள் மேலும் தன் கோபத்தின் திசையைத் திருப்பினாலும், அதுவரை முக்காடு போட்ட சேலைத் தலைப்பால் கழுத்தில் அணிந்திருந்த நெக்லஸீம், ரெட்டைச் சர ஆரமும் வெளித் தெரியாமல் மறைத்து இருந்த ரகமத் இப்போது எல்லோர் பார்வை படும்படி சேலைத் தலைப்பைச் சற்றுத் தளர்த்தி இருந்ததை அப்போதுதான் கவனித்தாள்.

"அடிப்பாவி... புள்ளைக்கு ஒரு ரெண்டு பவுன் சேர்த்திப் போடுனு கேட்டப்ப... நொன்னைன்டு இப்போ வயசு புள்ளைக மாதிரி ஜொலிக்கற பாரு. அடியேய்... நீ பொம்பளப் புள்ளைய பெத்ததுக்கே இப்படி இருந்தினா.. நா ஆம்பளப் புள்ள பெத்தவ எப்படி இருக்கேன் பாரு" என்று மனசுக்குள் கறுவிக்கொண்டு அவளும் நாலு பேர் பார்வை தன் மேல் படும்படி தான் அணிந்திருந்த நகையெல்லாம் வெளியே தெரியும்படி சேலையின் வாட்டத்தைத் தளர்த்தினாள். கழுத்து நிறைய படிப்படியாக நகை தொங்கியது. காலில் வெள்ளிக் கொலுசுக்குப் பதில் தங்கக் கொலுசு அணிந்திருந்தாள்.

"அடியேய் பர்வீணு... இன்னுமா துணி மாத்தற? உம் புள்ள அழுகைய நிறுத்தற மாதிரி தெரியல. வந்து வாங்கிக்க.." என்று உள்ளறையில் இருக்கும் மருமகளைப் பார்த்து மீண்டும் சத்தம் கொடுத்தாள்.

"இதோ வந்துட்டேன் மாமி" என்று சத்தம் கொடுத்துக்கொண்டே வெளிவந்த பர்வீண் அபுதாகீரைக் கையில் வாங்கிக்கொண்டாள்.

"ஏன்டா... ராதிகிட்ட தானே இருக்க. அப்புறம் என்ன அழுக" என்று பொய்யாக ஒரு கோபத்தை அபுதாகீர் மேல் செலுத்தினாள்.

"ஆமாண்டி... புள்ளைய நல்லா வளர்த்தற. முகத்தெப் பார்த்துப் பார்த்து அழறான். என்னமோ நானு அவனுக்கு ஆகாதவளாட்டம் ஆயிட்டேன்."

"அப்படி இல்ல மாமியீ... நீங்க அடிக்கடி வந்து போனாத்தானே பேரனுக்கும் உங்க மேல பாசம் வரும். எப்பையோ ஒருநாள் வர்ரீங்க உடனே போயிறீங்க. அழாம என்ன செய்வான்" பேசிக்கொண்டே மகனைக் கொஞ்சத் தொடங்கினாள்.

பர்வீண் ஒரு மாதிரியாக வார்த்தைகளை ஏற்றத்தாழ்வுடன் சிரித்தபடி பேசியது ஆமீனாவுக்குக் குத்தினாலும், திருப்பிக் கோபத்தைக் காட்ட இது சமயமில்லை என்று தன்னை அமைதிப்படுத்திக்கொள்ள முயன்றாள். அவள் உள் மனசு அவளை விட்ட பாடு இல்லை.

"ஆமா... நா என்ன ஒருத்தர் மாதிரி புருசனை வீட்டு வேலைப் பார்க்க விட்டுட்டு "சீரியலா" உட்கார்ந்து பார்த்துட்டு இருக்கேன். இங்க வந்தா பெரியவனுக்கு என் வீட்டுக்கு வல்லையினு கோபம் வரும். அங்க போனா இவனுக்குக் கோபம் வருது. அதுதான் அக்காடானு வீட்லயே இருந்துக்கறேன். தனியா இருந்தாலும் அதுக்கு உண்டான வேலையும் வீட்ல இருக்குமெல்ல. ஒத... தொழுகவே நேரம் சரியாப் போயிடுது. நீ வேணாப் பாரு, எம் பேரன் நல்லா ஓடியாடி விளையாடும்போது எங்க கிட்டதான் அண்டி இருப்பான். அவன் எங்க வாரிசுதானே" என்று ஒருவாறாகச் சமாளித்துப் பர்வீணுக்குப் பதில் கொடுத்த பின்தான் அவள் மனசு சற்று ஆறியது.

எப்போதும் சுடிதார் அணிந்து பழகிய பர்வீணுக்குக் கல்லு வைத்த சேலையை அணிந்துகொண்டு அபுதாகீரைத் தூக்கி வைத்திருப்பது கஷ்டமாகி ஒரு தடுமாற்றமாகவே இருந்தாள். அதிகபடியான மின் விளக்கு வெளிச்சத்தில் கல்லு வைத்த சேலை மின்னினாலும் அந்தக் கனமான சேலை உடலிருந்து நழுவது போல ஒரு எண்ணம்

அவளைத் தொந்தரவு செய்துகொண்டு இருந்தது. ஒரு பக்கம் இடுப்பு பகுதி தெரிய சங்கடமாக உணர்ந்தாள். அபுதாகீரைச் சமாதானப்படுத்த தோள் மேல் மகனைப் போட்டுத் தட்டிக் கொடுத்தாள். பத்து கிலோ உள்ள அவன் பர்வீன் கட்டி இருந்த சேலையின் வழு...வழுப்பில் நழுவிக்கொண்டே இருந்தான்.

"இங்க கொண்டாடி" என்று மகளின் சிரமத்தைப் பார்த்துப் பேரனை வாங்கிக்கொண்டாள் ரகமத்.

அவன் ரகமத்திடம் அழாமல் சிரிக்கத் தொடங்கினான். அதற்கேற்றவாறு ரகமத்தும் அவனுடன் கிச்சு...கிச்சு மூட்டி விளையாண்டாள்.

ரகமத்திற்குத் தன் மகள் வழி பேரனைப் பார்க்காமல் இருக்க முடியாது. உள்ளூர் என்பதால் அடிக்கடி பேரனைப் பார்க்க வந்துவிடுவாள். என்ன மனக்கஷ்டமிருந்தாலும் பேரனைப் பார்த்தவுடன் அவளுக்கு எல்லாம் பறந்துவிடும்.

அபுதாகீர் அழாமல் ரகமத்திடம் சிரித்தபடி அவள் கொடுத்த சிறிய சாக்கலெட்டைச் சுவைக்கத் தொடங்கினான். அதைக் கண்டு ஆமீனாவுக்கு எரிச்சலாக இருந்தது. அதே போல் சுல்தான் அருகில் அமர்ந்திருந்த அஸ்லாம் பாயிக்கும் உள்ளுக்குள் எரிந்துகொண்டு இருந்தது. தன்னிடமும் மனைவிடமும் அமைதியாக இருக்காத பேரன் ரகமத்திடம் அடங்கி இருப்பதைப் பார்த்து அவருக்கும் மனசுக்குள் மாவு பிசைவது போல எண்ணங்களோடியது.

அஸ்லாம் பாயியும், சுல்தான் பாயியும் அருகருகே அமர்ந்திருந்தாலும் சம்மந்திகளுக்குள் பேசுவதற்கு எதுவும் இல்லாததாக இருந்தனர்.

பாயிக்குத் தான் பெற்ற இரு ஆண்பிள்ளைகளும் தனக்கு வாரிசாக இருப்பதை நினைத்து அவர் பேச்சிலும், நடத்தையிலும் ஒரு கர்வம் இருப்பதைக் கண்டு சுல்தான் பாய் எப்போதும் தூரமாகவே இருக்கப் பழகிக்கொண்டார். தனக்குப் பிறந்தது இரண்டு பெண் பிள்ளைகளென அவர் ஒரு வகையில் சந்தோசத்திலிருந்தாலும் அஸ்லாம் பாய் வீட்டில் சம்மந்தம் பண்ணுவதற்கு முன் ஆண் வாரிசைப் பற்றி எந்தக் கவலையும் வருத்தமும் இல்லாமல் இருந்தார். சம்மந்தம் பண்ணிய கொஞ்ச நாட்களிலேயே சிறுசிறு தவறுகளை அவர்கள் பெரியதாய் எடுத்துப் பேசும்போது கசப்பைத் தின்றது போல் வாய் மூடி நிற்கும் சமயங்களில் தனக்கொரு ஆண் வாரிசு இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்ற எண்ணம் வந்து, அவரைக் காயப்படுத்தியது. இப்படி பெண் பிள்ளைகளை வாழ வைப்பதற்காகக் கூனிக்குறுகி நிற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்காது என்று வருத்தப்பட்டு இருக்கிறார்.

ஏழாவது மாதம் மகள் பர்வீனுக்குச் சீமந்தம் செய்து அழைத்து வரச் சென்றபோது கொண்டுபோன பலகாரங்களை "இதென்ன பலகாரம்? ஒண்ணுமத்த வாங்கிட்டு வந்து இருக்காங்க" என்று சொல்வது போல ஒரு மாதிரியாகப் பார்த்துக்கொண்டே மதியம் ஒரு வேளைச் சோறோடு சாயங்காலம் வரை தேனீர் கூட தராமல் வழியனுப்பியது சுல்தான் பாயிக்கு இன்னும் நினைவில் நின்று வலி தந்துகொண்டு இருந்தது. வழக்கமாய்த் தேனீர் குடிக்கும் பழக்கத்தைக்கூட விட்டுவிடலாம் என்றான எண்ணம் அவரைத் தொந்தரவு செய்ததோடு, சூடாய்த் தேனீர் கேட்கும் நாக்கை அறுத்துப் போட்டுவிடலாம் என்று அப்படியொரு கோபம் அவருக்குள் எழுந்தது.

எதையும் மறக்க முடியாமல் பெண் பிள்ளை பெற்றால் எல்லாவற்றையும் பொறுத்துத்தான் போக வேண்டுமென்ற ஒரு குற்ற உணர்வு அவரைக் கடலின் ஆழமான பகுதியில் தள்ளுவது போல ஒரு மனக்கஷ்டம் அவரைப் பல நாள் தூங்கவிடாமல் செய்தது. அதிலிருந்து அஸ்லாம் பாயைக் காண நேரும்போதெல்லாம் தேங்கிய நீரில் கல்லை எறிந்தது போலவே நல விசாரிப்புகளை ஒரு சடங்காக வைத்துக்கொண்டார்.

"என்ன பாய் எதும் பேசாம உட்கார்ந்து இருக்கிறீங்க.." என்று அஸ்லாம் பாய் சுல்தான் பாயைப் பார்த்துப் பேச்சு கொடுத்தார்.

“ஒண்ணுமில்ல பாய். கொஞ்சம் யோசன.”

“என்ன யோசனையாக இருந்தாலும் கொஞ்சம் தள்ளி வெச்சுட்டு எங்ககூட கலகலனு பேசுங்க பாய். அப்பதானே நாம்ப ஒற்றுமையா இருக்கறதா வீட்டுக்கு வந்தவங்க நெனைப்பாங்க.”

“நம்ம ஒற்றுமைக்கு என்ன கொறைச்சலு பாய், பேசறவங்களுக்கு வாய்யா வலிக்கப் போவுது.”

சுல்தான் பாய் மேம்போக்காகச் சொன்னாலும் சுத்தி வளைச்சு ஏதோ குண்டு தூக்கிப்போடப் போகிறாரென்று அவர் மனசு சொல்லியது. தேன் கலந்த மாதிரி அவர் பேசுகிற பேச்சில் மயங்கிவிடாமல் கொஞ்சம் உசாரா இருக்கணும், இல்லையினா தேவையில்லாத வம்புல மாட்ட வேண்டியதுதான் என்றும் நினைத்துக்கொண்டார்.

அஸ்லாம் பாய் ஒரு பக்கம் சுல்தான் பாயோடு பேச்சுக் கொடுத்தாலும் கவனம் இன்னும் ரகமத் மடியில் அமைதியாய் அமர்ந்திருக்கும் பேரன் அபுதாகீர் மீது இருந்தது. பர்வீண் அவனுக்குப் புது ஹக்கீஸ், புது உடையும் அணிவித்துக்கொண்டு இருந்தாள். பாண்ஸ் பவுடர் அவன் முகத்திற்கு அடித்ததும் ஒரு புது பொலிவானான். அப்படியே அவனை ரகமத் உச்சி முகர்ந்து இரு கைகளால் தலையை நீவி திருஷ்டிப் போக தலையில் தன் எட்டு விரலையும் வைத்து மடக்கினாள். அடுப்பில் வரமிளகாய் போட்ட மாதிரி சடசடவெனச் சத்தம் வந்தது.

“ஏங்க பாய்... உங்க பேர் முன்னாடி ஏ.கே. ன்னு போடறீங்களே அது உங்க அத்தாவோட அப்துல் கரீம் பேரா?” என்றார் அஸ்லாம் பாய்.

“இல்லிங்க பாய்... ஏ ங்கறது எங்க அத்தாவோட அத்தா பேர் அப்துல் கரீம், கே ங்கறது எங்க அத்தா கலீல் அஹமது. இவுங்க பேரோட முதல் எழுத்துதான் அது. உங்களுக்கும் அப்படித்தானே வரும்..”

“ஆமாமா.. நானும் அப்படித்தான் போடறேன் பாய். இருந்தாலும் இந்தப் பொம்பளப் புள்ளைகளுக்குக் கடைசி வரைக்கும் பெத்தவங்களோட அந்த முதல் எழுத்து போடற பாக்கியம் இல்லாமப் போயிருது. அது ரொம்ப கஷ்டமான விசியம்தானே. ஆம்பள புள்ளைக மாதிரி தொடர்ந்து வாரிசு, வம்சம்னு காலம் காலமா சொல்லிக்கற மாதிரி பொம்பளப் புள்ளைகளுக்கு இல்லாமப் போறதும், பெத்தவங்களுக்கு அந்தக் கொடுப்பினை இல்லாம ஆகறதும் ஒரு வகையில இழப்புதானே பாய், என்ன... நா சொல்லறது சரிதானே..”

இப்படியொரு விசியத்தை அவர் பேசுவாரென்று எதிர்பார்க்காத சுல்தான் பாய் பொடிப்பொடியாய் ஆகிப்போனார். இருக்கற வலியில இப்படியுமொரு பேச்சா? ஒண்ணும் ஆகாது, பயப்படாதேனு சொல்லிக்கிட்டே ஊசி போடற மாதிரி இல்ல இருக்கு இவுரு பேச்சு. ஒருத்தன மட்டம் தட்டி, காயப்படுத்திப் பேசறதுல அப்படி என்ன இவுருக்கு சந்தோசம்? இப்படியெல்லாம் எகத்தாளமாப் பேசி நாளைக்கு என்னத்தெத் தூக்கிட்டுப் போகப் போறாரோ, பொண்டாட்டி புருசனுக்கும் இதே வேலையாப் போச்சு. எல்லாம் திருந்தாத ஜென்மா இருக்கு. நாய் வால நிமித்த முடியாத கதை இவுங்களுக்கு நல்லாவே ஒத்துப்போகுது. என்னமோ பேசித் தொலையட்டும், நாம வாயா மூடி இருந்தம்னா எந்தப் பிரச்சனையுமில்ல என்று எழுந்த கோபத்தை அடக்கிக்கொண்டு எதிர் கருத்து பேசாமல் பார்வையை மறுபக்கம் திருப்பிக்கொண்டார். அவர் இதயம் முன்பை விட வேகமாகத் துடித்தது.

இன்னைக்கு எந்த வகையில பொம்பளப் புள்ளைக குறைச்சல்? உலகத்துல நடக்கற நல்லது கெட்டதுக்கு எல்லாத்துக்கும் பொம்பளைக முன்னாடி நிற்கறாங்க. சொத்து வகையிலப் பார்த்தாலும் பொம்பளப் புள்ளைகளுக்கும் சரி சமமான பங்கு தர வேணும்னு சட்டம் கூட இருக்கு. இந்த விசியமெல்லாம் இவுருக்குத் தெரியுமா, தெரியாதா? எதுக்கு எல்லாத்தையும் பிரித்துப் பேசணும்? ரெண்டு காசு கையில சேர்ந்தாலே எல்லா எகத்தாளமும் வந்துடுது. வாரிசாம் வாரிசு... பெரிய வாரிசு. அந்த வாரிசே வந்து நாளைக்கு எல்லாம் புரிய வைக்கட்டும். நாம்ப எல்லாம் சொன்னம்னா எதுவும் புரியாது.

சுல்தான் பாய் ஒரு எரிச்சலோடு மனசுக்குள்ளயே பேசிக்கொண்டாலும் அவரின் கோபம் அடங்காமலிருந்தது.

“ஏ... ரகமத்து எவ்வளவு நேரம் தா நீயே பேரனை வெச்சு இருப்ப. அவன சம்மந்திகிட்ட கொடு” என்று தன் மனைவி ரகமத்தைப் பார்த்துச் சத்தம் கொடுத்தார். அலங்காரத்திற்காகக் கட்டப்பட்டு இருந்த ஒரு பலூன் மின் விளக்கின் சூடு தாங்காமல் அந்த நேரம் பார்த்துப் பட்டென்று வெடித்தது. ■

த.செல்வராஜ்,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
அரசு கலைக்கல்லூரி, உடுமலைப்பேட்டை.



சாதியச் சமூகத்தின் கோர முகம்

அம்பேத்கர் நூற்றாண்டையொட்டி இந்தியச் சமூக மரபில் பல மாற்றங்கள் நிகழத் தொடங்கின. தற்போது தலித்தியச் சிந்தனையானது தலித் இலக்கியம், தலித் அரசியல் மற்றும் தலித் சினிமா எனப் பல நிலைகளில் வளர்ந்துநிற்கிறது. தமிழ் இலக்கிய உலகின் முதல் தலித் தன் வரலாற்று நாவலாகப் பாமாவின் 'கருக்கு' உள்ளது. இந்நூலானது பலரால் ஆக்கபூர்வமான விவாதத்திற்கும் உரையாடலுக்கும் உள்ளானது. அதேபோல் கன்னட இலக்கிய உலகின் முதல் தலித் தன் வரலாற்று நாவலாக அரவிந்த மாளகத்தியின் 'கவர்ன்மெண்ட் பிராமணன்' விளங்குகிறது. இது அரவிந்த மாளகத்தியின் பால்ய காலம், பள்ளிக்கூடப் பருவம், கல்லூரிப் பருவம் எனப் பல காலங்களின் பதிவாக அமைந்திருக்கிறது.

சாதாரணமான பஞ்சாயத்துத் தேர்தலைக்கூட ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் தொடர்ந்து நடத்த முடியாத நிலைதான் நிரந்தரமாக இருக்கிறது. கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டவர்களின் வாயில் மலம் திணிப்பவர்களும், வளைத்துக் கொண்ட நிலத்தைத் திருப்பிக் கேட்டவர்களைச் சாணிப்பால் குடிக்க வைப்பவர்களும் கூட இந்த மண்ணில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். அவ்வகையில் மனிதாபிமானமற்ற இச்சமூகத்தில் நிலவும் மேல் கீழ் வேறுபாடுகளை இந்நூல் விமர்சனத்துக்கு உள்ளாக்குகிறது.

மாணாக்கர்களுக்குச் சமத்துவம் போதிக்க வேண்டிய ஆசிரியர் சாதி பார்த்து நடப்பது என்பது சமூகத்தில் ஆபத்தான ஒன்று. மற்ற சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் வகுப்பறையைப் பெருக்கிச் சுத்தம் செய்ய வேண்டும் என ஆசிரியர் கட்டளையிடுவதில்லை. ஆனால், தலித் மாணவர்களாகிய நான்கு பேருக்கு மட்டும் வகுப்பறையைப் பெருக்கிச் சுத்தம் செய்யும் வேலையை ஆசிரியர் தினமும் வழங்குகிறார். படித்தவன் சாதி பார்க்க மாட்டான் என்கிற கற்பிதத்தைக் கவர்ன்மெண்ட் பிராமணன் தகர்த்தெறிகிறது.

"எனக்கு சாதி பேதம்கறதெல்லாம் கிடையாது. என் வீட்டுக்கு நெறய பேரு அரிஜனங்க வராங்க போறாங்க. டீ குடிப்பாங்க, சாப்பிடுவாங்க" என்று கூறும் போலி முற்போக்குகளை இந்நூல் அடையாளம் காட்டுகிறது.

சாதியின் காரணமாகக் காலங்காலமாகப் பிற சமூகத்தால் ஒடுக்குதலுக்கும் விலக்குதலுக்கும் உள்ளான ஒரு சமூகத்தை மேம்படுத்துவதற்கு இடஒதுக்கீடும், கல்வி உதவித்தொகையும் உதவி செய்கின்றன. ஆனால், அரசாங்க உதவி கிடைப்பதால் மாளகத்தியை நண்பர்கள் 'கவர்மெண்ட் பிராமணன்' என்று அழைக்கிற சூழல் சாதியச் சமூகத்தின் சமூக நீதி பற்றிய புரிதலற்ற தன்மையை வெளிக்காட்டுகிறது.

எதிர்பாராத விதமாக ஒரு தலித் சாப்பிடும்போது மேல்சாதிக்காரர்களின் பாத்திரத்தைத் தொட்டுவிட நேர்ந்தால் அப்பாத்திரத்தைப் பசு மூத்திரத்தில் அமுத்தி எடுத்த பிறகுதான் வீட்டின் மற்ற பாத்திரங்களோடு சேர்த்துக் கொள்வார்களாம். ஒரு ஒடுக்கப்பட்ட மனிதனைக் காட்டிலும் பசுவின் மூத்திரம் சாதியவாதிகளுக்கு உயர்ந்ததாகி விட்டிருக்கிறது.

குறைந்தபட்சம் நீ லிங்காயத்தாகக் கூட பிறந்திருக்கக் கூடாதா? எனத் தனது ஆறு வருடக் காதலி மாளகத்தியைப் பார்த்துக் கேட்கும் சூழல் உணர்வுகளால் நிரம்பி வழிந்தாலும் அது சாதிய சமூகத்தின் தாக்கத்தையே வெளிப்படுத்துகிறது.

ஆவணி மாதத்தில் மஞ்சள் நீர் விழா நடக்காமல் போய்விட்டால் ஊரில் மழை பெய்யாது, ஊர் அம்மை வந்து நாசமாகும், முனியின் தொல்லை அதிகரிக்கும் எனக் கூறித் தாழ்த்தப்பட்ட பெண்களைச் சடங்கு என்னும் பேரில் பாலியல் வக்கிரத்தில் சிக்கவைத்து ரசிக்கிற சமூகத்தின் மீது இந்நூல் காறித் துப்புகிறது.

ஒரு தலித் வீட்டு மாடுகளின் மீது சூத்திர சாதிகளின் வீட்டுக் காளைகளை நேரடியாகச் சேர விடாது சாரத்தை மட்டும் பிடித்துக் கொடுத்தலும் தலித் வீட்டு நாய் சூத்திர சாதியினரின் வீட்டு நாயோடு சேருவதைக் கண்டு அந்நாயின் உறுப்பை அறுத்துக் கொன்ற நிலையும் சூத்திர சாதியினரின் சாதித் திமிரையும் கேவலமான மனநிலையையும் காட்டி நிற்கின்றன.

நம் மூத்த தலைமுறையினர் செய்த மனிதாபிமானமற்ற செயல்களை இந்நூல் விவரித்து நிற்கிறது. அதேவேளையில், பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வரும் தலைமுறைக் கோபத்தை இன்றைய தலைமுறையின் சிலர் மீது மட்டும் சுமத்தி வெறுப்பைக் கக்குவது என்பது எவ்வளவு தூரத்திற்குச் சரி என்கிற கருத்தையும் பதிவு செய்கிறது.

மாளகத்தி வசித்த சேரியில் அவர்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் மட்டுமே பள்ளிப் படிப்பைத் தாண்டிப் படித்ததால் அச்சேரியை "மாளகத்திச் சேரி" என்று அழைத்ததும், மாளகத்தியைப் பார்த்து இதர மாணவர்களும் பின்தொடர்ந்து படிக்கத் தொடங்கியதும் மிக முக்கியமான மாற்றமாகும். கல்வியின் மூலம் மாளகத்தி தனக்கு நடந்த நிகழ்வுகளைப் பல நிலைகளில் விளக்கிக் காட்டியிருக்கிறார். இன்னும் எழுதத் தெரியாத மக்கள் எழுதத் தொடங்கினால் நம் முன்னோர்களின் கேவலமான முகமும், சமகால மக்களின் இழி மனநிலையும் வெளிப்படும். மொத்தத்தில் 'கவர்ன்மெண்ட் பிராமணன்' என்னும் நூல் சாதியச் சமூகத்தின் கோர முகத்தை வெளிக்காட்டி நிற்கிறது.

● கலிங்கப்பட்டி க.கருப்பசாமி



மனமாற்றங்களை நோக்கி..

சமீபத்தில் டுவல் இயர்ஸ் எ ஸ்லேவ் என்ற திரைப்படத்தை நண்பர்களோடு காண நேர்ந்தது. திரைப்படத்திற்குப் பின் பெரும்விவாதமும் கிளர்ந்தது. தமிழர்களின் புலம்பெயர்வு பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்த நாட்கள் அவை. கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியைக் கலைத்துவிட்டு பிரிட்டிஷ் அரசின் நேரடி ஆட்சியை இந்தியாவில் நடைமுறைப் படுத்துகிறார்கள். அதை ஒட்டிக் கொண்டுவரப்பட்ட இரயத்துவாரிச் சட்டம் நீர்ப்பாசனத்தில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவருகிறது. இதனால் புதிய நிலக்கிழார்கள் உருவாகினார்கள். சிறு விவசாயிகள் கூலிகளாக மாறினார்கள். கூலித் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக மாற்றப்பட்டார்கள். பஞ்சம் பட்டினி ஆகியவற்றின் காரணமாக பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தின் கீழுள்ள நாடுகளான பர்மா, மொரிசியசு, மலேசியா, இலங்கை போன்ற பல்வேறு நாடுகளுக்குக் கொத்தடிமைகளாக இலட்சக்கணக்கான மக்கள் கப்பல்களில் நடைபயணங்களில் கொண்டு செல்லப்பட்டுக் கரும்புக்காடுகளிலும் ரப்பர், தேயிலைத் தோட்டங்களிலும் குவிக்கப்பட்டார்கள். தீராத நோய்வாய்ப்பட்டாலே ஒழிய, அங்கிருந்து வெளியேற வாய்ப்பே இல்லை.

அடிமைக்கூலிகளாக ஒருபுறம் இழுத்துச்செல்லப்பட்டாலும் மறுபுறம் வெள்ளையர்களுக்கும் கங்காணிகளுக்கும் பாலியல் நுகர்வுக்கான பாலியல் அடிமைகளாகப் பெண்கள் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார்கள் என்றும் அறிகிறோம். அடிமைகளாகச் சென்ற பெண்கள் எல்லோருமே வெள்ளையர்களுக்கோ கங்காணிகளுக்கோ அவர்களின் பாலியல் நுகர்வுக்குத் தன்னை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அது சாதாரணமானது என்கிற ஒரு மனநிலையை எல்லோரிடத்திலுமே கங்காணிகள் பதியவைத்திருந்தனர். (தமிழர்களின் அடிமை வாழ்வை அறிந்துகொள்ள படைப்புகளில் பாரதியின் கரும்புத் தோட்டத்திலே... பாடலையும், புதுமைப்பித்தனின் துன்பக்கேணி சிறுகதையையும் வாசிக்க... கட்டுரைகளில் ஆ.சிவசுப்பிரமணியனின் அடிமைமுறை குறித்த கட்டுரைகளை, நூல்களை வாசிக்க..) தமிழக மக்களில் இப்படி என்றால்

உலகமெங்கும் பிறப்பாலேயே அடிமைகளாக நடத்தப்பட்டவர்கள் கருப்பினத்தவர்கள். தென்னாப்பிரிக்கக் கருப்பின மக்களை அடிமைகளாக வைத்துக்கொள்ளலாம் எனச் சட்டமே வைத்துக்கொள்ளுமளவிற்கு நாடுகளும் வெள்ளையர்களின் ஆதிக்கமும் நிறைந்திருந்த காலகட்டத்தை நாம் தரிசிக்கிறோம்.

டுவல் இயர்ஸ் எ ஸ்லேவ் என்ற திரைப்படத்தில் உள்ள சில காட்சிகளை இனி பேசுவோம்...

திரைப்படத்தின் இறுதியில் ஒரு காட்சி வருகிறது. ஊரின் செரிப் கதையின் நாயகரின் முதலாளியின் வீட்டிற்குள் நுழைகிறார் அத்துமீறியே... முதலாளியிடம் பேசாமல் நேரடியாக அடிமையாக நடத்தப்படும் நாயகனின் பேரைச் சொல்லி அழைக்கிறார். அப்போது வரை வேறொரு பெயரில் அடையாளம் மாற்றப்பட்டு அடிமையாக இருந்த நாயகனின் கண்களில் எப்படியாவது இங்கிருந்து மீண்டுவிடுவோம் என்ற நம்பிக்கை பிறக்கிறது. உண்மையிலேயே தரப்பட்ட சாட்சியங்களைக் குறுக்குவிசாரணை செய்து நீங்கள் அடிமையில்லை வாருங்கள் என நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்கிறார் செரிப். அப்போது முதலாளி... `இரு, மாலைக்குள் உன்னை இங்கே இழுத்துவந்து கசையடி தருகிறேன்` என்பதாக நாயகனை மிரட்டிக்கொண்டே அத்துமீறி நுழைந்த செரிப்பையும் `எப்படி என் இடத்திற்குள் நுழைந்தீர்கள், யார் உங்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்தது?` எனக் கேட்கிறபோது பல முரண்பாடுகளைக் கொண்டதாகச் சட்டம் மெல்லப் புரிபடுகிறது. அப்போதுதான் படத்தின் முழுமைக்குமான அர்த்தமும் முடிச்சுகளை அவிழ்த்துக்கொண்டு வெளியேறுகிறது.

பழைய இங்கிலாந்தில் அடிமைகளை வைத்துக்கொள்வதற்கான உரிமை மற்ற மனிதர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அடிமை அல்லாத ஒருவரின் அடையாளங்களை மாற்றி அடிமையாக நடத்தினால் உரிய ஆதாரங்களின் மூலம் அடிமையை விடுதலை செய்யவும் சட்டம் வாய்ப்பளித்திருக்கிறது. அதேவேளையில் எந்த ஒரு அடிமையும் நேரடியாக நீதியின் கரங்களுக்குள் தனக்கான நீதியைக் கேட்கவோ தனது வேண்டுகோளை முன்வைக்கவோகூட அந்தக் காலத்திய சட்டங்கள் அவர்களுக்கு உரிமைகளை வழங்கவில்லை. அடிமைகள் நீதிமன்றங்களை நாடமுடியாது. அடிமைகள் ஆண்டவனாகிய பிரபுக்களுக்குக் கடமைப்பட்டிருக்கவே வேண்டும். அவர்களுக்குத் தெரியாமல் எந்த ஒரு செயலையும் மேற்கொள்ள முடியாது என்ற அன்றைய சூழலைத் திரைப்படத்தில் பல்வேறு இடங்களிலும் விவரித்திருக்கிறார்கள். அதே வேளையில் ஒரு வெள்ளையரால் மட்டுமே கருப்பினத்தவருக்கு விடுதலை வழங்க முடியும் என்ற அன்றைய சூழலையும் படத்தில் காண்கிறோம்.

ஆனால், உலகின் சில பகுதிகளில் கருப்பினத்தவர்கள் அடிமைகளாக நடத்தப்பட்ட அதே சூழலில் அதே மக்கள் மற்றொரு பகுதியில் உலகெங்கிலும் தனித்துச் சுதந்திரமாகப் பயணம் செய்யவும் சம அந்தஸ்தோடு சமூகத்தில் வாழவும் பல்வேறு நாடுகள் அவர்களுக்கு வாய்ப்புகளையும் மனிதராக மதிக்கும் நற்சூழலையும் வழங்கிக்கொண்டுதான் இருந்திருக்கின்றன என்பதை ஆரம்பத்தில் நாயகனின் வாழ்வைக் காட்டுகிறபோது விளக்கியிருப்பார்கள்.

இங்கு கருப்பினத்தவர்கள் அடிமையாக நடத்தப்பட்டதற்கும் சுதந்திரமாக வாழ்ந்ததற்கும் இடையில் பல்வேறு சிக்கல்களைக் காணுகிறோம். அவற்றை ஆராய்வதும் அவசியமாகிறது. அது உலகின் ஒரு காலகட்டத்திய ஆதிக்கச்சூழலின் இருவேறு முகங்களை ஒருசேர பிரதிபலிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

திரைப்படத்தில் முதலாளியின் வீட்டில் வேலைக்கு வரும் நியூ இங்கிலாந்தின் வெள்ளை இனத்தைச் சேர்ந்த ஒரு மனிதன் அடிமைமுறைக்கு எதிராகப் பேசுகிறான். `மனிதர்கள் எல்லோரும் ஒரேமாதிரியானவர்களே. அவர்களை மனிதர்களாகப் பாருங்கள்.

ஒரு விலங்கைப்போல் நடத்தாதீர்கள்... இறைவனிடத்தில் உனக்கு எப்போதும் மன்னிப்பே கிடையாது` என்கிறார். அதை முதலாளி எதிர்கொண்டு பேசும்போது `இப்படிப் பேச இது நியூ இங்கிலாந்தும் அல்ல நான் நீயும் அல்ல. இங்கு இப்படித்தான்` என்கிறார். பழைமைவாதமும் பகுத்தறிவும், ஆதிக்கமும் அதனை எதிர்க்கும் கலகக்குரலும் ஒரு புள்ளியில் சந்திக்கும் இடம். இருவேறு நூற்றாண்டுகளின் சந்திப்பு. அவற்றின் பிரதிநிதியாக இருவேறு மனிதர்கள்.

இங்கு, விடுதலை என்பது கொடுத்துப் பெறுவதற்குரியது அல்ல. அது எல்லோரிடத்திலும் இருப்பது. உண்மையில் உழைப்புச் சுரண்டலுக்கு உட்பட்டவர்கள் அடிமைகளில்லை. ஆதிக்க மன நிலைக்கே வெள்ளையர்கள் அடிமைப்பட்டிருக்கிறார்கள். விடுதலை பெறவேண்டியது அவர்களே என்பதை மனதுக்குள் அந்த நியூ இங்கிலாந்து மனிதன் உருவாக்குகிறான். அவனுடைய உரையாடலும் அதை ஒட்டியே அமைகிறது.

அடிமைகளை எப்படி நடத்த வேண்டும் என்பதில் ஆதிக்க மனோபாவத்தின் சிந்தனை எங்கும் ஒரே மாதிரியானதுதான். நம்பிக்கை. மக்களிடம் உள்ள நம்பிக்கைகளை ஆயுதமாக்குகிறார்கள். இறை நம்பிக்கையை உடையவர்களிடத்தில் தங்களை இறைவனாகவும், அல்லது இறைவனுக்கு மிக நெருக்கமானவர்களாகவுமே அறிமுகப்படுத்திக்கொள்கிறார்கள். இறை நம்பிக்கையைக் கொண்டே அடிமைமுறை எனும் பெரும்பொதி உருவாக்கப்பட்டு அது நம்பிக்கை கொண்டவர்களின் முதுகில் ஏற்றப்பட்டிருக்கின்றன. விழுந்த கூன்கள் எப்போதும் நிமிர்வதாக இல்லை.

பைபிளை வாசிக்கிறார்கள். எஜமான்கள் அடிமைகள் அனைவரையும் ஒரே இடத்தில் அமர்த்திக்கொண்டு. எஜமான் போதிக்கிறான். `ஆண்டவனுக்கு விசுவாசிகளாக இருக்க வேண்டும். தம்மை ஒப்புக்கொடுத்துக் கடமையாற்ற வேண்டும். இறைவனின் விருப்பப்படியே அடிமையானவன் செயல்படவேண்டும். அவனே பாபமற்றவனாகிறான். இங்கு எஜமானர்களாகிய நாங்களே அடிமைகளாகிய உங்களுக்குக் கடவுள்... எங்களிடம் எப்படி நீங்கள் நடந்துகொள்ள வேண்டும் எனப் புனித நூல்கள் குறிப்பிடுகின்றன. பாருங்கள்` என முடிக்கிறான்.

முதலாளிகளுக்கு அடிமைகள் அல்லது இன்றைய பணியாட்களைக் கூட எடுத்துக்கொள்ளுங்கள். பொறுப்புணர்ச்சி மிக்கவர்களாக மாறிவிட்டால் புத்தி வேலைசெய்வதில்லை இல்லையா?! மாடுகள் போல உழைக்கத்தொடங்கிவிடுகிறோம். ஆனால் அதற்கான பலன் நம்மை அடைகிறதா அல்லது உங்களைக் கடமை உணர்ச்சிக்கும் பொறுப்புணர்ச்சிக்கும் உட்படுத்திய உங்கள் அதிகாரிகள் அடையத்தான் அல்லது நீங்கள் அனுபவிக்கத்தான் அனுமதிக்கிறார்களா? அடிமைகளின் மத்தியில் விடுதலை குறித்த சுயகுரல் எழாமல் இருக்க முதலாளிகள் கொண்ட ஒற்றை நம்பிக்கை பொறுப்புணர்ச்சி கொண்டிருக்கச் செய்தல்.

அதே போல, படத்தில் நாயகன் ஒரு இசைக்கலைஞன். தான் வைத்திருக்கும் வயலினை ஒருகட்டத்தில் போட்டு உடைக்கிறான். முன்பு ஒரு காட்சியில் `நான் அழப்போவதில்லை. அழுதால் என் உடல், மனநிலை யாவும் பலகீனமாகும். நான் ஒருநாள் விடுதலை அடைவேன். அன்று என் வாழ்நாளை என் வாழ்க்கையை நான் எதிர்கொள்ள நான் தயாராக இருக்க வேண்டும். ஒருபோதும் என்னை நான் பலகீனமாக்கிக்

கொள்ளப்போவதில்லை` என்பான். ஆனால் பின்னொரு காட்சியில் ஒரு அடிமையின் இறப்பு பெரிதாக யாரையும் பாதிக்காமல் போனாலும் அனைவரும் கூடி புதைக்கப்பட்ட இடத்தில் பாடலொன்றைப் பாடுகிறார்கள். அப்போது நாயகன் அழுகிறான்.

இவற்றைத் தொடர்புபடுத்திப் பார்க்கையில், வயலினை உடைக்கும் காரணம் புலப்படும். உணர்ச்சி வசப்படப் போவதில்லை என்று உறுதியாக நின்றவனை இசைதான் உணர்ச்சிவசப்படுத்திக்கொண்டே இருக்கிறது, இருந்திருக்கிறது என்பதை நாயகனே உணர்ந்துகொள்ளும் வேளையில்தான் உடைபடுகிறது அந்த வயலின்.

பைபிளை ஒரு புனித நூலாக நீங்கள் பார்த்தால் பொதுவில் அது ஒரு சட்ட நூல்போலப் புலப்படும். அடிமைகளின் வாழ்விலும் அதன் பாத்திரம் அதுவே. அதேவேளையில் அதனை ஒரு இலக்கியமாக நீங்கள் பார்த்தீர்கள் என்றால் அது அந்தக் காலகட்டத்தின் வாழ்வியலை, மக்களின் சிந்தனையை, சூழலை வெளிப்படுத்தும் நூலாகத் தோன்றும். படம் நமக்கு அத்தகைய கருத்தையே கடத்த முயற்சிப்பதாக நானுணர்கிறேன்.

பெண் அடிமைகள் பற்றிய காட்சி.. கதை அமைப்புகளில் அடிமைமுறை ஒழிப்பில் பெண்களின் வாழ்வியலை மற்றுமொரு பார்வையிலும் சேர்த்து அணுக வேண்டியிருக்கிறது என்பதைச் சொல்லாமல் சொல்லிவிட்டுச் செல்கிறது.

அடிமையாக நடத்தப்படும் பெண் ஆணைவிட அதிகமாக உழைப்புச் சுரண்டலுக்கு உட்படுத்தப்படுகிறாள். பிரபு அல்லது முதலாளியின் விருப்பத்திற்கு ஏற்ப நடந்துகொண்டால் அவளுக்குப் பதிலாக அவளின் வேலைகளையும் சேர்த்துப் பார்க்க பல பெண் அடிமைகள் கிடைத்துவிடுவார்கள். இப்படியான வாழ்வை ஏற்ற ஒரு அடிமைப் பெண்ணும் படத்தில் வருகிறாள். அவளிடமிருந்து வரும் மற்றொரு இளம்பெண் இப்படியான தன்னைப் பாலியல் உடைமைப் பொருளாகக் கருதும் மனநிலைக்கு எதிரானவளாகக் காட்டிக்கொள்கிறாள். `நான் அதிகமாக வேலை செய்கிறேன். பிரபுவுக்குப் பொறுப்புணர்ச்சி, கடமையுணர்ச்சி மிக்க அடிமையாக விசுவாசியாக இருக்கிறேன். அதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அதை ஏற்றுக்கொண்டு வாழ்ந்துவிட என்னால் முடியும். ஆனால், என்னைப் பாலியல் நுகர்வுக்காகப் பயன்படுத்துவதை என்னால் ஏற்கமுடியாது` என்பது போல நிற்கும் அவளின் பின், சமதர்மம், மனிதம் எனக் கிளம்பும் யாவற்றின் பின்பும் பெண்ணின் சமூகச் சிக்கல்கள் எப்போதும் வேறானவை; அவை பற்றி நாம் எப்போதும் சிந்தித்துக்கொண்டே இருக்கவேண்டும் என்கிற, பெரும் திரைமறைவில் சிக்கியிருந்த சிந்தனை வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அடிமை வாழ்வின் கொடுமைகள், இனவெறிக் கொடுமை, ஏமாற்றுத்தனம், உழைப்புச் சுரண்டல், அடிஉதை, இறப்பு, பிறப்பு, வலி, உணர்ச்சி, உணர்வு, பாசம், பற்று, நம்பிக்கை, சடங்கு, பொறுப்புணர்ச்சி, கடமை உணர்ச்சி, பெண்ணியம் எனப் பல செய்திகளை ஒட்டுமொத்தமாகக் கடத்திவிட்டுச் சென்றாலும் அழுத்தமான இரண்டு விடயங்கள் எல்லாவற்றுக்குமான தீர்வுகளைத் தருமிடத்தில் நின்றுகொண்டிருக்கின்றன.

ஒன்று உணர்வு முக்கியம் உணர்ச்சி அவசியமற்றது. மனநிலை மாற்றம்தான் சமூக மாற்றமாக, வரலாறாக, வரலாற்றின் பெரும் மாறுதல், புரட்சி என வெற்றியின் அத்தனை பேருக்கும் விளக்கமாக அமைகிறது என்பதை அறுதியிட்டுச் செல்கிறது. இது இரண்டு.

மனிதன் மாறுவதைக்கூட மனநிலை மாற்றம் என்றுதான் அழைக்க வேண்டும். அதேவேளையில் ஒரு பெரும் சமூக மாற்றத்தைக் குறிப்பிட ஒரு பெரும்பாதி மக்களின் மனநிலை மாற்றம் அடைந்துள்ளது என்றே குறிப்பிடவேண்டும் என்பதோடு இப்போதும் அடிமை மனோநிலையிலிருந்து வெளிவராத நம்மை, நாமே தரிசிக்க வைக்க முயற்சிக்கிறது. இன்னும் மன மாற்றங்களை நோக்கி நகரட்டும் இம்மனிதக்கூட்டம். ■

பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள்

● ஜின்னா அஸ்மி

கண்களை மூடிக்கொண்டு
என்ன செய்கிறாய்
என்றபடியே வெளியே வந்தான்
அவன்

எனக்குப் பிடித்த இசையை
ரசித்துக்கொண்டிருக்கிறேன்
என்றேன்

இசைக்கு மனிதர்களை
பிடிக்காது தெரியுமா
என்றான்

ஏன் பிடிக்காது?

இசையை உருவாக்குவதே
மனிதன்தானே என்றேன்

இதயத்துடிப்பில் தொடங்கி
இயற்கையிலிருந்து வரும்
எந்த ஒரு இசையையும்
மனிதன் உருவாக்கியதில்லையே
என்றான்

மூங்கிலை
இசைக்கும் புல்லாங்குழல் ஆக்கியது
நாங்கள்தானே என்றேன்

வண்டு துளையிட
உட்சென்ற காற்று
இசையானது
அதைத்தான்

புல்லாங்குழல் வழியே
பயன்படுத்திக்கொள்கிறீர்கள்
அவ்வளவுதான்.

காற்றைக் கையாளத்
தெரியவில்லை என்றால்
நீங்கள் எப்படி
புல்லாங்குழலை இசைப்பீர்கள்?
என்றான்

இசையில் புதுமைகளை
கண்டுபிடித்தது முதல்
கற்றுக் கொடுப்பது வரை
எல்லாம் மனிதனாலேயே
சாத்தியமானது என்றேன்

கண்டுபிடித்தோம் என்பதும்
கற்றுக்கொடுத்தோம் என்பதும் தவறு
கண்டுகொண்டோம் என்பதும்
கற்றுக்கொண்டோம் என்பதுமே சரி என்றான்
அவன் மேலும் சொன்னான்
நீங்கள்தான் அன்று
இசைக்கு மொழியே இல்லை எனச் சொல்லிவிட்டு
இன்று
மதத்தையும் நிறத்தையும்
அதன்மேல் பூசுகிறீர்கள்.
இசைக்குக் கடவுளைப் பிடிக்கும்
ஆனால் கடவுளுக்கு எந்த இசையும்
பிடிக்காது என்பதை அறிவாயா
என்று சொல்லிவிட்டு மறைந்தான்.

– அவன் இன்னும் சொல்வான் ■

படைப்பு

சமூகத்தின் இணைப்பு

அம்மையார் ஹைறுநூன்பீவி நினைவு

சிறுகதைப் போட்டி

முடிவுகள் விரைவில்

நடுவர்

எழுத்தாளர் நாஞ்சில் நாடன்

(சாகித்திய அகாதமி விருதாளர்)